அரும்பொருட்காட்சியகத் திறப்பு விழா மலர்.

1979

தருமபுரி மாவட்டம்

பதிவு எண்: 51/77.

வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்போம்.

அரும் பொருட் காட்சியகத் திறப்பு விழா மலர்

1979

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை

[பதிவெண் : 51/77]

பாப்பாரப்பட்டி.

தோற்றம் : 7-10-1973

மலருக்கு மணம் பரப்பியோர்

1. தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை அறிக்கை :
   புலவர் மு. தேவராயன், தலைவர், வரலாற்றுப் பேரவை
2 பாலவாடி நடுகற்கள் : புலவர் மு. மாணிக்கம், பி. லிட்.,
3. இருளப்பட்டி நடுகற்கள் :
   டாக்டர் இரா. நாகசாமி, M.A., இயக்குனர், தமிழக அரசு தொல்பொருள் ஆ. துறை
4. சில வரலாற்றுச் சிதைவுகள் : இரா. துரைசாமி
5. பலிக்கொடை புரிந்தோர் : தேவ. பேரின்பன், B. Sc.,
6. தென்கரைக் கோட்டை : சுதா. ஆதித்தன்
7. சரித்திரம் கூறும் பாராமகால் : P. துரைசாமி
8. வளர்க தகடூர் : புலவர் வை. முருகேசன், M. A.,
9. அவன் புகழ் ஓங்கி நிற்கும் : புலவர் அ. கண்ணையா, M. A.,
10 தகடூர் செப்புப் பட்டயங்கள் : புலவர் செ. கோவிந்தராசு, M. A.,
11. தலை நிமிர்ந்து நாமும் நிற்போம் : கவிஞர் த. கோபால்
12. செங்குட்டுவனின் எடை : புலவர் பா. அன்பரசு, M. A.,
13. மாமூலனார் காட்டும் தகடூர் நாடு : என். நாராயண ராவ்,
14 அருங்காட்சி : புலவர் அ. நா. இராமானுசம், B. A.,
15. செகதேவி பாளையம் : சுப்பிரமணியன்
16. அரிமிதைய மாவலி வாணராயர் : பெ. பெருமாள்
17. மேஜர் குளோவர் : திருமதி. சாந்தா துரைசாமி
18 அதிகமான் மூவர் : கா. இராமச்சந்திரன், B. Sc.,
19. அதிகன் காத்த தமிழ் : பாவலர் கருமலைத் தமிழாழன்
20. வரலாற்றுச் சொந்தம் கொண்டாடும் பூமி :
    பி. சுப்பையா, மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர், செ. ம. தொடர்பு, தர்மபுரி
21. தகடூர் மாவட்ட நடுகல் சொல்லும் நற்செய்தி: புலவர் இரா. வேட்ராயன், பி.லிட்
22. விளங்கா மொழி விடுகாதழகிய பெருமாள் : புலவர் மா. கணேசன்
23. வரலாற்றுப் பேரவை வளர்க, வாழ்க :
    புலவர் கா. சி. கிருட்டிணன், M. A., B. T. செயலர், தர்மபுரி தமிழ்ச் சங்கம்

மேதகு. பிரபுதாசு பட்வாரி

தமிழக ஆளுநர்.



மாண்புமிகு M. G. இராமச்சந்திரன்,

தமிழக முதல்வர்.

மாண்புமிகு. செ. அரங்கநாயகம்

கல்வி அமைச்சர், தமிழ் நாடரசு.

மாண்புமிகு. இராம. வீரப்பன்,

அறநிலையத்துறை அமைச்சர், தமிழ் நாடரசு.



திருமிகு. S. சிவசுப்பிரமணியம், I. A. S.,

மாவட்ட ஆட்சித் தலைவர்

&

தலைவர், அருங்பொருட்காட்சியக அமைப்புக் குழு.

P. Ramachandran,
MINISTER FOR ENERGY
INDIA
(OORJA MANTRI BHARAT)



NEW DELHI
March 31, 1979.

I am happy to know that the Minister of Tourism and Developement of Tamil Nadu is going to inaugurate a Museum of Collections of Archaeological interest at Dharmapuri on 10th April, 1979. and on that occasion you are proposing to bring out a Souvenir.

I send my good wishes to the organisers and wish the function every success.

P. Ramachandran

வாழ்த்து

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவையின் அரும்
பொருட்காட்சியகத் திறப்பு விழாவிற்கு
எனது இதயங் கனிந்த
நல்வாழ்த்துக்கள் !

எம். மாணிக்கவேல்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
தருமபுரி.

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவையின்
அரும் பொருட்காட்சியக ஆக்கப்பணிக்கு
என் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

R. ஜகனுதன், B. A.,
மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி,
தருமபுரி.

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, (செயற் குழு) பாப்பாரப்பட்டி. பதிவு எண் 51/77

அமர்ந்திருப்போர் : (இ. வ.) திருவாளர்கள் புலவர் இரா. வேட்ராயன், பி. லிட். பெ. பெருமாள் புலவர் மு. மாணிக்கம், பி. லிட். புலவர் மு. தேவராயன், புலவர் செ. கோவிந்தராசு, பி. லிட்., ப. துரைசாமி, புலவர் இரா. துரைசாமி

நிற்போர் : (இ. வ.) இரா. காளியப்பன், N. நாராயணராவ், புலவர் அ. ந. இராமானுசம் B. A., கோவி. அரங்கநாதன் சுதா. ஆதித்தன், புலவர் மா. கணேசன், பி. லிட், கவிஞர் த. கோபால்

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை செயற்குழு உறுப்பினர்கள்

புலவர். திரு.	மு. தேவராயன், தலைவர்	
,, ,,	மு. மாணிக்கம், பி. லிட், செயலர்	
,, ,,	செ. கோவிந்தராசு, எம். ஏ., பொருளாளர்	
,, ,,	இரா. துரைசாமி, பி. லிட்., துணைத் தலைவர்	
,,	ப. துரைசாமி, துணைத் தலைவர்	
,, ,,	இரா. வேட்ராயன், பி. லிட், துணைச் செயலர்	
,,	பெ. பெருமாள், துணைச் செயலர்	
,, ,,	மா. கணேசன்	செயற்குழு உறுப்பினர்
,, ,,	பா. அன்பரசு, எம்., ஏ.	,,
,, ,,	அ. ந. இராமானுசம், எம். ஏ.,	,,
,, ,,	மு. வரதராசுலு, எம். ஏ.,	,,
கவிஞர். ,,	த. கோபால்	,,
,,	கோ. வி. அரங்கநாதன்	,,
,,	சுதா. ஆதித்தன்	தணிக்கையாளர்
,,	N. நாராயணராவ்	,,
,,	இரா. காளியப்பன்	,,

தகடூர் மாவட்ட நாடாளுமன்ற, சட்ட மன்ற, மேலவை உறுப்பினர்கள்

திரு டாக்டர் பீ. வி. பெரியசாமி,
நாடளுமன்ற உறுப்பினர், கிருட்டிணகிரி.

,, கே. இராமமூர்த்தி,
நாடாளுமன்றஉறுப்பினர், தகடூர்.

,, எச். ஜி. ஆறுமுகம்,
சட்டமன்ற உறுப்பினர், பர்கூர்.

,, டாக்டர் கோ. சமரசம்,
சட்டமன்ற உறுப்பினர், காவேரிப்பட்டணம்.

,, பா. கா. சி. முத்துசாமி,
சட்டமன்ற உறுப்பினர், தகடூர்.

,, கே. ஆர். சின்னராசு,
சட்டமன்ற உறுப்பினர், கிருட்டிணகிரி.

,, கா. அப்புனு கவுண்டர்,
சட்டமன்ற உறுப்பினர், பென்னகரம்.

,, என். ராமச்சந்திர ரெட்டி,
சட்டமன்ற உறுப்பினர், ஓசூர்.

,, என். குப்புசாமி,
சட்டமன்ற உறுப்பினர், மொரப்பூர்.

,, டி. ஆர். ராஜாராம் நாயுடு,
சட்டமன்ற உறுப்பினர், தளி.

,, பி. எம். கிருட்டிணன்,
சட்டமன்ற உறுப்பினர், பாலக்கோடு.

,, எம். அண்ணாமலை,
சட்டமன்ற உறுப்பினர், அரூர்.

,, எச். எல். முருகேசன், மேலவை உறுப்பினர்.

,, பெரியண்ணன் ,,

,, எஸ். முத்துசாமி ,,

,, ஏ. பாலசுப்பிரமணியம், ,,

,, இரா. ஜநார்த்தனன் ,,

சிம்மம் [களிமண்]

பனைகுளம்

காலம் : சோழர் காலம்



அதியமான் பெருவழி

(நாவற் தாவளத்துக்கு காதம் 29)

தடங்கம் (தர்மபுரி)

காலம் : கி. பி. 14-ம் நூற்றுண்டு



நவகண்டம் [தலைவெட்டிக் கொடுத்தல்]

குந்தாணி

காலம்: கி. பி. 14-ஆம் நூற்றாண்டு



மல்லப்பாடி கோட்டை

மல்லப்பாடி

காலம்:

பெருமாள் கோயில்

தென்கரைக்கோட்டை

நாயக்கர் காலம்

பென்னேஸ்வரர் கோயில்

பென்னேஸ்வரர் மடம்

பென்னேஸ்வரர் கோயில்

பென்னேஸ்வரர் மடம்

சோழர் காலம்



பெருமாள் கோவில்

தென்கரைக்கோட்டை



பார்சுவதநாதர் (சமணர்)

அதியமான்கோட்டை

காலம் : கி. பி. 8-ஆம் நூற்றுண்டு

புத்தர்

கடகத்தூர்.

காலம் : கி. பி. 10-ஆம் நூற்றுண்டு

செப்புத் திருமேனிகள்

நடசாலை, சோழர் காலம்



பிரதோசமூர்த்தி (சிவன், பார்வதி)

நடசாலை



தியாகி சுப்பிரமணிய சிவா சதுக்கம்

தோற்றம்: 4—10—1884 மறைவு: 23—7—1925

இடம்: பாப்பாரப்பட்டி



சந்திர சூடேஸ்வரர் கோயில்

ஒசூர்.

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை அறிக்கை

துவக்கம் :

தகடூர் மாவட்டத்தின் வரலாறு மிகவும் தொன்மையும், பெருமையும் வாய்ந்ததாகும். இம்மாவட்டத்தின் பண்டைய வரலாற்றினை வெளியிடவும், மறைந்துள்ள வரலாற்றுச் சிறப்புகளை உலகுக்கு உணர்த்தவும் ஓர் அமைப்பு தேவை என்பதை உணர்ந்தோம். எனவே தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திருமிகு டாக்டர் இரா. நாகசாமி அவர்களின் ஆலோசனையின்படி 7-10-73 அன்று பாப்பாரப்பட்டியை தலைமையிடமாகக் கொண்டு தகடூர் மாவட்ட வரலாற்று பேரவை அமைக்கப் பட்டது. புலவர் திரு மு. தேவராயன் அவர்கள் தலைவராகவும், திரு கி. வரதராசு அவர்கள் செயலாளராகவும் பொறுப்பேற்றனர்.

வளர்ச்சி :

வரலாற்றில் ஆர்வமிக்க, குறைந்த உறுப்பினர்களைக் கொண்டு துடிப்போடும் சிறப்போடும், இப்பேரவை வளர்ந்தது. பேரவையின் வேண்டுகோளுக்கிணங்கி தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினர் இம்மாவட்டத்தில் ஆய்வு செய்ய பலமுறை முகாமிட்டனர். அச்சமயங்களில் அவர்களுக்கு கலவெட்டுகளை படியெடுக்கவும், மறைந்துள்ள வரலாற்றுச் சான்றுகளைக் கண்டறியவும் பேரவையினர் உதவி புரிந்தோம். அதனால் பேரவைக்கும் ஆய்வுத் துறைக்கும் தொடர்பு வலுபெற்றது.

21—11—73-ல் சதயத் திருநாள் (முதலாம் இராசராசன் பிறந்த நாள்) விழாக் கொண்டாடப்பட்டது. அதுபோழ்து கல்வெட்டு ஆய்வாளர்கள் திரு நடன. காசிநாதன், எம். ஏ., திரு ஹரிஹரன் எம். ஏ. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றினர்.

பின்னர் பேரவையின் செயல்பாடுகளை விரிவுபடுத்தக் கருதி 26—11—76-ல் பொறுப்பாளர் தேர்தல் நடத்தப்பட்டது. புலவர் மு. தேவராயன் அவர்கள் தலைவராகவும், புலவர் மு. மாணிக்கம் அவர்கள் செயலாளராகவும் திரு செ. கோவிந்தராசு அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்து எடுக்கப்பட்டனர். மேலும் இரு துணைத் தலைவர்களும், இரு துணைச் செயலாளர்களும், செயற்குழு உறுப்பினர் அறுவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசு விதிமுறைகளின்படி பேரவைக்கென விதிமுறைகள் வகுக்கப்பட்டு 26—10—1977-ல் பதிவு செய்யப்பட்டது. பதிவு எண் 51/77. தகடூர் மாவட்டத்தின் பண்டைய வரலாற்றினை மக்களுக்கு உணர்த்துதல், வரலாற்றில் ஆர்வம் உண்டாக்குதல், அழிந்துவரும் வரலாற்று சின்னங்களை பாதுகாத்தல், மத்திய மாநில, தொல்பொருள் ஆய்வுத் துறையினருக்கு தேவையான உதவிபுரிதல் கலவெட்டுகளையும், வரலாற்று சான்றுகளையும் ஆராய்தல், அதுபற்றிய கட்டுரை, கவிதை, மலர் வெளியிடுதல், அரும் பொருட்காட்சியகம் அமைத்தல், பண்டைய நாணயங்களையும், ஓலை சுவடிகளையும் சேகரித்தல் போன்றவை இப் பேரவையின் முக்கிய நோக்கங்களாகும்.

தகடூர் மாவட்டத்தில் உள்ள மலைக் கோட்டைகள், வரலாற்று சிறப்புமிக்க கோயில்கள், தரைக் கோட்டைகள், நடுகற்கள், கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், ஆகியவை உள்ள இடங்களை அறிந்து ஆராய்ந்து செய்திகளை திரட்டினோம். வரலாற்று ஆர்வமிக்க பெரியோர்களுடன் தொடர்புகொண்டு அவ்வப் பகுதிகளில் உள்ள வரலாற்றுச்சிறப்புகளை அறிந்தோம் மழைக் காலங்களிலும், உழவுக் காலங்களிலும் அவ்வப் பகுதிகளில் தென்படும் மண்பாண்டங்கள், புதைக் குழிகள், சுடு

மண் பொம்மைகள் பிற வரலாற்று சான்று கள் ஆகியவைகளை அறிந்து செய்திகளை திரட்டினோம். தேவையான பொழுது பேரவையின் செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களை நடாத்தி நேரில் அறிந்தவை பற்றியும், தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் ஆராய்ந்துள்ளோம்.

பேரவையின் பணித் திட்ட செயல்பாடுகள்

24—6—73-ல் அதியமான் பெருவழி மைல் கல் கண்டறியப்பட்டது.

12—12—76-ல் பொன் மேட்டில் காணப் படும் பெருங்கற்கால புதைக் குழிகள் பார்வையிடப்பட்டு முதுமக்கள் தாழி களின் சில பகுதிகள் கொண்டுவரப் பட்டன. மேலும் கருப்பு சிவப்பு மண் கலயங்கள் ஆகியன சேகரிக்கப்பட்டன.

29—5—77-ல் கரடி குன்று பார்வையிடப் பட்டது. இங்கு சவத்தோடு புதைக்கப் பட்ட மண் கலசங்கள் பல வடிவங்களில் கிடைத்தன. மேலும் அக்கால மக்கள் பயன்படுத்திய சிகிச்சை பிளேடு ஒன்று கிடைக்கப் பெற்றது.

7-2-78-ல் கடகத்தூர் (தகடூர் வட்டம்) சோமேச்வரர் ஆலயம் பார்வையிடப்பட்டது கல்வெட்டுகள், சுடுமண் பொம்மைகள் ஓலைச் சுவடிகள் ஆகியவை சேகரிக்கப் பட்டன.

23—2—78-ல் சிவாடி புதை குழியும், பெருமாள் கோயிலும் பார்வையிடப் பட்டது. அங்கு பல வகைப்பட்ட மண் பாண்டங்கள், வண்ண வேலைப்பாடுகள் அமைந்த மண் குடுவை, கலசங்கள் ஆகியவை சேகரிக்கப்பட்டன.

11—3—78-ல் பொன்மேடு பார்வையிடப் பட்டு இரும்புக் கத்திகள், பழங் கற்கால கைக கோடரிகள், முதலியன சேகரிக்கப் பட்டன.

18—5—78-ல் சோமேனஅள்ளி செப்புப் பட்டயம் படித்து படியெடுக்கப்பட்டது.

20—5—78-ல் மலையூர் செப்புப்பட்டயம் படித்து படியெடுக்கப்பட்டது. அப் பட்ட யத்தில் நாட்டுக் கவுண்டர்களுக்கு மான்யம் (ஊராட்சி) வழங்கப்பட்டது குறித்து விளக்கப்பட்டுள்ளது.

12—7—78-ல் பனைகுளம் பார்வையிடப் பட்டு சுடுமண் பொம்மைகள் புதிய கற்கால கருவிகள், பானை ஓடுகள் முதலியன சேகரிக்கப்பட்டன.

30—7—78-ல் அதியமான் பெருவழி 27வது காதம் நண்பர்கள் கண்டறிந்ததை பார்வையிட்டு படியெடுக்கப்பட்டது. இண்டமங்கலம், மோட்டூர் ஆகிய இடங் களை பார்வையிட்டு கல்வெட்டுகள் சுடு மண் பொம்மைகள் ஆகியன சேகரிக்கப் பட்டன. மேலும் மோதூர், அரியகுளம், ஆலம்பாடி, கோடியூர், மணியம்பாடி, வீரபத்திர துர்க்கம், குந்தாணி, மகாராசாக் கடை மலை, மல்லப்பாடி, தவளம், போன்ற சிறப்புமிக்க இடங்களை பார்வையிட்டு வரலாற்றுச் செயதிகளை அறிந்தோம்.

ஆர்வமும், ஊக்கமும்தான் இப்பேரவை யின் மூலதனமாகும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது செலவினங்களை நண்பர் களே ஏற்றுக் கொண்டனர். தற்போது இப் பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நூற்க்குமேல் பெருகியுள்ளது வரலாற்றுப் பணிகளைச் சமுதாயத்

தொண்டாக கருதி செய்துவருகின்றோம். வரலாற்றுப் பேரவையின் நோக்கங்களில் ஒன்றான அரும்பொருட் காட்சியகம் அமைப்பது பற்றி பொதுக் குழுவில் தீர்மானித்து 21—5—78ல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகினோம். அவருடைய மேலான அறிவுரைகளின்படி அரும்பொருட் காட்சியகம் தகடூரில் அமைக்க முடிவுசெய்யப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராக வும், மாவட்டத்தில் உள்ள அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற, மேலவை உறுப்பினர்களை அமைப்புக் குழு உறுப்பி னர்களாகவும் கொண்டு குழு அமைக்கப் பட்டது. அரும் பொருட் காட்சியகம் அமைக்க தகுந்த இடமாகத் தேடி இறுதியில் தற்போதுள்ள கட்டிடத்தை மாதம் 50 ரூபாய் வாடகைக்கு மாவட்ட வளர்ச்சி கழகத்திடமிருந்து பெறப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சீரிய ஆலோசனைப்படி அரும் பொருட் காட்சியகத்தில் வைப்பதற்குரிய சின்னங் கள் எங்கெங்கு உள்ளன என்பதை நேரில் சென்று கணக்கிட்டு பட்டியல் தயாரித் தோம். அப்பட்டியலின்படி வரலாற்றுச் சின்னங்களையும், கலைப் பொருட்களையும் அரும் பொருட் காட்சியகத்திற்கு கொண்டு வந்து சேர்ந்தோம். அச் சமயங்களில் எங்களுக்கு ஏற்பட்ட தடைகளும், இடையூறுகளும் பலவாகும்.

வரலாற்றுப் பேரவையின் முதல் படைப் பாக அமைந்துள்ள அரும்பொருட் காட்சி யகத்தில் முதுமக்கள் தாழிகள், சுடுமண் பொம்மைகள் அக்கால மக்களின் விளையாட்டு கருவிகள், செங்கற்கள், கல் வெட்டுகள், நடுகற்கள், செப்பேடுகள், கோவில் கற்சிலைகள், நாணயங்கள், பழங் கால தற்கால போர் கருவிகள், அக்கால மண்பாண்டங்கள், மரச் சிற்பங்கள். மரச் சிற்பங்கள் நிழற் படங்கள் போன்றவை நன்முறையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள் ளன. மேலும் பல வரலாற்றுச் சான்றுகளை கொண்டுவர முயற்சி செய்கின்றோம்.

அரும்பொருட் காட்சியக அமைப்புக் குழு வின் ஆலோசனைப்படி காட்சியகம் அமைக்க வும், திறப்பு விழாவிற்கும், திறப்பு விழா மலர் வெளியிடவும் நன்கொடையாகவும், விளம்பரங்கள் மூலமாகவும் பொதுமக்களிட மிருந்தும், பொது நிறுவனங்களிடம் இருந்தும், தனியார் நிறுவனங்களிடம் இருந்தும் பொருளுதவி பெற்றோம். பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அதிகாரி அவர்கள் ரூ. 2500/– நன்கொடையளித்து பெரிதும் உதவினர்.

அரும்பொருட் காட்சியகம் தகடூரில் அமைய எங்களுக்கு ஆதரவு கொடுத்து ஊக்கம் கொடுத்தவர் தகடூர் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு பா. க. சி. முத்துசாமி, B. A. அவர்கள். மேலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து நாடாளுமன்ற, சட்ட மன்ற, மேலவை உறுப்பினர்கள் அவ்வப்போது ஆலேசானைகள் நல்கி ஒத்துழைத்து வருகின்றனர். கலைப் பொருள்களைக் கொண்டுவர அல்லும்பகலும் எங்களுக்கு உதவியவர் மாவட்டவருவாய்த் துறை அலுவலர் அவர்கள். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் எங்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளையும் இடவசதிகளையும் செய்து கொடுத்து எங்களை ஊக்குவித்தனர். மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர் செய்தி–மக்கள் தொடர்பு அவர்கள் தேவையான நிழற்படங்களையும், மலர் வெளியிடுவதற்கான ஆலோசனைகளையும் நல்கி உதவி புரிந்தார். மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்ட ஆட்சியர்களும் ஒத்துழைத்தனர். தகடூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, ஒசூர், பாலக்கோடு, வட்டாட்சியர்களின் பேருதவியை என்றும் மறக்க இயலாது. அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்களும் ஒத்துழைப்பு தந்தனர்.

அரும்பொருட் காட்சியகத்தின் திறப்பு விழா மலரினை தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் அவர்கள் வெளியிடுவது பேரவைக்கு பெருமையாகும். அரும்பொருட் காட்சியகம் சிறப்புற அமைய ஆலோசனை வழங்கி ஊக்கம் தந்தவர் பதிவாளர் திரு இரா. பூங்குன்றன், M. A. அவர்கள் மேலும் அமைப்புப் பணிகளில் பெரிதும் உதவி புரிந்து நன்முறையில் அமைத்த தொல்பொருள் ஆய்வுத் துறையினராகும். பேரவைக்கான பல சிறந்த நிழற்படங்களை எடுத்து உதவியவர்கள் புலவர் இரா. துரைசாமி, திரு P. துரைசாமி, திரு K. இராமச்சந்திரன் ஆகியோர் ஆவர்.

அரும்பொருட் காட்சியகத்தின் எழுத்துப் பணியை அயராது அனைவரும் போற்றும் வண்ணம் செய்தவர் ஆசிரியர் திரு சுதா ஆதித்தன் அவர்கள் ஆவார்.

இனி வருங் காலத்தில் அரசின் பேராதரவுடனும் பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்ற முனைந்துள்ளோம்.

1. இம்மாவட்டத்தில் உள்ள முக்கிய கோட்டைகள், கோயில்கள் ஆகியவற்றை பாதுகாத்தல்.

2. வரலாற்று ஆய்வுக்கென நூலகம் அமைத்தல்.

3. பேரவைக்கென தனி கட்டிடம் கட்டுதல்.

4. பல்வேறு மொழிகளில் கிடைக்கப் பெறும் ஓலைச் சுவடிகள், செப்புப் பட்டயங்கள் கல்வெட்டுகள் ஆகியவற்றை பதிப்பிக்கச் செய்தல்.

5. மாவட்டத்தின் வரலாற்றினை முழுவதுமாக ஆராய்ந்து "தகடூர் மாவட்ட வரலாறு" என்ற நூல் வெளியிடுதல்.

6. 'தருமபுரி' என்ற பெயரினை 'தகடூர்' என்று மாற்றுவதற்கு ஆவன செய்யுமாறு மாநில, மத்திய அரசினை வலியுறுத்தல்.

7. நாட்டுப் பாடல்களை தொகுத்து வெளியிடுதல் முதலியனவாகும்.

எனவே பொதுமக்களும், அரசு அலுவலர்கள், வரலாற்று அறிஞர்களும், சாதி, சமய இன, மொழி, அரசியல் வேறுபாடின்றி செயலாற்றும் இப்பேரவையின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவார்கள் என நம்புகின்றோம்.

அரும்பொருட் காட்சியகத் திறப்பு விழா மலரினை குறுகிய காலத்தில் சிறப்புடன் அச்சிட்டு உதவிய தகடூர் மாணிக்கம் அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி. அரும்பொருட் காட்சியகம் சிறப்புடன் அமைய ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எங்கள் பணிவான வணக்கங்களையும், நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

புலவர் மு. தேவராயன்,
தலைவர் & செயற்குழு உறுப்பினர்.

புலவர் கு. மாணிக்கம், பி. லிட்
செயலர்.

புலவர் செ. கோவிந்தராசு, (M. A.)
பொருளாளர்.

வரலாற்று சின்னங்களை பாதுகாப்போம்!

பாலவாடி நடுகற்கள்

புலவர் மு. மாணிக்கம், பி. லிட்.

முன்னுரை :

பண்டைய தமிழகத்தைப் பல்வேறு மன்னர்கள் பல பிரிவுகளாகப் பிரித்து ஆண்டு வந்துள்ளனர். அம்மன்னர்களின் காலங்களில்சிறப்புற்று விளங்கிய சில பேரூர்கள் இன்று அதன் வரலாற்றுச் சிறப்புக் குன்றி சிற்றூராய் காட்சியளிக்கின்றன. நல்வினைப்பயனாக அவ்வூர்களின் பகுதிகளில் பல நடுகற்கள் நின்று இன்றும் அவ்வூரின் பெருமைகளை நமக்கு கூறுகின்றன. தகடூர் மாவட்டம் பாலவாடி, கிராமத்தில் கிடைத்த நடுகற்கள் வழங்கும் வரலாற்றுச் சிறப்புகளை கீழே காணலாம்.

நடுகற்கள் :

பழங்காலத்தில் மாற்றானோடு பொருது இறந்த மன்னர்களுக்கும், வீரர்களுக்கும், வீரக்கல் நட்டு வழிபடுவது வழக்கம். இதனை

" காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிரு மூன்று வகையிற் கல்லொடு புணர "

என்று தொல்காப்பியம் செப்புகிறது. நடுகல்லில் இறந்த வீரரின் பெயரும், புகழும் வெற்றிகளும், போர் நடந்த விவரமும் நன்கு குறிக்கப்பட்டுள்ளன. இதனை

" ஆடவர்,
பீடும் பெயரும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல் " என

அகநானூறு இயம்புகிறது. இத்தகைய நடுகற்கள் தாம் தமிழகத்தின் பழைய வரலாற்றைத் தொகுக்க பெரிதும் உதவுகின்றன. **பறைகளாடனார், நொச்சி சாத்தனார்.** பாலவாடி கிராமத்தின் பண்டைய வரலாற்றுச் சிறப்பினை இந்த இரு நடுகற்களும் நன்கு விளக்குகின்றன. ஊரின் நேர் கிழக்கே ஏரிக்கரையை அடுத்துள்ள பெருமாள் கோயில் முன்னிலையில் இரு நடுகற்கள் உள்ளன, ஒன்று வடக்காகவும் மற்றொன்று தெற்காகவும் கிழக்கு நோக்கி உள்ளன. நீண்ட சதுரக் கருங்கற்களில் வீரர்களின் உருவம் போர் செய்யும் நிலையில் அழகாக செதுக்கப்பட்டுள்ளது. கையில் வில்லும் அம்பும் ஏந்தி பகைவரை எதிர்க்கும் பாவனையில் அமைந்துள்ள சிற்பங்கள் மிக உன்னதமானவை, வட புறத்தில் உள்ள சிற்பத்தின் தலையில் நீண்ட சடை காணப்படுகிறது. அக்காலத்து வீரர்கள் சடை பின்னி மலரும் சூடினர் என்பதனை இதனைக் கொண்டு அறியலாம். தென்புற நடுகல்லில் உள்ள சிற்பத்தின் கால் பாகம் சிறிது சிதைந்துள்ளது, தலைப்புறத்தில் வட்டெழுத்தில் வீரரின் பீடும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. இருகற்களில் உள்ள செய்தியையும் கல்வெட்டு ஆய்வாளர் திரு. நடன காசிநாதன் எம். ஏ., சென்னை அவர்கள் வருமாறு படித்துள்ளார்.

வடபுற நடுகல் :

தகடூ ரவனோடு எறிந்து
பட்டார் [ப] றைகளாடனார் கல்.

தென்புற நடுகல் :

ஸ்ரீ புரிச பருமற் [குயா]
ண்டு பத்தாவது பெரும் [பா]
ண முத்தரைசர் கங்க......
ளப் போகற்றூர்த் தொறு அ
ங்குந் கள்வர் கொண்ட ஞான்
று தொறு மீட்டுப் பட்டார் நொ
ச்சி சாத்தனார்

ஆய்வுரை :

இதன் காலம் கி. பி. 8-ம் நூற்றுண்டாகும் வடபுற கல்லில் பரைக்களாடர் என்பவர் தகடூர் நாட்டின் படையோடு எறிந்து பட்டார் என்பதால் தகடூர் ஆதிக்கமின்றி தனி அரசன் இவ்வூரை ஆண்டான் எனக் கொள்ளலாம். ஆகவே தகடூர் நாட்டின் படைகளுக்கும் பாலவாடி படைகளுக்கும் எக்காரணம் பற்றியோ போர் நிகழ்ந்து உள்ளன. அதன் காரணமாகத் திறமை யோடு போரிட்ட பரைக்களாடருக்கு நடுகல் நாட்டப்பட்டது எனத்தெளியலாம்

தென்புறக் கல்லில் ஸ்ரீ புருசவர்மனது கங்க அரசன் 10-வது ஆட்சி ஆண்டில் பாலவாடிக் கோட்டையை பெரும்பாண முத்தரைசர் என்ற குறுநில மன்னன் ஆண்டுள்ளான். அப்போது பாலவாடிக் குக் கிழகே சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சோகத்தூர் என்று இன்று வழங்கும் போகற்றூர் கள்வர்கள்; பாலவாடி ஆநிரைகளை (பசுக்களை) கவர்ந்து சென்றபோது போர் நடந்துள்ளது. அப்போது தன் நாட்டின் ஆநிரைகளை கவர வந்த கள்வர்களுடன் தீரத்துடன் போரிட்ட சாத்தனுர் என்பவர் பட்டு வீழ்ந்தார். அவ் வீரனுடைய உருவம் இன்றும் நடுகல்லாக நிற்கிறது. தன் நாடு காத்த காரணத்தால் நொச்சி சாத்தனுர் ஆனுர் எனக் கொள்ளலாம்.

ஆரிய வீரன் :

பாலவாடி பெருமாள் கோயிலுக்கு நேர் கிழக்கே சுமார் 100 மீட்டர் தூரத்தில் எதிர் எதிராக இரு நடுகற்கள் உள்ளன. இதனை ஆரிய வீரன் என்று அழைக்கின்றனர். ஆநிரை வீரன் என்பதே ஆரிய வீரன் என மருவி வழங்குகிறது என்று தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவைத் தலைவர் புலவர் திரு மு. தேவராயன் அவர்கள் கூறுகிருர். திரு நடன காசிநாதன், எம். ஏ., அவர் களும் இதனை ஆதரிக்கிருர். வடக்கே உள்ள கல்லில் ஓர் வீரன் வில் அம்பு கையில் ஏந்தி போர்செய்வதைப் போலக் காணப்படுகின்ருன். மேலும் வீரனின் தலைக்கு மேலே தேவ கன்னிகைகள் அவ் வீரனை வரவேற்பதாக சித்தரிக்கப் பட்டுள்ளது. சிற்பங்களின் மூன்று பக்கங் களிலும் கன்னட எழுத்தில் செய்தி எழுதப் பட்டுள்ளது. அதனைப் படிக்க முயற்சி செய்து வருகின்றனர். தென்புறம் உள்ள கல்லிலும் மேற்கூறியபடியே சிற்பங்கள் உள்ளன. எழுத்துக்கள் இல்லை.

ஆய்வு :

இச் சிற்பங்கள் காலத்தால் பிற்பட்டதாக காணப்படுகிறது. மேலும் கன்னடத்தில் எழுதப்பட்டுள்ளதால் கி. பி. 8-ம் நூற்றுண் டிறக்குப் பின்னும் இவ்வூர் சிறப்புற்று விளங்கியது என அறியலாம். மேலும் பிராமணர்கள் இவ்வூரில் மிகுதியாக வாழ்ந்தனர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. பாப்பாரப்பட்டியில் வாழும் பிராமணர்களின் மூதாதையர் இவ்வூரில் வாழ்ந்தனர் என துணிந்து கூற இடமுண்டு. போரில் இறந்த வீரர்களை சொர்கத்தின் தேவ மாதர் வரவேற்பர் என்பது ஐதீகம். ஆகவே தேவ மாதர் சிற்பங்களும் வரையப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சிற்பம் சொல்லும் வரலாறு :

சிற்ப வடிவில் சில நடுகற்கள் காணப் படுகின்றன. பட்டாளம்மன் கோயில் அருகே ஏரிக்கரையில் ஒரு சிற்பம் உள்ளது. ஒரு வீரன் கையில் வாள் பிடித்து கேடயம் ஏந்தி போர் செய்யும் நிலையில் செதுக்கப் பட்டுள்ளது. சிற்ப அமைதியை நோக்குங் கால் காலத்தால் மிகவும் பிற்பட்டதாகும்

ஊரின் நேர் வடக்கே சுமார் 200 மீட்டர். தொலைவில் இரு சிற்பங்கள் காணப்படு கின்றன. ஒன்றில் ஓர் அரசன் தலையில் மகுடம் அணிந்து இரு கைகளையும் கூப்பி வணங்குகிருன். அருகில் உள்ள பணிப் பெண் வெண்சாமரம் வீசுகின்ருள். இச் சிற்பங்கள் மிகவும் நேர்த்தியாகவும் நுட்ப மாகவும் செதுக்கப்பட்டுள்ளன. பணிப்

பெண்ணின் மேலாடையும், அரசன் மகுடமும் மிகவும் நுட்பமானவை. இஃது அரசன் கொடை கொடுத்ததைக் குறிக்கும் என திரு தேவராயன் அவர்கள் கூறினர் அக் கருத்தையே திரு நடன. காசிநாதன், M. A., அவர்களும் கொண்டுள்ளார். இன்று சித்தேரி என்று வயலாக காட்சி தரும் பகுதியை ஏரியாக அமைத்துக் கொடுத்த அரசனின் சிற்பமே இஃது என தெளிவாக அறியலாம். அரசன் வரலாறு கிட்டவில்லை.

மேற்கூறிய சிற்பத்தை அடுத்து ஓர் வீரன் போர் செய்யும் நிலையில் உள்ள சிற்பம் கருத்தைக் கவர்கிறது. அவ்வீரன் தலையில் கொண்டை போட்டுள்ளான். ஒரு கையில் நீண்ட வாளும் மற்றொரு கையில் கேடயமும் பிடித்துள்ளான். அவன் அருகே இரு பெண்கள் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சிற்ப அமைதியை பார்க்கும்போது கி. பி. 8-ம் நூற்றுண்டு எனலாம் போர்செய்து இறந்த வீரனுடைய பெயரும் நாடும் குறிக்கப்படவில்லை.

ஊரின் சிறப்பு :

பண்டைய நாளில் பாலவாடி அரசர்கள் ஆட்சி செலுத்தும் இடமாக இருந்தது என்பதற்கு அங்கு கிடைத்துள்ள நடுகற்களும், அழிந்த கோட்டையுமே சான்று பகரும். தற்போது ஊர் உள்ள இடம் பெரியக் கோட்டையாக இருந்திருக்கலாம். கோட்டையைச் சுற்றி பெரிய அகழியும் இருந்துள்ளது. ஊர் பெருமாள் கோவிலுக்கு கிழக்கே இருந்திருக்கிறது. அங்கு கண்டு எடுக்கப்பட்ட பண்டைய சிவன் தலை ஒன்று தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் அக்கால மக்கள் உபயோகித்த மண் பாண்டங்களும், பித்தளைக் கருவிகளும் கிடைத்துள்ளன. பழமையான சிற்பங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் சீரோடும் சிறப்போடும் விளங்கிய பாலவாடி இன்று சிற்றூராய் வரலாற்றுப் பெட்டகத்தைத் தன்னுள் அடக்கி புகழ் மங்கி காட்சி அளிக்கிறது என்பதை எண்ணும் போது மிக வருத்தம் உண்டாகிறது.

முடிவுரை :

இது போன்ற பல சிறப்பு மிக்க ஊர்கள் இன்று புகழ் ஒளி மங்கி உள்ளன. வரலாற்று ஆர்வமிக்க இளைஞர்களும், கல்வி சிறந்த சான்றோரும் ஆன்றோரும் நம் பண்டைய வரலாற்றை உலகுக்குத் தெரியப்படுத்த முன்வர வேண்டும். இதனல் பயன் என்ன ? என கணக்குப் பார்க்காமல் தமிழகத்தின் வரலாற்றைத் தொகுக்க முன்வர வேண்டும். அச்சீரிய பணியில் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துள்ள தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத் துறைக்கும் அதன் அங்கமாக இயங்கும் தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவைக்கும் தங்களின் முழு ஆதரவையும் இளைஞர்களும், ஆன்றோரும் சான்றோரும் நல்குவர் என எதிர்பார்க்கிறேன்.

இருளப்பட்டி நடுகற்கள்

டாக்டர் இரா. நாகசாமி,

இயக்குநர், தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.

அரூர் வட்டத்தில் உள்ள இருளப்பட்டியில் (பாப்பம்பாடி) இரண்டு நடுகற் கல்வெட்டுக்கள் தமிழகஅரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் படியெடுக்கப்பட்டன. அவை தமிழக வரலாற்றுருய்விற்கும் தொல்லெழுத்தியல் ஆய்விற்கும், சிறந்த ஆதாரங்களாகும். இந்த நடுகற்களைக் கண்டு பிடித்துத் துறைக்கு அறிவித்தவர் துரிஞ்சிப்பட்டி ஆசிரியர் புது. போ. வெங்கடராமன் அவர்கள் இந்நடு கற்கள் மரத்தடியில் உள்ளன. அவை மக்களால் வேடியப்பன் என்று அழைக்கப் படுகின்றன.

ஒரு நடுகல்லில் வீரன் ஒருவன் சினந்து போரிடும் காட்சியில் சித்தரிக்கப் பட்டுள்ளான். அவன் வலக்கையில் வாளும், இடக்கையில் கேடயமும் உள்ளன. இந் நடுகல்லில் உள்ள கல்வெட்டு வட்டெழுத்திலும். தமிழ் எழுத்திலும் அமைந்துள்ளது.

கோவிசைய விண்ணவருமற்கு - 3 - குருவு
கையூர் நாடாள்ளும்
கங்கரை சருமேல் வந்த தண்டத்தோடு
எறிந்தஞான்று பட்ட
வாண வருமஅரைசரு.

குருவகையூர் நாடாளும் கங்க அரசர் மீது வந்த படையோடு பொருது வாண வருமன் என்ற அரசன் இறந்து பட்டான்.

மற்றொரு கல்லில் இரண்டு வீரர்களுடைய வுருவங்கள் புடைப்புச் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளன. அவர்கள் வலக்கையில் வாளும் இடக்கையில் கேடயமும் ஏந்தி நிற்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளதைப் பார்க்க முடியும். இரு வீரர்களின் வலக்கையின் கீழ் கல்வெட்டுக்கள் உள்ளன. அவை அவர்களின் வீரச்செயல் பற்றிப் பேசுகின்றன.

முதல் கல்வெட்டு :

"வாணவருமஅரைசரு சேவகன் உழமுணுகன் மகன்
விசயமங்கலமாண்ட விண்ணப் பேரேஞதிகல்"

விசைய மங்கலத்தையாளும் விண்ணப் பேரேஞதி என்பவனுடைய நடுகல். அவன் உழமுணுகன்மான் பவனின் மகன். வாண வருமனின் தளபதி உழமுணுகன் என்பவன் வாண வருமனின் அரசவையில் உயர் பதவி வகித்திருந்தான் என்று உரைக்கலாம்.

இரண்டாம் கல்வெட்டு :

"விண்ணப் பேரேஞதி சேவகன் கொற்றந்தை
கோடன்கல்"

முதலாவது சாசனத்தில் மூன்று வேந்தர்கள் குறிப்பிடப்படுகிருர்கள். கோவிஜைய விண்ணவர்மன்; இவன் காலத்தில்தான் இந்நடுகல் எடுக்கப்பட்டது. குருவுடையூர் நாட்டை ஆளும் கங்க மன்னன்; இவன் மீதுதான் படையெடுப்பு நிகழ்ந்தது. இவனைப் பாதுகாக்க வந்த வாண அரசன்; இவன் போரில் இறந்து பட்டான். இவனுடைய படைத்தலைவர்களும் இப் போரில் மாண்டனர். அவர்கள் பெயரும் இந்நடுகல்லில் பொறிக்கப்பட்டுள்ளன.

அகநானூற்றுப் பாடல் ஒன்றை அதியன் விண்ணத்தன், என்ற புலவர் பாடியுள்ளார். அதியன் என்பானின் மகனே விண்ணத்தன், கோவிஜைய விண்ண வர்மன் என்பானின் ஆட்சியில நடப்பட்ட இந்நடுகல் அதியன் நாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இந்நடு கல்லில் குறிப்பிடப்படும் விசைய விண்ண வர்மன் அதியன் விண்ணத்தன் என்பாரின் வழிவந்தவனுகலாம்.

யாப்பருங்கலத்தில் வரும் ஒரு பாடல் பழசை விண்ணன் என்பானைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. கோவை மாவட்டத்தில் உள்ள பழைய கோட்டையே பண்டைய பழசை எனலாம்; கடற் படையையும், களிற்றுப் படையையும் வெற்றி கொண்ட மன்னர்களை வென்று தன்புகழ் நிறுத்தியவன்; இவன் சமண கோயிலான சேத்தியம் ஒன்று எடுப்பித்தான். நடுகல் சாசனம் குறிக்கும் விண்ணன்யாப் பருங் கலத்தில் குறிப்பிடப்பிடும் விண்ணன் என்று கொள்ளலாம். இவனுடைய ஆட்சி பழைய கோட்டையிலிருந்து வடக்கே அரூர் வரை நீண்டிருந்தது.

கங்கரசர்கள் கி. பி. 5-ம் நூற்றுண்டில் அரசை நிறுவினுர்கள் என்று கொள்வர் வரலாற்றுசிரியர்கள். கோச்செங்கணுனை எதிர்த்த கணைக்காலிரும்பொறைக்கு உதவ வந்த குறுநில மன்னர்களைப் பற்றி அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப் பிடுகிறது. அவர்களில் கங்க மன்னனும் ஒருவன் சங்க நாளிலிருந்து கொடுந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியை கங்கரசர்கள் ஆண் டார்கள் எனலாம் கங்க நாடு அருருக்கு மேற்கே இருந்தது. இச்சாசனத்தின்படி குருவுகையூரை ஆண்ட கங்க மன்னன் படையெடுப்பாளர்களால் தாக்கப்பட்டான்.

சங்க நூல்களில் வாணர்களும் குறிப்பிடப்படுகிறுர்கள். சிறுகுடியைச் சேர்ந்த வாணன் என்பான் அகநானூற்றில் குறிப்பிடப்படுகிறுன். மற்ருெரு வாணன் ஆரியர் வலியை ஒடுக்கினுன் என்றும் அகம் கூறும்.

சோழ அரசன் கிள்ளிவளவன் வாண இளவரசியை மணந்தான் என்றுமணிமேகலை கூறும். கிருத்தவ அப்தத்தின் தொடக்க நாளிலிருந்து வாணர்கள் புகழ் பெற்றிருந்தார்கள். இந்த நடுகற்சாசனத்தில் வாண அரசன் கங்கனுக்கு உதவ வந்த போது அவனும், அவன் படைத்தலைவர் களும் மாண்ட செய்தி குறிப்பிடப்படுகின் றது. நடுகல் நடப்பட்டுள்ள இருளப் பட்டி அருகில் பாண அரசனுக்கும், படை யெடுப்பாளர்களுக்கும் போர் நிகழ்ந்திருத்தல் வேண்டும்,

படையெடுத்து வரும் படைகளை கங்க நாட்டை நோக்கிச் செல்லும் வழியில் பாணர்கள் தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறுர்கள்.

ஒரு சாசனம் விண்ணவர்மன் என்பானின் ஆட்சி ஆண்டைக் குறிக்கிறது அதனுல் விண்ணவர்மன், வாணவர்மன். கங்க அரசன் ஆகியோர்கள் நட்பு பூணடிருந்தனர் என்பது புலப்படும், கங்க நாட்டின் மீது படையெடுத்தவன் யார? படையெடுப்பின் முடிவென்ன? எதைப் பற்றியும் கல் வெட்டின் மூலம் அறிந்து கொள்ள முடிய வில்லை இருப்பினும் இந்த கல்வெட்டுக்கல் இருண்ட காலம் என்று கூறப்படும். கி. பி. 4-5 ம் நூற்றுண்டின் வரலாற்றினை அறிய உதவும் சிறந்த சான்றுதாரங்களாகும்.

இந்த கல் வெட்டுக்கள் தமிழ் மொழியிலும் தமிழ் வட்டெழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களிலும் அமைந்துள்ளன. அதனுல் தென்னிந்திய தொல்லெழுத்தியலைப் படித் தறிய சிறந்த கருவூலமாய் நிற்கின்றது

தமிழகத்தின் பண்டைய எழுத்துக்கள் குகைத் தளங்களில் உள்ள சமணப் படுக்கைகளிலும், அரிக்கமேடு, உறையூர், கொற்கை ஆகிய ஊர்களில் கிடைத்த பாணை ஓடுகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை கி. மு. 3ம் நூற்றுண்டிலிருந்து கி. பி 2ம் நூற்றுண்டு வரையலான காலத்தைச் சேர்ந்தவை. தமிழ் வட்டெழுத்து ஆகிய எழுத்துக்களின் தாய் எழுத்தாக கொள்ளப்படும், தமிழி எழுத்தில் எழுதப்பட்டவை, ஒரே சமயத்தில் தமிழ் மொழியை எழுத தமிழ் வட்டெழுத்து ஆகிய இரு வகையான எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. இதற்கு என்ன காரணம் என்பதைத் தென்னிந்திய தொல்லெழுத்தியல் பற்றி ஆயும் அறிஞர்கள் எடுத்துக் கூற வேண்டும். அவை ஒரே மூல எழுத்திலிருந்து தோன்றியவையா? அல்லது தனித்தனி தோற்றம் கொண்டவையா என்பது ஆய்வாளர்கள் ஆய்ந்து கூற வேண்டிய விஷயம். தமிழி எழுத்திலிருந்து தமிழ் எழுத்து தோன்றிய விதம் கால அடைவில் வரையறுக்கப்பட்டு உள்ளது. ஆனுல் வட்டெழுத்தின் வளர்ச்சி தெளிவாகப் புலப்படவில்லை. சில அறிஞர்கள் அவ்வெழுத்து தமிழ் எழுத்தின் தாயாகலாம் என்பர்.

இறுதியாக கண்டுபிடிக்கப்பட்ட அறச்சலூர் தமிழி கல்வெட்டு, கி, பி. 3-ம் நூற்றுண்டைச் சேர்ந்தது. திருநாதர் குன்றில் சந்திர நந்தி என்ற சமண முனிவனுக்கு வெட்டப்பட்ட வட்டெழுத்துச் சாசனம் கி. பி. 5-ம் நூற்றுண்டைச் சேர்ந்தது. அறச்சலூர் கல்வெட்டிற்கும், திருநாதர் குன்று சாசனத்திற்கும் கால இடைவெளி இரு நூருண்டுகள். இப்போது கண்டுபிடிக்கப்பட்ட இருளப்பட்டி நடுகற்கள் கி. பி. 4-ம் நூற்றுண்டைச் சேர்ந்தவை. அல்லது 5-ம் நூற்றுண்டின் தொடக்ககலத்தவை. 'அ' 'ம' 'ந' போன்ற எழுத்துக்கள் அறச்சலூர்சாசனத்திற்கும் திருநாதர்குன்று சாசனத்திற்கும் இடைப்பட்ட வளர்ச்சி நிலையில் வட்டிக்கப்பட்டுள்ளன.

இந்த நடுகற் சாசனங்கள் முழுமையும் வட்டெழுத்தில் அமையாமல் வட்டெழுத்து தமிழ் எழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களில் அமைந்துள்ளன என்பதை முன்பே குறிப்பிட்டோம். திருநாதர் குன்று கல்வெட்டுக்களை ஊன்றி ஆயும் போது அக்கல்வெட்டும் தமிழ் வட்டெழுத்து ஆகிய எழுத்துக்களில் வடிக்கப்பட்டுள்ளதைப் பார்க்க முடியும். அறச்சலூர் சாசனமும் தமிழ் எழுத்திலிருந்து தோன்றிய தமிழ் வட்டெழுத்து ஆகிய எழுத்துக்களில் அமைந்துள்ளது. தமிழ், வட்டெழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களும் கி. பி. 3-ம் நூற்றுண்டில் தமிழிலிருந்து தோன்றிய தன்மையை உணர முடியும். அவை கி. பி. 8-ம் நூற்றுண்டு வரை கலந்து பயன்படுத்தப்பட்டன என்பது அனுமந்தபுரம் விஜய ஈஸ்வரன் என்பானின் கல்வெட்டுக்களால் அறியலாம்.

இருளப்பட்டி நடுகற்கள் திராவிட மொழியாய் துறைக்குச் சிறந்த சான்ருக விளங்குகிறது! வல்லத்தில் உள்ள மகேந்திர வர்மனின் கி. பி. 7-ம் நூற்றுண்டு கல்வெட்டில் கன்னட மொழியின் செல்வாகு இருப்பதைக் காணலாம். இருளப்பட்டி நடுகற்களில் உள்ள அரைசரு என்ற சொல் கன்னட மொழி கி. பி. 4-ம் நூற்றுண்டிலேயே விரவி வருகின்றதன்மை அறிய உதவுகின்றது.

சில வரலாற்று சிதைவுகள்

இரா. துரைசாமி

தமிழகத்தின் வரலாறு பெரும்பாலும் சிதைவுபட்டே நமக்குக் கிடைத்துள்ளது. சிதைந்த பல துண்டுகளை வைத்தே தமிழக வரலாறு வரையப்பட்டுள்ளது. தகடூர் மாவட்ட வரலாறே மிகவும் சிதைந்தே உள்ளது. அச்சிதைவில் சில துண்டுகளை இங்கு காணலாம்.

குதிரை கொல்லை :

தருமபுரிக்கு அண்மையில் "பதிகால் பள்ளம்" என்று இன்றழைக்கப்படும் பகுதிக்கு குதிரைக் கொல்லை என்று பெயர். தருமபுரி குமாரசாமிபேட்டை மக்கள் இன்றும் இப்பகுதியை குதிரைக் கொல்லை என்றே அழைக்கின்றனர். அதியர்கள் குதிரை மலைக்குத் தலைவர்கள். குதிரையை நிறைய வளர்த்து வந்தனர் என சங்க இலக்கியங்களால் அறிகின்றோம். இவ்விடம் குதிரைகள் மேயவிட்ட இடமாக இருக்க வேண்டும். இன்றைய மூக்கனூர் மலை அன்றைய குதிரை மலையாக இருக்கலாம் என்று ஆராய்சியாளர் கருதுகின்றனர்.

புரவடை :

சிதைந்த அதியமான் கோட்டைக்குத் தென்புறத்தில் புரவடை என்ற ஊர் இன்றும் உள்ளது. புரவி என்றால் குதிரை என்பதாகும். புரவிகளை அடைத்து வைத்த அல்லது "புரந்த" இடமாக இது இருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகின்றது. புரவி+அடை என்பதே புரவடையாக ஆகி இருக்கலாம்.

அதியமான்கோட்டை :

வெங்கட்டம்பட்டி, முக்கல்நாய்க்கன்பட்டி ஆகிய ஊர்களில் வாழும் தெலுங்கு பேசும் மக்கள் "ஆடதானிஞ்சி அதிகமான்கோட்ட செடிபோய" என்ற பழமொழியை வழங்கி வருகின்றனர். இதற்கு, பெண்ணால் அதியமான் கோட்டை கெட்டது என்பது பொருளாகும்.

இரண்டு பேரரசர்களும், ஐந்து சிற்றரசர்களும் ஆக எழுவர் அதியமான் கோட்டையை முற்றுகையிட்டனர். கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. ஒரு நாள் பகற்பொழுதில் ஒரு படைத்தலைவன் கோட்டையை அடுத்துள்ள நீர்நிலையில வண்ணாத்தி ஒருத்தி துணிகள் துவைப்பதைப் பார்த்தான். அவ்வுடைகள் அரச குடும்பத்தார் அணியும் உடைகள். ஐயம் கொண்ட படைத்தலைவன் வண்ணாத்தியை பயமுறுத்தியும், பொருள் கொடுத்தும் வினவினான். கோட்டைக்குள் செல்கின்ற சுரங்க வழியை அவள் காட்டினாள். அவள் காட்டிய வழியினால் அதியமான் தோற்றான்; பகைவர் வென்றனர்; கோட்டை அழிந்தது. வரலாற்றுடன் தொடர்புடைய இச்செய்தியை அவர்கள் சிறிதுமாற்றி கூறி வருகின்றனர். இதற்குச் சான்றாக கோட்டையின் உள்ளே உள்ள 16-ஆம் தீர்த்தங்கரின் "சமணச் சிலை"யை பிழையாக வண்ணாத்தி சிலை என்றும் கூறுகின்றனர்.

பாளையம்புதூர் :

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையம் உள்ள இடத்திற்கு "பாளையம்" என்று பெயராகும். இங்கு ஒரு படைப்பிரிவு எப்போதும் இருந்து வந்துள்ளது. எனவே அந்த இடத்திற்கு பாளையம் என்ற பெயர் வந்தது. இன்றுள்ள ஊர் புதியதாக எடுக்கப்பட்டதால் பாளையம் புதூர் என்று பெயர் பெற்றது.

தொப்பூர் கணவாய் வழியாக தகடூர் நாட்டிற்குள் நுழையும் எதிரிப்படைகளை தடுத்து நிறுத்துவதற்காகவே இப்படைப் பிரிவு இங்கு நிறுத்திவைக்கப்பட்டு இருக்க வேண்டும். இதனைச் சுற்றிலும் பலபோர்கள் நடந்து இருக்கின்றன. பல நடுகற்களும், வீரக்கற்களும் இதற்கு சான்று பகிர்ந்து நிற்பதைப் பார்க்கலாம்.

தண்டு என்றால் படை. இப்படையில் பணியாற்றிய ஒருவன் பெயரால் உண்டான ஊரே தண்டுகாரன்பட்டி என்பதாகும். பாளையத்திற்கு மிக அண்மையில் இவ்வூர் இருப்பதையும் கருதிப் பார்க்க வேண்டும். இதைப்போன்றே செங்கத்திலும் ஒரு படை பிரிவு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. தென் கிழக்கு, கிழக்குக் கணவாய்கள் வழியாக தகடூர் நாட்டிற்குள் வரும் எதிரிப் படைகளை தடுத்து நிறுத்தவே இப்படை பயன்பட்டது. இங்கும் பல போர்கள் நடை பெற்றுள்ளன. இங்குள்ள நடுகற்களே வெற்றிற்கு சான்றாகும்.

பெண்ணாகரம் :

பெண் என்றால் தெலுங்கில் பெரிய என்று பொருளாகும். நகரம் இத்துடன் சேர்ந்து பெண்ணகரம் என்றாகி கொச்சை மொழியாக பெண்ணாகரம் ஆயிற்று. இவ்வூர் பிராமணர் தெருவில் உள்ள சிவன் கோவிலுக்கு "கோட்டை சிவன்" கோயில் என்று பெயர். சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன் கோட்டையில் இருந்த சிவன் கோயிலைப் பிரித்து வந்து இங்கு கட்டினார்.

இக்கோட்டை சிதைந்து விளைநிலங்களாக மாறிவிட்டன. இங்குள்ள ஆங்கில தளபதியின் சமாதியும், கொடி மேடைகளும் இன்றும் பார்க்கக் கூடியதாக உள்ளன. பல அரசர்களின் கையில் இக்கோட்டை இருந்து வந்தது. இறுதியாக திப்புவிடம் இருந்து ஆங்கிலேயர் இதைக் கைப் பற்றினர். நூறு வருடங்கட்கு முன்புவரை நிலைத்த படைப்பிரிவு ஒன்றை இங்கு வைத்து இருந்தனர். பின்பு கலைத்து விட்டனர்.

கருவூரம்மன் :

பெண்ணாகரத்திற்கு அருகில் கருவூரம்மன் என்ற கோயில் ஒன்றுள்ளது. வாரத்தில் திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மக்கள் மிகுதியாக இங்கு வருவர். அழகான தோட்டம், இயற்கை வளம் மிகுந்த இடம்.

சேரர்களின் தலைநகராகிய வஞ்சிக்குக் கருவூர் என்ற ஒரு பெயரும் உண்டு. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு வஞ்சியில் சிலையெடுத்தான் என வரலாறும் இலக்கியங் களும் செப்புகின்றன. இலங்கை கயவாகும் நூற்றுவர் கன்னர் இவ்விழாவில் கலந்து தம் நாடு திரும்பிய பின்னர் தம்தம் நாட்டி லிலும் கண்ணகிக்கு கோயிலெடுத்தனர் என அறிகின்றோம். அதுபோலவே இங்கும் ஒரு அரசன் கண்ணகிக்கு கோயில் எடுத் துள்ளான் போலும். கருவூரில் இருந்த வந்த அம்மன் கருவூரம்மன் எனப் பெயர் பெற்றாள்.

மிகவும் சக்திவாய்ந்த அம்மனாக இப்பகுதி மக்களால் கருதப்படுகின்றது இவ்வம்மன் கண்தொடர்பான நோய்களுக்கு இத்தெய் வத்தை வழிபட்டு அருகில் உள்ள ஓடை நீரைக் கண்ணில் விட்டால் எப்படிப்பட்ட கண் நோயும் நீங்கி விடுகின்றது. நீண்ட தொலைவிலிருந்தும் மக்கள் இக்கோயிலுக்கு வருகின்றனர்.

ஆதனூர் :

நல்லாம்பட்டி குளம் ஒட்டைப் பெருமாள் கோயில் குளம், வனத்துக் குளம், சிவன் கோயில் குளம் ஆகிய நான்கு குளங்களும் பழைய அமைப்போடு கூடிய அழிந்து வரும் குளங்களாகும். இந்த நான்கு குளங்களும் உள்ளடங்கிய பகுதியாக ஆதனூர் விளங்கி வந்துள்ளது. இக்குளங்கள் குடிநீர் குளங்களாக பயன் பட்டு வந்தனவாம் இங்கு நிறைய எழுத்துக்

களோடு கூடிய நடுகற்களும், கல்வெட்டு களும், வீரக்கற்களும் கிடைக்கின்றன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் காலத்து நடுகற்கள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று தகடூர் அரும் பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

ஆதனூரில் ஒரு கோட்டையும் இருந்துள்ளது. கருப்பு சிகப்புள்ள மட்பாண்ட ஓடுகளும் கிடைக்கின்றன, இன்னும் 'பண்டக் குழிகளும்' 'ராகிக்கற்களும்' இப்பகுதியில் கிடைக்கின்றன. வட்டப்புதைக் குழி உள்ள ஒரு இடத்திற்கு இன்னும் "பாண்டுர் கெட்டு" (மாண்டவர் கெட்டு) என்றே பெயர் வழங்கி வருகின்றது.

புளியந் தோப்புகள் :

பெண்ணுகரம், கல்லாவி, மொரப்பூர் ஆகிய இடங்களில் அமைந்து உள்ள அழகிய புளியங்தோப்புகள் எல்லாம் அக் காலத்தில் படைகள் தங்குவதற்காக ஏற்படுத்தியவைகள் ஆகும். படை வீரர்களும் அவர்களின் கால்நடைகளும் வெயிலால் வாடாமல் இருப்பதற்கும், பகைவர்களின் கண்ணில் ஊர்கள் எளிதில் புலப்படாமல் இருப்பதற்கும், பாதுகாப்பிற்கும் இத்தோப்புகள் வளர்க்கப்பட்டன. இன்று நமக்கு நல்ல வருவாய் வரும் வாயில்களாக உள்ளன,

காடுகள் :

மொரப்பூர், வேட்ராம்பட்டி, பூதிப்பட்டி, அனுமம்பட்டி, பெரிய கிணறு, முத்தூர், பண்ணப்பட்டி முதலிய பெருங்காடுகளாக இன்று உள்ள இடங்கள் எல்லாம் நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன் பெரும் ஊர்களாக சிறப்புற்று இருந்தன, இவ்விடங்களிலும் இதனைச் சார்ந்த மலைகளிலும் ஏராளமான கல்வெட்டுகளும், நடுகற்களும் வீரக்கற்களும் மறைந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் கண்டு பிடித்து வெளியிட்டால் மயக்கத்தை தரும் பல வரலாற்று செய்திகள் விளக்கம் பெறும்.

தமிழகத்தின் வரலாற்றையே மாற்றி எழுதச் **செய்யத்தக்க சான்றுகள்** தகடூர் மாவட்டத்தில் **மறைந்து** கிடக்கின்றன. இதுவரை எவரும் எந்த வரலாற்றுசிரியனும் தர்மபுரி வரலாற்றை முறையாக வெளியிடவும் இல்லை, முயற்சி செய்யவும் இல்லை. வரலாற்றுப் பேரவை தான் முதன் முதலாக முயன்று வருகிறது. இப்பேரவைக்குத் தக்க ஆக்கமும் ஊக்கமும் மக்களும் அரசும் அளிப்பார்களேயானுல் சோழ, பாண்டிய, அரசைவிட, நாகரீகத்தைவிட நம் அரசும் நாகரீகமும் சிறந்தது, முந்தியது என்பதை உலகறியச் செய்ய முடியும்.

பலிக்கொடை புரிந்தோர்

தேவ. பேரின்பன், B. Sc., கரடிக்குன்று.

தமிழகம் வீரம் விளையும் மண்; கடந்து வந்த வரலாற்றுப் பாதையில் பூசல்களும், பெரும் போர்களுமே இங்கிருந்து சங்கீதங் களாய் கிளம்பிவந்துள்ளன. வாழ்வதற் கான போராட்டம் வடிவங்கள் பல கொண்டன. தமிழனின் இலக்கியங்கள் போரையே பாடின. போர் முறைகளுக்கு இலக்கணம் வகுத்தான்; வகுத்தவாறு வாழ்ந்து செத்தான். இது இந்த மண்ணின் மைந்தனின் கதை.

தகடூர் மாவட்டம் போர்களுக்கும் பூசல் களுக்கும் களமானது. மூவேந்தரையும் தனியனாய் நின்று தோல்வியுறச் செய்த தகடூர் அதியமான் நடுகல்லாய் வழிபட்டான். பண்டைய வரலாற்றில், நூற்றாண்டு கணக்காய் தகடூர் மாவட்ட கிராமங்களும் கூட பூசல்களின் பாசறைக ளாயின. அதுதான் அன்றைய வாழ்க்கை வெஞ்சமர் புரிவதிலும் வெட்சி, கரந்தை, வாகை போன்று வகைவகையாய் போரிட்டு நாளை கழித்தது தமிழகம். இந்த பலவகைப்பட்ட போர்களுக்குப் பலவகைப் பட்ட சமூகக் காரணங்கள் இருந்தன. ஆநிரை கவர்தலும் ஆநிரை மீட்டலும் கூட ஒருவகைப் போராகவே கருதப்பட்டது. அன்றைய மனித சமூகத்தின் செல்வம் கால்நடைகள் ஒரு இனக் குழுவின் உயிர் நாடியே அதுவாகத்தான் கருதப்பட்டது. இந்திய சமூகத்தின் வரலாற்றுக் கட்டங் களில் கால்நடைகளின் செல்வாக்கு வெகு காலத்துக்கு நீடித்து இருந்தது. இந்த கால்டைகளை கவர்வதும் மீட்பதும் உயிர் வாழ்வதற்கான போர்களாயின. அந்த போரில் மாண்ட மறவர்க்கு கல் எடுக்கப் பட்டது. அவர்கள் வழி பாட்டுக்கு உரிய கடவுளாயினர். இப்படி போரில் பட்டவர் களை நடுகல்லாய் வழிபடுவதை நடுகல் மரபு என்கிறோம். இந்த நடுகல்லைத் தவிர வேறு தெய்வம் இல்லையென தமிழர் நம்பினர்.

> கல்லே பரவின் அல்லது
> நெல்லுகுத்துப் பரவும் கடவுளே இல்லை
>
> புறம் — 335

இப்படி இனக்குழு செல்வங்களைக் கவர்வதிலும் மீட்பதிலும் பட்டவர்களையும் தங்களது சொந்த கிராமத்தைக் காப்பதில் மாண்டவர்களையும் மட்டுமின்றி பெரும் போர்களில் மாண்ட வீரப் பெருமக்கட்கும் நடுகல் எடுத்தது கல் நட்டு ஏன் வழிபட வேண்டும்? அதனால் கிடைக்கும் பயன் என்ன?

இதைப்பற்றி விரிவாகக் கூறுமிடத்தில் பேராசிரியர் நா. வானமாமலை "முதலில் இறந்து போனவர்களது ஆன்மா அதனுடைய சக்தி பற்றி இனக்குழு மக்களுக்கும், பண்டைய நாகரீக நிலையி லிருந்த மக்களுக்கும் உலகம் முழுதும் சில நம்பிக்கைகள் இருந்தன. இறந்து போனவர்களுடைய ஆன்மாவிற்கு ஆற்றல் அதிகம். அது ஆக்க சக்தியாக வும் அழிவு சக்தியாகவும் வெளிப்பட லாம்......... அவற்றை சடங்குகள், வழிபாடுகள், சாந்திகள் மூலம் சந்ததியார் மகிழ்வித்தால் அவர்களுக்கு அவர்களுடைய முன்னோர்களின் ஆவி ஆற்றல் அளிக்கும், போரில் உதவும், ஆடு மாடுகளைப் பாதுகாக்கும், வயல் விளைச்சலை அதிகப் படுத்தும்" என்று நடுகல் மரபும் நம்பிக்கை களும் என்னும் கட்டுரையில் குறிப்பிடு கிறார்.

எனவே தனது குலத்தையும், கிராமத் தையும், அரசையும் காக்கும் சக்தி

இறந்துபட்டவரின் ஆவிக்கு உண்டு என நம்பினர். அதியமானின் நடுகல்லில் பீலி சூட்டி, சிறுகலத்துகள் வார்த்து அவனது ஆவியை மகிழ்விக்க விழா நடத்தப்பட்டது அதியமானின் ஆவி அதியன் நாட்டை காப்பதற்காக இது நடத்தப்பட்டது.

இவ்வாறு, போரில் தனது இனத்தை காக்க வீரமரணம் எய்தி நடுகல்லாய் நிற்பதைப் பெரும் பேருகக் கருதினர் அன்றைய மாந்தர். இப்படி எதிரிகளால் போர் முகத்தில் வெட்டுண்டு மடிவதையும் விட தாங்களே முதல் பலியாவதைப் பெரும் பேற்றினும் கிடைத்தற்கரிய பேருகக் கருதினர்.

போர் முகத்தில் போர் துவங்குவதற்கு முன் தனது அரசனுக்காக தானே தனது தலையை வெட்டி அளித்தலை விரும்பிச் செய்தனர் வீரர் அதற்கு போட்டியும் இருந்தது சேரலாதன் என்ற அரசனுக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று கோரி முரசங் கொட்டி வீரக்கூத்தாடிக் கொண்டு வந்து வீரர்கள் பலி கொடுத்தனர் ரத்தவெறி பிடித்த அந்த வீரர்களின் ஆட்டத்தை பதிற்றுப்பத்து விவரிக்கிறது.

"ஆடுநர் பெயர்ந்து வந்தரும் பலிதூஉய்க்
கடிப்புக்கண் உறூஉம் தொடித்தோள்
இயவர்

இவர்களை சமுதாயமே போற்றியது. புகழ் பாடியது, வணங்கி வாழ்த்தியது!

மருவூர்பாக்கத்தில் உள்ள மறவரும் பட்டினப் பாக்கத்தில் உள்ள வீரரும் முற்படச் சென்று, பெரிய பலிபீடத்தில், எம் அரசற்கு உறும் துயரை ஒழித்துத்தருக என தம்மைப் பலியாகக் கொடுத்தனர் என்று சிலம்பு சொல்கிறது.

"மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந்திறல் மன்னற் குற்றதை யொழிக்
கெனப்
பலிக்கொடை புரிந்தோன்........."
[சிலப்பதிகாரம்: இந்திர விழவு ஊர்
எடுத்த காதை]

இப்படி சங்க காலத்திலும், அதற்கு முற்பட்ட, பிற்பட்ட காலங்களிலும் போர் முகத்தில் தம்மையே தம் வாளால் பலி கொடுப்பது வழக்கமாய் இருந்து வந்துள்ளதை நாம் அறியலாம். இப்படிப்பட்டவரை 'பலி கொடை புரிந்தோர்' என சிலம்பு அழைக்கிறது. பலிக்கொடை புரிந்த மரவரின் தலை மிகுந்த மரியாதைக்குரியதாகக் கருதப்பட்டது. அவர்தம் உடல் மிகச் சிறப்புடன் அடக்கம் செய்யப்பட்டது அங்கே கல் நட்டு வழிபாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை விளக்கும் நடுகல் ஒன்று தகடூர் மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம் குந்தாணி என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தகல் எழுத்துக்களின் பலிக்கொடை புரியும் காட்சியை கொண்டுள்ளது. அதில், ஒரு வீரன் நின்றவாறு தனது கழுத்தை தானே வெட்டிக் கொள்வதும்—பக்கத்தில் குதிரை மீது அமர்ந்த முதியவர் ஒருவர் வீரனுடைய தலையை ஒரு தட்டில் தலைக்கு மேல் தாங்கிக் கொண்டு செல்வதையும் காணலாம். இந்த அபூர்வமான காட்சி காண்பவரை வியக்கவும் பிரமிக்க வைக்கவும் செய்கிறது சிந்திப்பவர்க்கு அந்தக்கல் அன்றைய இனக் குழுக்களின் நம்பிக்கைகளையும், வாழ்க்கையையும் எடுத்துக்காட்டும். செங்குருதி கொட்டி தன்னைத்தானே தனது குல நன்மைக்காக முதல் பலியாவதை பெருமையாக எண்ணிய வீரர்களை எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

ஏன் இவர்கள் பலிக்கொடை புரிந்தனர்? தமது ஆவி 'மேலோர் உலகை' அடைவதில் உள்ள ஆர்வமும், தமது ஆவியை தமது சந்ததியினர் கடவுளாய் வழிபட வேண்டும் என்ற ஆசையும் இதற்கு காரணங்களாய்ச் சொல்லலாம். நடுகல்லைத் தவிர வேறு கடவுளை ஏற்றுக் கொள்ளாத தமிழர், தாமே கடவுளாய் வழிபடப் படுவதை விரும்பியதில் வியப்பில்லைதான்.

தென்கரைக்கோட்டை

தொகுத்தவர்: P. S. T. ஆதித்தன்,
தணிக்கையாளர், வரலாற்றுப் பேரவை, பாப்பாரப்பட்டி.

இது சிறந்த அகழியோடு கூடிய தரைக் கோட்டை ஆகும். இது அரூர் தாலுகாவிலுள்ள ஜலகண்டீஸ்வரர் நதியின் தென் கரையில் உள்ளதால் தென்கரைக்கோட்டை என்று பெயர் பெற்றது. இக்கோட்டை 40 ஏக்கர் பரப்பில் கட்டப்பட்டுள்ளது. கோட்டையினுள் ஒரு சிவன் கோயிலும் (நஞ்சுண்டேஸ்வரர்) ஒரு விஷ்ணு கோயிலும் (கல்யாணராமன்) தானியக்களஞ்சியமும், மற்றும் ராணிகுளம் ஆகியவை உள்ளன. இத்தரைக்கோட்டை 25 அடி உயரத்தில் உள்ளது. இதைக் கட்டியவன் சேலம் பாளையக்காரனை சென்னப்ப நாயக்கரும், அவருடைய சகோதரரும் ஆவர். விஜயநகர் கலைநுணுக்கத்தைக் கொண்டது தாரமங்கலம் சிற்பத்தைப் போன்று கலை நுணுக்கத்துடன் சிறந்து விளங்குகிறது. கெட்டி முதலியார்களின் காலத்தில் இது சிறந்து விளங்கியது. பிற்காலத்தில் இது பீஜப்பூர் சுலதான்களின் வசமானது. 1652ல் மைசூர் மன்னன் கண்டிவீர நரசராஜா என்பவரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹைதர் வசமானது. 1768-ல் கர்னல்உட் என்பவர் இக்கோட்டையைப் பிடித்தார். அதே ஆண்டு ஹைதர் மீண்டும் கர்னல் உட்டிடமிருந்து கைப்பற்றினார். இது திப்பு சுல்தான், சர்தாமஸ்மன்றோ காலத்தில் பாராமகாலின் தாலுகா தலைநகரமாகத் திகழ்ந்தது.

சரித்திரம் கூறும் பாராமகால்

P. துரைசாமி, காவேரிப்பட்டிணம்.

துணைத் தலைவர், தருமபுரி மாவட்ட வரலாற்றுப் பேரவை,

பாராமகால் பகுதி :

பாராமகால் பகுதியை நிர்மாணித்தவன் பெனுகொண்டாவிலிருந்து இப் பகுதிக்கு வந்த ஜெகதேவராயன் என்னும் பாளையக்காரன் ஆவான். ஜெகதேவ ராயனுக்கு 12 மகன்கள் இருந்ததாகவும், அவர்களுக்கு 12 கோட்டைகளைக் கட்டிக் கொடுத்ததாகவும் கூறுபவர் உண்டு. ஜெக தேவராயனுடைய வம்சத்தினர் கி. பி. 1578 முதல் 1669 வரை 91 ஆண்டுகள் ஐந்து தலைமுறையினர் அரசாண்டனர்.

பன்னிரண்டு கோட்டைகள் :

பாராமகால் என்று சொல்லப்படும் கோட்டைகளாவன :

1. ஜெகதேவி
2. நாகமலை துர்க்கம்,
3. மல்லப்பாடி துர்க்கம்
4. மத்தூர்
5. ககனகிரி, (பெரிய மலை)
6. தட்டக்கல்
7. கிருஷ்ணகிரி
8. மகாராஜ்காட்
9. காவேரிப்பட்டணம்
10. வீரபத்திர துர்க்கம்
11. போளுதிம்மராயன் துர்க்கம்
12. இராயக்கோட்டை என்பவை.

பாராமகால் என்பது முகம்மதியரால் இடப் பட்ட பெயர்.

1. ஜெகதேவி :

இம்மலைக்கோட்டை கிருஷ்ணகிரி — திரு வண்ணாமலை நெடுஞ்சாலையில் கிருஷ்ணகிரி யிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ளது. இது ஒரு இரட்டை மலைக்கோட்டை. இம் மலையின் உயரம் 2647 அடி. இம்மலையின் உச்சியில் கோட்டை அரண்களும், இடி பாடுடைய பல கட்டிடங்களும், தானியக் களஞ்சியங்களும், சுனைகளும், மலையடி வாரத்தில் நெடுஞ்சாலையின் இரு புறங் களிலும் அழிவுற்ற ஊரும், மொகலாயர் களுடைய சமாதிகளும், பள்ளி வாசல்களும் உள்ளன. சாலையின் இடப்புறம் உள்ள பாறையில் ஒரு விஷ்ணு கோயிலும் இரண்டு குளங்களும் காணப்படுகின்றன. இக் கோட்டை ஆங்கிலேயருக்கும் ஹைதருக்கும் ஏற்பட்ட போரில் பெரும் பங்கு வகித்தது. இது இருமுறை பாராமகாலின் தலைநகரமாகத் திகழ்ந்தது.

2. நாகமலைத்துர்க்கம் :

இம்மலைக்கோட்டை ஜெகதேவி — பர்கூர் நெடுஞ்சாலையில் ஜெகதேவியிலிருந்து 2 மைல தொலைவில் சாலையின் வலப்பக்கமாக அமைந்துள்ளது. மலையின் உச்சியில் கோட்டை அரண்களும், இடிபாடுடைய பல கட்டிடங்களும், சுனைகளும் காணபபடு கின்றன. இம்மலைக்கோட்டை 2599 அடி உயரமுள்ளது

3. மல்லப்பாடி துர்க்கம்

இது கிருஷ்ணகிரி திருப்பத்தூர் நெடுஞ் சாலையில் 12-வது மைலில் சாலையின் இடப் புறம் அமைந்துள்ளது. இம்மலைக்கோட்டை யின் உயரம் 2364 அடி ஆகும். மலையின் உச்சியில் கோட்டை அரண்களும், பல சுனை களும், இடிபாடுடைய பல கட்டிடங்களும் காணப்படுகின்றன. மலையின் அடி

வாரத்தில் இரண்டு விஷ்ணு கோயில்கள் காணப்படுகின்றன. ஜெகதேவராயன் ஐந்தாம் தலைமுறையின் கடைசி அரசரான இராம ஜெகதேவராயர் என்பவருக்கும், பீஜப்பூர் சுல்தான் சேனைத்தலைவன் முஸ்தபர்கானுக்கும் கி. பி. 1669-ல் நடை பெற்ற போரில் மொகலாயர்களால் இக் இக்கோயில் சிதைக்கப்பட்டிருக்கலாம். இக் கோயிலின் உள்ளும். புறமும் ஏராளமான சிற்பங்கள் சிறந்த வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலின் உட் புறமுள்ள தூண்களில் தசாவதார சிற்பங் கள், அஷ்டதிக்கு பாலர்களின், சிற்பங் கள், அரசன், அவனது மனைவிமார்கள் அவனுடைய குழந்தைகள் ஆகியவர்களின் சிற்பங்கள் மிக்க வேலைப்பாடுடன் காணப் படுகின்றன. இது ஹைதர் அலி, திப்புசுல் தான் வசமாகயிருந்தபோது பாராமகாலின் பல தாலூகாக்களில் ஒன்றுகத்திகழ்ந்தது.

4. மத்தூர் :

இது இயற்கை அரண் இல்லாத தரைக் கோட்டையாகும். தற்சமயம் கோட்டை அழிக்கப்பட்டு ஊராக காணப்படுகிறது. ஐதர் அலி ஆங்கிலேயர்களை எதிர்த்து செங்கம், காவேரிப்பாக்கம், சோளிங்கபுரம் முதலிய இடங்களைத்தாக்கிய போது இவ் வழியாக வந்து தங்கிச் சென்றதாகச் சரித்திரம் கூறுகிறது. ஹைதர் அலி அடிக்கடி இங்குவந்து தங்குவார். கோட்டை அகழிகள் இருந்ததற்கான தடையங்களை இன்றும் காணலாம்.

5. ககனகிரி :

(ககனம் = ஆகாயம், கிரி = மலை)

இதை பெரும்பாலும் பெரிய மலை என்றே அழைப்பர். பாராமகால் மலைக்கோட்டை களிலேயே மிகவும் உயரமானது ஆகும். இதன் உயரம் 3436 அடி. இக் கோட்டை காவேரிப்பட்டணத்திலிருந்து ஐந்தாவது மைல் தொலைவிலிருக்கும் வேலம்பட்டி என்னும் ஊரிலிருந்து வடக்காக இம்மலை அமைந்துள்ளது. மலை உச்சியில் கோட்டைகளும் ஒரு சுனையும், இடிபாடு உடைய பல கட்டிடங்களும் காணப்படு கின்றன. மலை உச்சியில் வெங்கட்ரமண ஸ்வாமி ஆலயம் உள்ளது. மலையின் மத்தி யில் அரங்கன் கோயிலும், இராமசாமி கோயிலும் காணப்படுகிறது. அரங்கன் கோயிலை தொட்டாற்போல் வற்ருத தீர்த்தம் சிங்கத்தின் வாயின் வழியாக விழுகிறது.

6. தட்டக்கல் :

காவேரிப்பட்டணம் காக்கங்கரை நெடுஞ் சாலையில் 6-வது மைல் கல் தொலைவில் சாலையின் வலப்புறமாக அமைந்துள்ளது. இதன் உயரம் 2629 அடி. இம்மலைக் கோட்டை பாராமகால் கோட்டைகளிலேயே சிறந்த வேலைப்பாடு மிக்கது. சிவாஜி தென்னுட்டின் மீது படையெடுத்து வந்த சமயம் இம் மலைக் கோட்டையை சிவாஜி பிடித்ததற்கு அறிகுறியாக மலை உச்சியில் சிவாஜியின் கல்வெட்டும் காணப்படுகிறது. மலை உச்சியில் பல சுனைகளும், இடிபாடு உடைய கட்டிடங்களும், ஒரு சிறிய கோயிலும், பாறையில் செதுக்கப்பட்ட பெரிய அனுமன் சிலையும் காணப் படுகின்றது. மலையை சுற்றிலும் பல பாறை கல்வெட்டுகளும், வட்டெழுத்தினுல் ஆன 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட நடுகற்களும் ஏராளமாகக் காணப்படுகிறது.

7. கிருஷ்ணகிரிக் கோட்டை :

இது மிக்க இயற்கை அரண் கொண்ட மலைக் கோட்டை. இக்கோட்டையை ஜகதேவராயன் பரம்பரையைச் சேர்ந்த கிருஷ்ணராயன் ஆண்டதாக கூறப் படுகின்றது. அதனுல் கிருஷ்ணகிரி என்று பெயர் பெற்றது. இக் கோட்டை மூன்று பக்கம் செங்குத்தாகவும், மேற்கு பக்கம் பெரிய பெரிய குண்டுகள் கொண்ட தாகவும் அமைந்துள்ளது, 1791-92ல் கர்னல் மேக்ஸ்வெல், கர்னல் உட், கர்னல் ரிட், ஆகியவர் இக்கோட்டையை முற்றுகை செய்தும் பிடிக்க முடியவில்லை. முதல் மூன்று மைசூர் போர்களிலும் இக்கோட்டை பங்கேற்றது. 5-4-1792ல் திப்புவிற்கும்,

ஆங்கிலேயருக்கும் ஏற்பட்ட உடன்படிக் கையின் பேரில் இக்கோட்டை ஆங்கிலேய ரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1792 முதல் 1834 ஆண்டுகள் வரை 40 ஆண்டுகள் இக் கோட்டையில் இராணுவம் வைக்கப்பட்டு இருந்தது. மலையுச்சியில் பல குளங்களும் மண்டபங்கள், தான்யக் களஞ்சியங்கள், வெடி மருந்து சாலைகள், சையத்பாஷா சகோதர்களின் கல்லறைகளும் உள்ளன. இக்கோட்டை பாராமகால் கோட்டைகளில் மிகுந்த வேலைப்பாடு உடையது. மலையடி வாரத்தில் கர்னல் மேக்ஸ்வெல் பங்களாவும் பல அதிகாரிகளின் சமாதிகளும் காணப் படுகின்றன.

8. மகாராஜ்காட் :

கிருஷ்ணகிரியில் இருந்து குப்பம் (ஆந்திர பிரதேசம்) செல்லும் நெடுஞ் சாலையில் 5 வது கல் தொலைவில் அமைந்துள்ளது. இது காட்டரண் மிக்க மலைக்கோட்டையாகும். இதன் உயரம் 3383 அடி. இம்மலையின் மத்தியில் பழைய ஊர் இருந்ததற்கான தடயங்களும், அங்கணு நாச்சியம்மன் கோயிலும் உள்ளன. இம்மலை இரண்டு அரண்களைக் கொண்டது. மலை உச்சியில் வெங்கட்ரமண ஸ்வாமி கோயிலும், மொகலாயர்களுடைய பள்ளி வாசலும், முகமதியர்களுடைய சமா யும், எட்டடி உயரத்தில் பாறையில் செதுக் கப்பட்ட அனுமன் சிலையும், இடிபாடுடைய கட்டிடங்களும், ஜண்டா மைதானமும், வெடி மருந்து சாலைகளும் அங்காடிப் பாறை களும் காணப்படுகிறது. இம்மலையைச் சார்ந்த பகுதியை கம்பி நாயுடு என்ற சிற் றரசன் 66 ஆண்டுகள் ஆண்டதாகவும், இவனுடைய காலம் 16ம் நூற்றாண்டு என்னும் தெரியவருகிறது. ஜெகதேவராய னால் இவன் தோற்கடிக்கப்பட்டு, இம்மலைக் கோட்டை ஜெகதேவராயன் வசமாயிற்று. இது முற்காலத்தில் அங்கணுநாச்சியம்மன் மலை என்று கூறப்பட்டு வந்தது.

9. காவேரிப்பட்டணம் :

பாராமகால் கோட்டைகளில் மத்தூருக்கு அடுத்தபடி இயற்கைப் பாதுகாப்பு இல்லாதது காவேரிப்பட்டணக் கோட்டை ஆகும். காவேரிப்பட்டணம், தருமபுரி மாவட் டத்தின் செழிப்பு மிக்க பகுதியாகும். ஐதர், திப்பு காலத்து பாராமகால் பகுதிகளுக்கு இங்கிருந்து உணவு விநியோகிக்கப்பட்டது இதனாலேயே இக்கோட்டையை வளமுள்ள கோட்டையாக ஐதர் நிர்மாணித்திருந்தார். தற்சமயம் கோட்டையிருந்த பகுதி அழிவுற்று அகழி மட்டும் தென்படுகிறது கோட்டையில் ஈஸ்வரர் கோவிலும், விஷ்ணு கோவிலும் இன்றும் காணப்படுகிறது.

இங்கு நான்கு முறை ஆங்கிலேயர் களுக்கும், ஐதர், திப்புவிற்கும்போர் நடந்து இருக்கிறது. 27-8-1767 இல் M. C. கெய்ன் என்ற ஆங்கிலேயர் இக்கோட்டையின் பலத்தைக் கண்டு தாக்காமல் திரும்பிச் சென்றார். 23-2-1798இல் கர்னல் ஸ்மித் என்பவர் 9000 வீரர்கள் கொண்ட படை யுடன் வந்து இக்கோட்டையைப் பிடித்தார். மீண்டும் இது ஐதர் வசமானது. கர்னல் லாங் என்பவர் மறுபடியும் இக்கோட்டை யைத்தாக்கி பிடிக்க முடியாமல் திரும்பிச் சென்று விட்டார். நான்காம் முறையாக 3-11-1768இல் ஐதர் அலி வடக்கே சென்று இருந்த சமயம் கர்னல்மேக்ஸ்வெல் ஒரு பெரும் படையுடன் வந்து இக்கோட்டையை பிடித்துக் கொண்டார். கோட்டையை 3 நாட்கள் முற்றுகையிட்டும் திப்புவால் கைப்பற்ற முடியவில்லை காவேரிப் பட்டணத்தில் இக்கோட்டையின் இடிப்பாடுகளை தென்பெண்ணை ஆற்றங் கரையில் காணலாம். ஐதர், திப்பு காலத்தில் பாராமகாலின் தாலூகா தலைநகரங்களில் ஒன்றாகத்திகழ்ந்து வந்தது.

10. வீரபத்திர துர்க்கம் :

இது ஒரு மலைக்கோட்டை. இதன் உயரம் 3038 அடி. முற்காலத்தில் இது இட்டிக்கல் துர்க்கம் என அழைக்கப் பட்டது. இது பாலக்கோடு, இராயக்

கோட்டை செல்லும் நெடுஞ் சாலையில் 5வது கல் தொலைவில் பிக்கனஹள்ளி கிராமத்திலிருந்து வடக்காக 2 மைல் தொலைவிலுள்ளது. இம்மலைக் கோட்டை ஏழு அரண்களைக் கொண்டது. இட்டிபால் அரசர்களுடைய தலைநகராகத் திகழ்ந்தது என்று கூறுவர். மலை உச்சியில் வீரபத்திரர் கோயில் உள்ளதால் வீரபத்திர துர்க்கம் என்று தற்காலத்தில் அழைக்கப்படுறது. ஐதர், திப்புவால் இக் கோட்டையில் பெரும்படை வைத்து பாதுகாக்கப்பட்டது.

20—7—1791இல் மேஜர் கௌடி இராயக் கோட்டையைத் தாக்கி வெற்றி கண்ட சமயம் கேப்டன் ரீட் என்பவரால் கைப்பற்றப்பட்டது. 1802 இல் இது தாலூகா தலைநகரமாகத் திகழ்ந்தது. மலையடிவாரத்தில் சென்னகேஸ்வரர் ஆலயம் வழிபாடுடன் உள்ளது சென்னகேஸ்வரர் 7 அடி உயரம் உள்ளது. இதனருகில் ஊர் இருந்ததற்கான தடயங்களும். சந்தைப் பேட்டை என்ற ஊரும், போரில் மாண்ட இந்து,முஸ்லீம் சமாதிகளும். ஒரு சிவன் கோயிலும் அம்மன் கோயிலும், மூன்று குளங்களும், உள்ளன. இம்மலையின் உச்சியில் வீரபத்திரர் கோயிலும், அம்மன் கோயிலும் இராமலட்சுமி சுனைகளும், இரண்டு வெடிமருந்துச் சாலைகளும் இடிபாடுடன் காணப்படுகிறது.

11. போளுதிம்மராயன் துர்க்கம் :

இது காவேரிப்பட்டணம் சாபர்த்தி நெடுஞ் சாலையில் சாபர்த்தியிலிருந்து மூன்று கல் தொலைவில் உள்ளது. செடி கொடிகள் இன்றி ஒரே பாறையாக நான்கு புறங்களிலும் செங்குத்தாக அரைச்சந்திரன் வடிவமாக அமைந்தள்ள மலையாகும். இம்மலைக் கோட்டை 3389 அடி உயரமுடையது. மலை உச்சியில் சிறந்த அரண்களைக் கொண்ட கோட்டை அமைக்கப்பட்டுள்ளது. மூன்று நான்கு சுனைகளும், ஓரிரண்டு யாத்திரிகள் தங்கக்கூடிய மண்டபங்களும், திம்மராய ஸ்வாமி கோயிலும் உள்ளது. கோயிலிலுள்ள சிலை சிதைக்கப்பட்டுள்ளது. இக் கோட்டையில் ஐதர், திப்புவால் வீரபுத்திர துர்க்கத்திற்கு உதவியாக இராணுவம் வைக்கப்பட்டு இருந்தது. வீரர்கள் தங்கியிருந்த இடம் கொத்தளம் என்ற பெயருடன் மலை அடிவாரத்தின் மேற்குப் பகுதியில் உள்ளது.

12. இராயக்கோட்டை துர்க்கம் :

இது பாராமகாலின் தலைநகரமாக ஒரு முறை விளங்கியது. இக் கோட்டையை ஜெகதேவராயன் பரம்பரை ஆண்டதினால் இக்கோட்டை இராயக்கோட்டை என்ற பெயர் பெற்றது. இதற்கு முன்னர் இம் மலைக்கோட்டை பாணர்கள், சோழர்கள், ஹொய்சாளர்கள் வசமாக இருந்தது. 1796—97-இல் தாலுகா தலைநகரமாகவும் திகழ்ந்தது. இம் மலைக் கோட்டை ஓய்வு பெற்ற இராணுவத்தினருடைய உறைவிடமாக பல காலம் இருந்துவந்தது. இராயக் கோட்டையை தரைக் கோட்டை, மலைக் கோட்டை என இருபிரிவுகளாக பிரிக்கலாம் மலைக்கோட்டை சிறந்த பாதுகாப்பு அரண் சுனைக் கொண்டது. பல குளங்கள, வெடி மருந்து சாலைகள், இடிபாடுடைய பல கட்டிடங்கள், சிறைச்சாலைகள், மற்றும் பல கட்டிடங்கள் சிறந்த வேலைப்பாடுகளுடன் இன்னும் திகழ்கின்றன.

முதல் மூன்று மைசூர் போர்களிலும் இராயக்கோட்டை முக்கிய பங்கு பெற்றது, ஐதர், திப்புவிற்கும் ஆங்கிலேயர்களுக்கும் பல போர்கள் நடைபெற்றுள்ளது. இக் கோட்டை திப்பு சுல்தானிடமிருந்து மேஜர் கௌடி என்பவரால் 20—7—1791-இல் ஆங்கிலேயர் வசமானது. ஆங்கில இராணுவத்தினர் 1791 முதல் 1860 வரை 69 ஆண்டுகள் ஆங்கில படையை இம் மலைக் கோட்டையில் வைத்திருந்தனர். பல ஆங்கிலேயர்களுடை சமாதிகள் கிருஷ்ணகிரி சாலை அருகில் காணப்

படுகிறது. மலையுச்சியில் மாவலிவாணராயா என்பவருடைய கன்னடக் கல்வெட்டும் ஹொய்சாள அரசரான வீரராமநாதனுடைய தமிழ் கலவெட்டும் காணப்படுகிறது. இராயக்கோட்டை ஒசூர் சாலையில் மலைக்கு மேற்குப் புறமாக மேஜர் குளோவர் என்பவரால் கட்டப்பட்ட கோரியும், அவரது மனைவியினுடைய நினைவுச் சின்னமும் பொலிவுடன் இருக்கிறது.

இவ்வளவு வரலாற்று சிறப்புமிக்க இப் பாரமகால் பகுதி 1778-இல் தொடங்கி 1792-இல் இப்பகுதி முழுவதும் ஆங்கிலேயர் வசமாயிற்று. பாராமகால் பகுதி முழுதும் கடல் மட்டத்திற்கு மேல் குறைந்தது 1500 அடி உயரமுள்ளது.

★

வளர்க தகடூர்

புலவர் வை. முருகேசன், M. A.,
(செயலர். தமிழ்நாடு தமிழாசிரியர் பேரவை, தர்மபுரி கிளை.)

அதியனும் ஔவையும் அருந்தமிழ் வளர்த்த
தகடூர் ஆட்சியின் தனிப்பெரும் புகழினை
மாநிலம் அறிய நிறுவினர் ஓரவை
வரலாற்றுச் சிறப்புடை வனப்புறு பொருட்களை
வைத்திட அரும்பொருட் காட்சி கண்டார்.
வாழ்க தகடூர் வரலாற்றுப் பேரவை!
வாழ்க தகடூர் அரும்பொருட் காட்சி!
வளர்க தகடூர் வளம்பல பெற்று
வளர்க தகடூர் வரலாறு தானே!

அவன் புகழ் ஓங்கிநிற்கும்!

புலவர் அ. கண்ணையா, M. A.,

இருந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த அதிய மானின்
இணையில்லா தாண்டிட்ட தகடூர் தன்னில்
கருந்தண்ணீர் கொண்டிலங்கும் அகழி சுற்றி
கல்மணக்கும் கோட்டையுண்டு பகையை விஞ்ச
அருந்தமிழை ஆராயும் அவையி னூடே
அதியமானே ஒளவையுடன் வீற்றி ருந்து
விருந்துண்டு மகிழ்ந்திருக்கும் காட்சி யாங்கு
விளம்பிடுவார் யாருண்டு தமிழ கத்தே!

தமிழகத்துப் புலவரெல்லாம் வருகை தந்தே
தந்திடுவார் தமிழமுதைப் பாக்கள் வாயால்
அமிழ்தெனவே உண்டுண்டு அகங்க ளிப்பான்
அளித்திடுவான் அள்ளியள்ளி பரிசில் அன்றே!
தமிழறிந்த தமிழ்மன்னன் என்ற தாலே
தமிழ்மணமும் வீசிற்று தகடூர் எங்கும்
தமிழ்ச்சுவையின் உருவமாக ஒளவை யங்கு
தழைத்துநின்றார் அதியமானின் உள்ளத் துள்ளே

உள்ளத்தை மகிழ்விக்கும் சுவையைக் கொண்ட
உயர்வான அருநெல்லிக் கனியை யன்று
பள்ளத்தில் வீழ்ந்திடாது பறித்து வந்தே
பக்குவமாய் ஒளவைக்குத் தந்து நின்ற
வள்ளலான அதியமானும் இதனை யுண்டோர்
வாழ்ந்திடுவார் பல்லாண்டு என்றே கூற
தள்ளரிய நீலமணி மிடற்றுன் போல
தழைத்திடுவாய் என்றவ்வை வாழ்த்திட் டாரே!

தொண்டன்றோ! அதியமானின் செயல்கள் யாவும்
தோல்வியில்லா செங்கோலின் திறத்தை யெல்லாம்
ஒண்டமிழால் புலவர்களும் பாடி யங்கு
ஒண்டமிழை உயர்வுபெறச் செய்து விட்டார்
தண்டமிழ்க்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை
தமிழ்மணமும் அவனைவிட்டுப் போவ தில்லை
வண்டமிழ்நா டுளமட்டும் அவன்பு கழ்தான்
வளமார்ந்து ஓங்கிநிற்கும் என்றும் நன்கே!

தகடூர் செப்புப்பட்டயங்கள்

புலவர் செ. கோவிந்தராசன், M. A.,
பொருளர், தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை

முன்னுரை :

"கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்தே—வாளொடு
முன் தோன்றி மூத்தக்குடி
தமிழ்க்குடி"

அந்த மறக்குடியிலே வந்த பண்டையத் தமிழர்கள் தம் வரலாற்றைப் பேணிக் காத்தனர் என்று சொல்வதற்கில்லை. தங்களைப் புகழ்ந்து கொள்ளுதல் தற் புகழ்ச்சி என எண்ணினர். தாம் செய்த நற்செயல்கள் பலவற்றை விளம்பரப்படுத் தாமல் மறைத்து விட்டனர். அதனால்தான் பல சிறந்த நூல்களின் ஆசிரியர் பெயர் கூடத் தெரியவில்லை. இருப்பினும் சங்க காலத்தில் சில செய்திகளை கோவில் சுவர் களிலும், பாறைகளிலும் பொதுவிடங் களிலும் கல்வெட்டாக வெட்டிய செய்தி நமக்கு வரலாற்றை ஓரளவு கணிக்க வகை செய்கின்றது. தமிழகத்தின் மன்னர்களும் கொடையுள்ளம் கொண்ட புரவலர்களும் கோவில்கள், பௌத்த சமணப் பள்ளிகள், அறச்சாலைகள் போன்றவற்றிற்கு நிலம் மற்றும் அணிகலன்கள் போன்றவற்றை நிவந்தமாக அளிப்பதை முதலில் ஓலைகளில் குறிப்பது வழக்கம். பின்பு அதைக் கோவிற் சுவர்களிலும் செப்பேடுகளிலும் வெளியிடுவார்கள். செயற்கரிய செயலைச் செய்த மறவனுக்கு சிறப்புச்செய்ய வேண்டி, மன்னர்கள் அது பரம்பரை பரம்பரையாக நிலைத்திருக்கும் பொருட்டு செப்புத் தகடு களில் பொறித்து பட்டயமாக வழங்கும் வழக்கம் நம்முடைய தமிழகத்தில் இருந் திருக்கிறது.

அந்த பட்டயத்தில் அன்றாளும் மன்னனின் குலமுறை மெய்க்கீர்த்தி, வட மொழி சுலோகங்கள் எதற்காக இப்பட்டயம் கொடுக்கப்பட்டது ஆகியவை விளக்கப் படுகிறது. இவ்வகை பட்டயங்கள் அன்று வழங்கி வந்த வழக்கு மொழியிலே எழுதப் பட்டு அதை காப்பவர்களுக்கு வணக்கமும் அதன் அறத்தை அழிப்பவர்களுக்கு சாப மும் கொடுத்து எழுதப்பட்டிருக்கும் நமது தகடூர் மாடட்டத்தில் இதுவரை சில செப் பேடுகளும், சில செப்பு பட்டையங்களும் கிடைத்துள்ளன. அவற்றுள் இரண்டு பட்டயங்களின் வரலாற்றுச் சுருக்கத்தை ஈண்டு காணலாம்.

மலையூர் செப்புப் பட்டயம்

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவையின் அரிய முயற்சியாலும் சிலநண்பர்கள் உதவி யாலும் பாப்பாரப்பட்டிக்கு அருகில் மலை மீதுள்ள மலையூரில் நாட்டுக்கவுண்டர் திரு. ஏகாம்பரக் கவுண்டன் என்பவரிடம் ஓர் செப்புப் பட்டயம் கண்டுபிடிக்கப்பட்டது. அது கொச்சை மொழியில் எழுதப்பட்டிருந் தாலும் கொள்ளை அழகுடன் மிளிர் கின்றது. அந்த பட்டயத்தில் ஒரு மறவன் செய்த வீரத்திற்காக இருமுறை பரிசு பெற்ற நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) முதல் நிகழ்ச்சியில் சிறுதலைப் பூண்டி யிலிருந்து ஒலகளந்த கவுண்டனும், ஏகாம்பரிக் கவுண்டனும் சிங்கரிப்பட்டி கணவாய் வழியாக வந்த போது நூறு வேடர்கள் அவர்களைத் தடுத்து போரிட் டனர், அந்த இருவரும் நான்கு பேரை வெட்டி வீழ்த்த, மற்றவர்கள் ஓடிவிட்டனர்

அவர்கள் இருவரும் ஆலம்பாடியை அடைந்தனர். அப்பொழுது ஆலம்பாடியை ஆண்டு வந்த இருளப்ப நாய்க்கன் அவர்களை விசாரிக்க, நடந்த நிகழ்ச்சியை அவர்கள் கூறினார்கள். அந்த மன்னனும் அகமகிழ்ந்து அவர்களுக்குத் தங்க இடம் கொடுத்து தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டான் இருளப்பநாய்க்கன் காணுக்காரம்பள்ளிக்கு செல்லுகின்ற போது அவனுடைய எதிரியான பென்னுகரம் தருப்பைச் சார்ந்த மரியண்ண கவுண்டன் தன் ஆட்களுடன் அவனை கொல்வதற்காக வளைத்துக் கொண்டான். இதை அறிந்த ஏகாம்பரிக் கவுண்டன் ஆயுதங்களுடன் வந்து மரியண்ண கவுண்டரின் ஆட்கள் பன்னிரண்டு பேரை வெட்டிய உடனே மரியண்ண கவுண்டன் ஓடிப்போய் மறைந்து கொண்டான் இருளப்ப நாய்க்கன் தன் உயிரை காப்பாற்றிய ஏகாம்பரியைப் பாராட்டி அவன் விரும்பியபடியே நாட்டுக் கவுண்டன் பட்டம் கொடுத்து சிறப்பு செய்தான்.

இப்பட்டயம் சர்வதாரி வருஷம் சித்திரை மாதம் பதிமூன்றும தேதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இப்பட்டயத்தில் இரண்டாவது நிகழ்ச்சி ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. உலகளந்த கவுண்டனும் ஏகாம்பரிக் கவுண்டனும் ஆநிரையை மீட்டிய வீரத்திற்குப்பரிசாக செகதேவராயர் என்ற மன்னன் காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவிலில் மேலும் அதிக சாதி அதிகாரம் கொடுத்து சிறப்பு செய்த விவரம் குறிப்பிட்டுள்ளது.

இதே பட்டயத்தில்மூன்றாவதாக வேறொரு நிகழ்ச்சி குறிப்பிட்டுள்ளது. தற்போதுள்ள ஒகேனக்கல் காவேரி தேசேஸ்வரர் கோவிலில் பிரம்மச்சிக் கவுண்டன் உபயத்தினால் தேர்த் திருவிழா நடந்து வந்துள்ளது அப்போது வலங்கையாருக்கும் இடங்கையாருக்கும் முப்பத்திரண்டு வாத்தியங்கள் விஷயமாக சச்சரவு ஏற்பட்டு மைசூர் கர்த்தரிடத்தில் போய் முறையிட்டு அவருடைய ஆலோசனைப்படி முப்பத்திரண்டு மேள வாத்தியங்கள் வாசித்துக் கொண்டு தேர் நடப்பிக்க உரிமை உண்டு என்றும், அவன் விரும்பியப்படியே சாதி நாட்டாண்மையை அவனுக்கு வழங்கினர். என்பதும் அறிய முடிகிறது.

பொதுவாக இந்த பட்டயத்தின் மூலமாக பல செய்திகளை அறிந்துகொள்ளமுடிகிறது அன்று ஏற்பட்ட நாட்டாண்மையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் மரியாதைகளும் இன்றும் நடைபெற்று வருகின்றது. அந்த வீட்டிலேயே இன்றுவரை நாட்டாண்மைகளும் இருந்து வருகின்றார்கள். அந்த பட்டயத்தில் முக்கியமான கவுண்டர்கள் பெயரும், பல கிராமங்கள் பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் நஞ்சன்கூடு நஞ்சுண்டேசுவரர் முதல் காஞ்சிபுரம் ஏகாம்பரீஸ்வரர், திருப்பதி வெங்கட்டரமணர், மேல்கோட்டை செல்லப்பிள்ளையார் காவேரி தேசேஸ்வரர் போன்ற பல கோவில்களில் எழுந்தருளிய இறைவன் பெயரையும் அறிய முடிகின்றது.

அக்கால மக்களின் சில பழக்க வழக்கங்களும் குறிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலை அன்று என்றோ, அபகரித்தாலோ வீட்டுக்கு மாட்டெலும்பும் வேப்பிலையும் சொருகுதல், பொன் அபராதம் கட்டுதல் சாதித் தண்டனையாக அடிக்கக் கோலும், கட்டக் கயிறும் கூடைக்கல் சுமத்தலும், புளிய மிராலும் கொடுக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மேற்கண்ட கடவுள்களையே சாட்சியாக வைத்து சந்திரசூரியர் உள்ளவரை அழியாதிருக்கவும் வாழ்த்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் எழுத்தமைதியை வைத்துப் பார்க்கும்போது, இது 17-18ம் நூற்றாண்டைச் சார்ந்திருக்கும் எனக் கருதப்படுகிறது. இன்றும் அந்த பரம்பரையில் வந்த நாட்டுக் கவுண்டர்களின் பெயர் ஏகாம்பரி என்று வைக்கப்பட்டுள்ளது. இது வியப்புக்குரியதாக இருக்கிறது. இந்த பட்டயத்தின் உண்மை நகல் இணைக்கப்பட்டுள்ளது.

சோமேனஹள்ளி பட்டயம்

இந்தப் பட்டயத்தின் நீளம் சுமார் 45 செ. மீ. அகலம் சுமார் 25 செ. மீ. உறுதியான செப்புத் தகட்டால் செய்யப் பட்டுள்ளது. மேல்புறம் பைரவர், திருமால், காளி, விநாயகர், ஆஞ்சநேயர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஐந்து தேர்களை இழுப்பது போன்றும் ஒவ்வொரு தேருக்கு ஒரு தலை வீதம் பலியிடுவது போன்ற காட்சியும், இறுதியில் புலி அமர்ந்துள்ள நிலையும் வெட்டப்பட்டுள்ளது. இப்பட்டயம் சோமேனஹள்ளி திரு. மாரிமுத்து என்பவரிடம் உள்ளது. இதில் முதல் பதினைந்து வரிகள் வடமொழிச் சொற்கள் அதிகம் கலந்து புள்ளியில்லா தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. எழுத்துப் பிழைகள் இருந்தாலும் சுத்தமாக உள்ளது. இதை படியெடுக்க புலவர் திரு. மு. மாணிக்கம் செயலர் அவர்களும், கவிஞர் த. கோபால் அவர்களும் உடன் வந்திருந்தனர்.

இப்பட்டயத்தில் ஷொசஸ்திரி என்று ஆரம்பிக்கப்பட்டு பல வரலாற்று அரசர்களின் மரபைக் கூறுகின்றது. முக்கியமாக மனுராச சோழன், மனு விந்திர சோழன் கரிகால சோழன் என்றெல்லாம் குறிப்பிடப் பட்டுள்ளது. இதே போன்று இராயர் வம்சமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சாலிபவாகன சாகப்தம் சகூச ஸ்ரீ மேல் செல்லா நின்ற பிரபவர்தி கனுர்தத்தம் ஒன்றுக்கு செல்லா நின்ற சர்வதாரி வருடம் வைகாசி மாதம் யம் தேதிக்கு சுக்கிர வாரமும், சுக்கிலபட்சமும் பஞ்சமியும், பூச நட்சத்திரமும் சுபநாமயோகமும், பால விக்ராயணமும் மொத்த சுபதினத்தில் என்று அதன் காலம் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த பட்டயத்தின் மூலம் ஒரு பெரிய நிகழ்ச்சியை அறியமுடிகின்றது. தெற்கு சமுத்திரத்திலே புலிபுதைத் தீவிலே காளக்ஷத்திரி கொண்டான் என்ற இராட்சதன் சோழ நாட்டில் அடிக்கடி கொள்ளையடித்து பெரும் சேதம் விளைவிக்க அவனை வெல்ல நம் படையால் முடியாது என்று கருதி பின் விஷ்வகர்மாக்களையும் வீர படையாச்சிகளையும், வீர செங்குந்தர்களையும் கேட்க அவர்கள் மூன்று மாதத்தில் அவனைப் பிடித்துத் தருகிறோம் என்று கூறிவிட்டு, புலிபுதைத் தீவிற்குச் சென்று அவனுடன் போரிட்டு பின் சுப்பிரமணியக் கடவுளின் அருளால் அவனை வென்று அந்நாட்டுப் பொருள்களை ஒட்டகங்கள் மேலும் யானைகள் மேலும் கொண்டு வந்து சோழ அரசனிடம் கொடுக்க அவன் அகமகிழ்ந்து பின் மற்றுமொரு கொள்ளைக் காரத் தலைவனை அடக்கும்படி வேண்ட அதன்படியே அவனையும் வென்று அடக்கியதால் சோழ மன்னன் பெரும்பொருள் கொடுத்து சிறப்புச் செய்தான். இந்த செய்திகளைப் படிக்கின்றபோது சுவையாகவும் விறுவிறுப்பாகவும் உள்ளது.

மேலும், அதே காலத்தில் காஞ்சிபுரத்தில் நடக்கும் திருவிழாவிற்கு ஐந்து கோவில்களின் தேர்களையும் தூப தீபமிட்டு வழிபட்டு இழுப்பது வழக்கம். அந்தத் தேர்களை ஒருமுறை இழுக்கும்போது தேர் நிலை பெயரவில்லை. பின் அதற்குக் காரணம் அறிந்து வடதிசையிலிருந்து வந்த ஒரு அந்தணனைக் கேட்க பாரங்குராசன் என்ற வித்தையில் வல்லானை அழைத்து வந்தால் தேர்நிலை பெயரும் என்று சொன்னார். அதன்படியே அவரை வேண்ட அவரும் ஒப்புக் கொண்டு தன் இரண்டு பெண்சாதிகளையும் மூன்று பிள்ளைகளையும் ஆக ஐந்து பேரையும் நரபலி கொடுத்து தேரின் சங்கிலியை வாயிலே கடித்துத் தெருத் தெருவாக இழுத்து வெற்றி கொண்டான். அதனால் மக்கள் அனைவரும் மகிழ்ந்து ஒன்றுகூடி அவனுக்குப் பட்டயமும் வெகுமதிகளும் கொடுத்து சிறப்பித்த நிகழ்ச்சி தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இதைக் கெடுத்தவர்கள் பெரும் பாவத்திற்குள்ளாவார் என்றும் ஆதரித்தால் ஆல் போல் தழைத்து அருவி போல் வேர் ஊன்றி, மூங்கில் போல் துளுத்து வாழ்வார்கள் என்ற வாழ்த்தும் குறிக்கப் பட்டுள்ளது.

இந்த பட்டயத்தை ஆய்கின்றபோது அக்காலத்தில் மந்திர, தந்திர வித்தையிலும் சிறந்திருந்தார்கள் என்றும் பொது நலனை முன்னிட்டு எவ்வித தியாகமும் செய்ய முன்வருவார்கள் என்றும் நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது என்றும் அறியமுடிகிறது. காளஷத்திரி கொண்டானை வெல்ல காவிரிபூம் பட்டிணத்து தனதச் செட்டியாரிடம் சென்று ஐந்து கோடி திரவியமும், நூறு கப்பலும் பெற்றுச் சென்றார்கள் என்று குறிப்பிடுவதிலிருந்து அன்று காவிரிப் பூம்பட்டிணம் நல்ல நிலையில் இருந்ததாக அறியமுடிகிறது. இதன் காலத்தைச் சரியாக கணிக்க முடியவில்லை என்றாலும் கி. பி. 14, 15-ம் நூற்றாண்டில் நடந்த நிகழ்ச்சியாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.

முடிவுரை :

இதே போன்று மாதேஹள்ளி என்ற கிராமத்தில் பெரியண்ண செடடியார் என்பவரிடம் ஒரு பட்டயம் உள்ளது அதில் சிறந்த வைத்தியன் ஒருவனுக்கு வேலூர் இராயரால் கொடுக்கப்பட்ட பட்டய மாகும். அது இன்னும் படி எடுக்கவில்லை. அடுத்த வெளியீட்டில் அதன் முழு விபரமும் வெளிவரும். மேலும் இதுபோன்ற பல பட்டயங்கள் தகடூர் மாவட்டத்தில் மறைந்துள்ளன. அவை முழுதும் கண்டுபிடிக்கப்பட்டு தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவையினர் விரைவில் **தகடூர் செப்புப் பட்டயங்கள்** என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட இருக்கின்றனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி !

★

தலைநிமிர்ந்து நாமும் நிற்போம்

கவிஞர். த. கோபால், பாப்பாரப்பட்டி.

அதியனுக்கு முன்னிருந்த காலம் தொட்டு
அடுத்தடுத்து ஆண்டிருந்த மன்னர், மக்கள்,
அன்னவரின் வாழ்க்கைமுறை அனைத்தும் கொண்டு
அழியாத வரலாறாய் உள்ள திங்கு !
புதிய பொருள் விரும்புகின்ற நமது உள்ளம்
போற்றுது பழைமைதனை விடுத்தல் நன்றோ !
விதியென்று சோம்பியினி இருத்தல் விட்டு
விடிவெள்ளி வரலாற்றில் முளைக்கச் செய்தோம் !

தகடூரின் தனிச்சிறப்பைத் தமிழன் காண
தக்கதொரு பொருட்காட்சி அமைத்தோம் நன்கு !
அகப்பாட்டு புறப்பாட்டு ஆய்ந்து கூறும்
அருங்காட்சி கொண்டதுதான் தகடூர் நாடு !
புகழீட்டும் பண்பாடு நாகரீகம்
புதைந்துள்ள தங்கங்கே பொன்றவில்லை !
அகமகிழ நாமதனை வெளிக் கொணர்வோம் !
அகிலத்தில் தலைநிமிர்ந்து நாமும் நிற்போம்.

செங்குட்டுவனின் எடை !

புலவர் பா. அன்பரசு, எம். ஏ., கடத்தூர்.

இமயத்தின் சாரலில் :

இமயத்தில் கல் கொண்டு பத்தினிக்குச் சிலை வடித்தான் செங்குட்டுவன். தமிழ் வேந்தரின் ஆற்றலையும், தமிழ் மறவரின் ஆற்றலையும், தமிழ் மக்களின் ஆற்றலையும் அறியாது இகழ்ந்த ஆரிய மன்னர்களான கனக, விசயரின் முடித்தலையில் அதனை ஏற்றினான்.

கடவுட் கண்ணகியின் உருவம் எழுதப் பட்ட அந்தக் கல்லை கங்கைக்கு எடுத்து வந்து நீராட்டினர். கங்கையின் தென் கரையை அனைவரும் அடைகின்றனர். ஏற்கனவே கங்கை ஆற்றின் கரையில் ஆரிய மன்னர்களால் அழகுற அமைக்கப் பட்டிருந்த பாசறையில் சேர மன்னன் கொலுவீற்றிருக்கிறான்.

'தேவர்கட்கும், அரக்கர்கட்கும் பதினெட்டு ஆண்டுகள் போர் நடந்தது. இராம இராவணப் போர் பதினெட்டுத் திங்கள் நடந்தது, பாண்டவ, துரியோதனர் போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. ஆனால் ஆரியருடன் செய்த இந்தப் போர் பதி னெட்டு நாழிகைக்குள் முடிந்தது' இவ்வாறு எண்ண அலைகள் பேரரசனின் மனத்தில் அலைமோதுகின்றன.

வெற்றி வீரர்ப்படை கடலெனக் காட்சி அளிக்கிறது. வானம் இருள் போர்வையை இன்னும் போர்த்துக் கொள்ளாத நேரம். கங்கை அன்னை தனது கரங்களால் இரு கரைகளையும் தழுவிச் சென்று கொண்டிருந் தாள் — தனது காதலனாகிய வங்கக் கடலினை நோக்கி.

கங்கையில் புனித நீர் ஆடும் பொருட்டு வந்த மாடல மறையோன் செங்குட்டுவன் முன்வந்து முறையோடு வாழ்த்தினான். கனக விசயர் பத்தனிக் கடவுட்கல்லைச் சுமந்து நின்ற கோலமும் காண்கிறான்.

"மாதவி மடந்தை கானல் பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது" — என்று அனைத்து நிகழ்ச்சிகட்கும் மூலகாரணம் மாதவியின் கானல்வரி என்பதை மன்னனு க்கு எடுத்துரைக்கிறான். மன்னன் வேண்டு கோளின்படி, தமிழகத்தில் சேரன் செங்குட்டுவன் இல்லாத காலத்து (32 திங்கள்) நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கிறான். தான், கங்கைக்கு வந்து புனித நீர் ஆட வேண்டிய காரணம் இஃது என்றும் கூறுகிறான்.

மாடலமறையோன் புனித நீராட கங்கைக்கு வந்த காரணம் :

மதுரையில் நிகழ்ந்த அவலச் செய்தியைப் புகார் நகரத்தில் கோவலன், கண்ணகியின் உறவினருக்குச் சொன்னதால், கோவலன் தந்தையாகிய மாசாத்துவான் அறத்தால் ஈட்டியப் பொருளைத் தானம் செய்து, சாரணர் முன்பு துறவு மேற்கொண்டான் கோவலன் மறைவைக் கேட்ட அவன் தாய் உயிர் விட்டாள்.

கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கன் தனது செல்வத்தைப் புண்ணிய தானமும் செய்து முனிவர் கோலம் கொண்டு. சீவகர் முன் துறவு மேற்கொண்டான். அவன் மனைவியும் உயிர் விட்டாள்.

அவலச் செய்தியைக் கேட்ட மாதவி மடந்தை தனது மகள் மணிமேகலையை "கணிகையர் கோலம் காணாது ஒழிக" எனக் கூறிக் கோதைத்தாமம் கூந்தலோடு களைந்து போதி மாதவர் முன்பு புண்ணிய தானம் மேற்கொண்டாள்.

அவலச் செய்தியால், புண்ணிய தானம் செய்தவர் தவிர இறந்தவர்களும் உளர் ஆகையால், அப்பழி தன்னை விட்டு நீங்கக் கங்கை நீரில் ஆடவந்ததாகவும் தெரிவிக்கிறான் மடால மறையோன்.

கொற்கையில் இருந்த வெற்றிவேல் செழியன் மதுரைக்கு வந்து பொற்கொல்லர் ஆயிரம் பேரை ஒரே நாளில் கொன்று, மாபெரும் பத்தினிக்கு உயிர்ப்பலி யூட்டினான். மதுரை மூதூர் அரசனின்றித் தவித்த பொழுது அரசு கட்டில் ஏறினான். இச் செய்திகளை மடாலன் மன்னனுக்குக் கூறினான்.

செங்குட்டுவனின் நிறை என்ன ?

செங்குட்டுவன் மாடலன் கூறிய அனைத்துச் செய்திகளையும் செவிமடுத்தான். அப்பொழுது ஞாயிறு தனது கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மேற்றிசையில் மறைந்தான். அந்தி வானம் குருதிக் கோலம் கொண்டது. வெண்பிறை வானில் தவழ்ந்து கொண்டிருந்தது. குட்டுவன் கண்கள் வெண்பிறையைப் பார்த்தன. இதனைக் குறிப்பால் உணர்ந்தான் காலக் கணிதன். எழுந்து மன்னனைப் பார்த்து "அரசே! வஞ்சி மாநகரத்தை விட்டு நாம் வந்து முப்பத்திரண்டு திங்கள் (இரண்டு ஆண்டுகளும், எட்டு மாதங்களும்) சென்றன" என்று கூறினான்.

உடனே செங்குட்டுவன் மாடலனைப் பார்த்து தனது மைத்துனனின் சோழ நாட்டு நலன்களை விசாரிக்கிறான். மாடலன் "வான் மழை குன்றினாலும் பொன்னியாற்றின் நலம் குறையாத சோழ நாடு செழுமையில் இருந்து மாறுபடும் காலமும் உண்டோ ? என்று கூறுகிறான்.

மாடல மறையோன் கூறிய தமிழகச் செய்திகள் யாவற்றையும் கேட்டுப் பாராட்டும் வகையில் மாடல மறையோனுக்குத் தனது எடைக்கு எடை பொன் தானம் செய்கிறான் பெருவேந்தன். செங்குட்டுவன் மாடலனுக்கு ஆடகப்பெரு நிறையாகக் (துலாபுருட தானம்) கொடுத்த பொன்னின் நிறை 50 துலாம் என்று சிலம்பு நூல் கூறுகிறது.

(50 துலாம் = 40 தோலா = 375 இராத்தல்)[1]

$2\frac{1}{2}$ இராத்தல் = 1 கிலோ

∴ 376 இராத்தல் = 150 கிலோ கிராம்

நமது நிறையோடு செங்குட்டுவனின் எடையையும ஒப்பிட்டுப் பார்த்துக்ககாள்ளலாம்.

"ஆடகப் பெருநிறை ஐயைந்து இரட்டித்
தோடு ஆர் போந்தை வேலோன் தன்
நிறை 'மாடல மறையோன் கொள்க'
என்றளித்து"[2]

முடிப்புரை :

சேரன் செங்குட்டுவன் மாடல மறையோனுக்கு கொடுத்த பொன் 150 கிலோ. (375 இராத்தல்), கரிகால் வளவன் பட்டினப் பாலை பாடிய உருத்திரன் கண்ணனுருக்கு கொடுத்த பொன் 16 நூறாயிரம் பொற்காசுகள். ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் காக்கைப்பாடினி நச்செள்ளையாருக்கு அணிகலன் செய்து கொள்ளக் கொடுத்த பொன் 9 கா (1 கா = 9 கழஞ்சு), 100,000 காணம்[3]

இவை போலப் பலமன்னர்கள் பல புலவர்களுக்குப் பல காலங்களில் அளித்த பொன் கணக்கில் அடங்காது. தமிழமே அன்று பொன்னால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது; ஆனால் அந்தப் பொன்னெல்லாம் இன்று எங்கே சென்று மறைந்துவிட்டது.

O O O

பார்வைக்கு :

(1) நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை பக்கம் : 574.

(2) சிலம்பு:வஞ்சிக் காண்டம்:நீர்ப்படைக் காதை வரிகள் 147–176.

(3) பண்டை நாளைச் சேரமன்னர் வரலாறு பக்கம்:181. ஔவை துரைசாமிப் பிள்ளை, திருவளர் பதிப்பகம், தூத்துக்குடி.

O O O

மாமூலனார் காட்டும் தகடூர் நாடு

N. நாராயணராவ், தகடூர்.

★ ★ ★

மாமூலனார் என்னும் பெரும்புலவர் பாலைத் திணையை கவைப்பட பாடியுள்ளார். இவர் தம் பாடல்கள் அகநானூற்றில் விரவிக் கிடக்கின்றன. பல மன்னர்களின் போர்த் திறத்தையும், கொடைச் சிறப்பையும் இவரின் பாடல்களால் அறியலாம்.

அகநானூற்றில், அதியனின் படை வலிமையும் போர்த்திறத்தையும் பற்றி 115-வது பாட்டில், தலைவியைப் பிரிந்த தலைவன் திரும்பி வர தாமதமான போது, தோழி தலைவியைத் தேற்றினள். அதற்கு தலைவி மறுமொழி கூறி வருந்துமாப் போல் அமைந்துள்ள பாட்டில்

" பிறைமருள் வான்கோட்டண்ணல் யானைச்
சினமிகு முன்பின் வாமான் அஞ்சி
இனங் கொண்டொளிக்கும் அஞ்சுவரு
கவலை "

அதாவது, யானைப்படை, குதிரைப் படை, மிக்குள்ள அதியன் பகைவரின் ஆநிரையைக் கவர்ந்து வைத்துள்ள அச்சம் தோற்றுவிக்கும் வழி என்று குறிப்பிட்டுள்ளார்.

325-வது பாட்டில், பிரிந்து செல்ல நினைந்த தலைமகன் செயலைக்கண்டு. தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. அதன்கண் அதியனின் கொடையைப்பற்றி

" ஆடு நடைப் பொலிந்த புகற்சியின் நாடு
கோள்
அள்ளனைப் பணித்த அதியன் பின்றை "

என்று குறிப்பிட்டுள்ளார் இதன் பொருளாவது, தன் வெற்றிக்குக் காரணமான அளளன் என்பானுக்கு நாட்டினை அளித்த அதியன் மறைந்த பின்பும் என்பதாகும். இவ்விரு பாடல்களை ஆராயுங்கால், இப் புலவர் அதியனின் வாழ்நாளிலும் அம் மன்னன் மறைந்த பின்பும் தகடூர் நாட்டோடு தொடர்பு கொண்டிருந்தார். எனவும், பாலைத் திணை தொடர்புடைய பாடல்களில் இச்செய்திகளைச் செப்புவதாலும் தகடூர் நாட்டில் பாலை நிலங்கள் இருந்தமைக்கான சான்றும் புலப்படாநிற்கும்.

பாலை நிலம் என்பதென்னை? தமிழ் மக்கள் நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகப் பகுத்து நானிலம் என்றே பெயரிட்டழைத்தனர். ஐந்தாவதாகப் பாலை நிலமென்பது இந்நானிலங்களில், " முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப் பாலையென்பதோர் படிவங் கொள்ளும் " என்று சிலம்பு கூறுமாப்போல ஏற்படுவதேயாம். தகடூர் நாடுகுறிஞ்சியும், முல்லையும் தன்னகத்தே கொண்டதால் இங்கு பாலைநிலம் ஏற்பட வழியுண்டு. மாமூலனார் தம் பாடல்களில் குறிப்பிடும் பாலை நிலம் தகடூர் நாட்டைச் சார்ந்தவைகளாக உள்ளன எனலாம்.

அடுத்ததாக, " மொழி பெயர் தேஎம் " செல்வோர் கடந்து செல்லும் பாலை நிலங்களில் காணுகின்ற காட்சியினைச் சொல்லுமிடத்து, 'தமிழ்க்கெழு மூவர் காக்கும் மொழிபெயர் தேஎத்த பன்மலையிறந்தே " (அகம்—31) எனபதால் மூவேந்தரின் ஆட்சியினிருந்த மொழி மாறுபட்ட தேயம்' என்பதைக் கருத்தில் கொள்க.

சொல் பெயர்ந்த நாட்டினை அடைவோர் செல்லும் வழியில், பசிமிக்க யானை தன் தும்பிக்கையை குன்றுகளில் வளைத்து வைத்துக் களைப்பாறுவது பாறையில் பாம்பு ஊர்வதை ஒக்கும் (அகம். 349) — [அதியன் யானைப்படையை உடையவன் என்பதை முன்னர் கண்டோம்] என்றும்,

ஆநிரையைக் கவர்ந்து மாண்ட வீரர் களுக்குப் பெயரும், பீடும் எழுதி வழிபடும் நடுகற்களைக் கடந்து மொழிபெயர் தேஎம் செல்வர் (அகம், 67) எனவும் குறிப்பிடு கின்றார்.

இம்மாவட்டத்தில் இதுகாறும் படி யெடுக்கப்பட்டுள்ள நடுகற்களில் ஒரு சில போரில் இறந்துபட்ட வீரர்களுக்கும் எஞ்சிய பெரும்பான்மை ஆநிரை கவர்தல், மீட்டல் போன்ற சண்டைகளில் இறந்த வீரர்களுக்கும் எழுப்பப்பட்டதே ஆகும் என்ப தையும் நினைவிற் கொள்ளல் வேண்டும். தகடூர் நாட்டின் எல்லை மொழி பெயர் தேயங்களின் எல்லையேயாம். (இன்றும் கன்னடம், தெலுங்கு ஆகிய மொழியினரின் நாட்டினை தகடூர் மாவட்டத்தின் எல்லையை கடந்தவுடன் அடையலாம்) தவிர தகடூர் அதியர்கள் வலிமை குன்றியபோது (கி. பி. 7 அல்லது 8-ம் நூற்றாண்டில்) தகடூர் நாட்டின் பெரும் பகுதிகள் தமிழ் மூவேந்த ரின் ஆளுகையின் கீழ் இருக்கவில்லை. மாறாக, அருகில் இருந்த மொழி பெயர் தேயத்தைச் சார்ந்த நுளம்பர்கள், கங்கர் கள் ஆகியவர்களின் ஆட்சியின் கீழ் பல காலம் இருந்தமைக்கான கல்வெட்டுச் சான்றுகள் (கட்டிணைப் பருமரது காலத்திய நடுகற்கள்) பல கிடைத்துள்ளன.

இப்புலவர் வேறு சில பாடல்களில் தகடூர் நாட்டினைச் சுற்றி அரசாண்ட திதியன், புல்லி, நன்னன் ஆகிய மன்னர்களின் பெற்றியைப் பற்றியும் பாடுகின்றார்.

இதுகாறும், நாம் கண்டவற்றால் அறியப் படுவது, மாமூலனார் என்னும் புலவர் பாடும் மொழி பெயர்தேஎம் செல்வோர் கடந்து சென்ற பாலை நிலம் தகடூர் நாட்டினதே என்பதும், இவர் பல காலம் தகடூர் மண்ணில் உலவியவர் என்பதூஉம் ஆம்.

எனவே, தகடூர் நாட்டோடு தொடர் புடைய இப்புலவர்பெருமானை ஔவையோடு சேர்த்து எண்ணிப் போற்றுதல் நம் கடமை யாகும்.

இக்கட்டுரை எழுதத் தூண்டிய திருவாளர் பூங்குன்றன், M. A., அரும்பொருள் கோவை பதிவாளர் அவர்களுக்கு என் நன்றி!

அருங்காட்சி

புலவர். அ. நா. இராமானுசம், B. A.,
கிருட்டிணகிரி.

வரலாற்றில் வந்துலவும் வீரர் மன்னர்
விண்முட்ட நிமிர்ந்துநிற்கும் கோட்டை குன்று
வரம்வேண்டி நிற்போரை வாழ்த்தும் கோயில்
வளமான இலக்கியத்தை ஈந்த நல்லோர்
வெஞ்சமரில் வேலேந்தி நாடுகாத்து
வியப்புறவே நடுகல்லாய் நிற்கும் தீரர்
கொஞ்சுமொழி அணங்கனையார் கற்பின் மாட்சி
காணுதற்கு அருங்காட்சி உதவும் நன்கு!

ஜெகதேவிபாளையம்

தொகுத்தவர் : **சுப்பிரமணியம்**

உறுப்பினர், தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, சந்தூர்.

தற்போது ஜகதேவி என்று அழைக்கப் படுகிறது. இது ஒரு இரட்டை மலைக் கோட்டை கிருஷ்ணகிரி-திருவண்ணாமலை நெடுஞ்சாலையில், கிருஷ்ணகிரியிலிருந்து 6 வது மையிலில் உள்ளது. இக்கோட்டையை நிர்மாணித்தவர் பெனுகொண்டாவிலிருந்து வந்த ஜகதேவிராயன் இவனுடைய காலம் 1578. இக்கோட்டை இருமுறை பாராமகா லின் தலைநகரமாக இருந்தது. இவனுடைய வம்சாவழியினர் [5 தலைமுறையினர்] 91 ஆண்டுகள் அரசாண்டனர். இப்பரம்பரை யின் கடைசி அரசரான ராம ஜகதேவராயர் என்பவர் 1669ல் பிஜப்பூர் சுல்தானின் படை தலைவனான முஸ்தாபாகனுடன் போர் புரிந்து அவ்விடத்திலேயே கொல்லப் பட்டார். இத்துடன் இப்பரம்பரையே அழிந்தது. ஜெகதேவிராயனுக்கு 12 புதல் வர்கள் இருந்ததாகவும் அவர்கள் பன்னிரண்டு பேருக்கும் 12 கோட்டைகள் அமைத்து அவர்கள் பொறுப்பில் விட்டதா கவும், அவைகளே பாராமகால் என்றும் ஜகதேவி பாளையம் என்றும் அழைக்கப் பட்டதாகவும் கூற்று உண்டு.

O O O

அரிமிதைய மாவலி வாணராயர்

பெ. பெருமாள், ஆசிரியர்

துணைச்செயலர், தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கங்கநாடு புறமலை நாடு ஆகிய நாடுகளைத் தன்னகத்துக் கொண்ட தகடூர் நாட்டை அரிமிதைய மாவலி வாணராயர் என்னும் கங்க அரசர் ஆண்டு வந்தார். நுளம்ப அரசன் ஒருவன் அவரிடம் நம்பிக்கைக்குரி யவன் போல் நடித்து மணவுறவும் செய்து கொண்ட பின், அவரையே வஞ்சித்து அவர் தம் நாட்டையும் கவர்ந்து கொள்ளத் திட்ட மிட்டான். நுளம்பனின் வஞ்சனையை அறிந்த மாவலி வானராயர் அவனுடன் போரிட்டு இறந்தார். அவர் இறக்கும்போது அவருடைய மனைவியர் கருவுற்றிருந்தார். நுளம்பன் அறியாதவாறு அரசு மாதேவியை அழைத்துச் சென்று ' சங்கரக் குட்டிபார் ' என்ற அரசு அலுவலர் காத்து வந்தார். கருவுற்றிருந்த தேவியார் ஆண் மகவு ஒன்றை ஈன்றதும், 'சங்கரக் குட்டியார்' 'நாகந்தை சிறுகுட்டி' என் பவனின் துணையோடு தகடூரைத் தாக்கி நுளம்பனைக் கொன்று இழந்த நாட்டைத் திரும்பவும் மீட்டார். அப்போரில் வீர மரணம் அடைந்த நாகந்தை சிறுகுட்டிக்குத் தகடூரில் நடுகல் எடுக்கப்பட்டது.

★

மேஜர் குளோவர்

தொகுத்தவர் : **திருமதி. சாந்தா துரைசாமி**

உறுப்பினர், தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, காவேரிப்பட்டணம்.

ராயக்கோட்டையில் ஒரு தாஜ்மகால். மேஜர் ஜான்கேம்பல் குளோவர் (Major John cambell Glower). இவர் ஒரு பர்மிய சிப்பாய். ஆங்கில இராணுவத்தில் 1819-ல் ஒரு சாதாரண சிப்பாயாக சேர்ந்து இராணுவ மேஜராக உயர்ந்தவர் இவர் இராயக்கோட்டை ஊடே துர்க்கம், நீல்கிரி, அஞ்செட்டி துர்க்கம் ஆகிய கோட்டைகளை பிடிப்பதற்கு மேஜர் கௌடிக்கு உறுதுணையாக நின்றவர். 1852-ல் பர்மா சண்டையில் பீரங்கி குண்டு ஒன்றால் தாக்கி ஒரு கையை இழந்தவர். ஒசூர் தாலுகா மக்களில் இவரை அறியாதவர்கள் இலர். இவரை குண்டிக்கை துரை என்று அழைப்டர். இவர் முகம்மதிய பெண்ணை மணம் செய்து கொண்டு முகம்மதியராக மாறியவர். தன் மனைவி சில ஆண்டுகளுக்குப்பின் இறந்து விடவே அவள் மேல் கொண்ட பாசத்தினாலும், அவளுடைய வேண்டுதல் படியினாலும், அவளது நினைவாக ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தினார். மேற்படி நினைவுச் சின்னம் இராயக்கோட்டை — ஒசூர் ரோட்டில் ஒரு மைல் தொலைவில் மலைக் கோட்டைக்கு மேற்குப் புறமாக உள்ளது. இந்த நினைவுச் சின்னத்திற்கு அருகில் ஒரு வேலைப்பாடுமிக்க ஒரு கோரியையும் கட்டியுள்ளார். ஒரு பெரிய ஏரியையும் கட்டியுள்ளார். தன் மனைவியின் பிரிவாற்றுமையால் ஒரு வேதாந்தியைப்போல் பலகாலம் இப்பகுதியில் அலைந்து திரிந்தார். இவருடைய பங்களாவும், நிலமும் பஞ்சபள்ளி என்ற கிராமத்தில் உள்ளது. அங்கு இவர் 10 ஆண்டுகள் தங்கியிருந்தார். பின்னர் தன்னுடைய மனைவியின் நினைவுச் சின்னத்தின் அருகிலும், ஜக்கேரி ஆலமரத்தின் அருகிலும் சில ஆண்டுகள் வாழ்ந்தார். தன் கடைசி காலத்தை மக்களுக்குத் தொண்டு செய்வதிலேயே கழித்தார். மக்கள் இவரை ஒரு மகானாகவே கருதினர். ஜக்கேரி ஆலமரத்தினருகில் பறவைகளுக்கு, தினமும் 7 கொளகம் தானியத்தை இறைப்பார். மேற்படி காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இம்மகான் 1876-ஆம் ஆண்டு ஆகஸ்டு 13-ந் தேதி மத்தகிரியில் இறந்து போனார். இவருடைய சமாதி இன்றும் மத்தகிரி கால்நடைப்பண்ணை சாலை அருகில் உள்ளது.

அதிகமான் மூவர்

கா. இராமச்சந்திரன், B. Sc., (M. A.), பாப்பாரப்பட்டி

கலை விசயத்தில் அர்த்தமே உருவத்தைச் சமைக்கிறது. புதிய புதிய கருத்து வளர்ச்சிகளுக்கு ஏற்ப புதிய புதிய உருவங்களும் ஏற்படுகின்றன,

முதல் மனிதன் வயிற்றுப்பசி, வம்ச விருத்தி என்ற இரண்டு உணர்ச்சிகளும் தீர்ந்தபிறகு சும்மா இருக்கமுடியாது. குறைந்தபட்சம் சிந்தித்தான் அல்லது கனவு கண்டான். இந்த "சும்மா இருக்க மாட்டாமை" என்ற குணத்தில்தான் மனிதனின் பெருமையே அடங்கி இருக்கிறது, அந்த முதல் மனிதன் 'ஒரு கல்லை' எடுத்துத் தீட்டி அது கூர்மை யாவது கண்டு குதூகலித்தானே அது தான் முதல்விஞ்ஞானம். முதல் கலை, அந்த குதூகலம்தான் முதல் கலா ரசனை. அந்த செயல் அத்துடன் நின்றுவிடவில்லை. அதன் தொடர்ச்சியே சகல இன்றைய மனித சாதனைகளும். இடையில்தான் எவ்வளவு பொழுது கழிந்திருக்கிறது! காலத்தைப் போக்கவும், பொழுதை கழிக்கவுமா மனிதன் இவற்றை கைகொண்டான்? மனிதனை இருந்த இடம் தெரியாமல் அழித்து. மறைத்துப்போய் கொண்டிருந்த 'பொழுது' — அவனுல் பார்க்கமுடியாத அவனது சந்ததியாருக்காக அவனது செயல்களை காப்பாற்றி வைத்திருக்கிறது. அவ்விதம் தரப்பட்டவைதான் மனித குலத்தின் கலாச்சாரங்கள். அவற்றில் ஒரு பிரிவே கலை. இம்மகத்தான காரியம், இருந்து பொழுதைக் கழிக்கவும், உயிர் சுமந்து நாட்களைப் போக்கவுமான ஒரு செயலற்ற தன்மைக்கு பலியாகாமல் இருக்க முனைவது நல்லது.

பொழுதுபோக்கு என்ற முறையிலே ஏதோ கலைகளைப் பார்த்தோம், ரசித்தோம் என்று இராமல் நமது தகடூர் மாவட்டம் பண்டை கலாசாரங்களால் வளம் கொழித்து கிடக்க, அதனை எட்டு திக்கும் முரசு கொட்ட அவ்வைக்கு அதியன் நெல்லிக்கனியீந்த தகடூர் தனிலே அரும் பெரும் காட்சியகமாய் சமைக்கின்ற புலவர் தேவராயனை தலையாகக் கொண்ட இக்குழு வுக்கு தகடூர் என்றும் கடப்பாடு உள்ளது.

அதிகமான் அரசர்களில் முதன்முதலாக அறியப்படுபவன் நெடுமிடல் அஞ்சி என்பவன். சேர நாட்டு அரசனுன களங்காயக்கண்ணி நார்முடிச் சேரல் நெடுமிடல் அஞ்சியை ஒரு போரில் வென்ருன் என்று பதிற்றுப்பத்து செய்யுள் கூறுகிறது. நெடுமிடல் பசும்பூண் பாண்டியனுடைய நண்பனுகவும், சேனைத் தலைவனுகவும் இருந்தான். பசும் பூண் பாண்டியனுடைய பகைவர்கள் சிலர் நெடுமிடலுடன் போர்செய்து அவனை வென்ருர்கள் என்று பரணர் கூறுகிருர். இந்த நெடுமிடல் அஞ்சியும் பசும்பூண் பாண்டியனும் நண்பர்கள் என்பது அகம் 162 ஆம் செய்யுளினுல் தெரிகிறது.

பசும்பூண் பாண்டியன் துளு நாட்டு மன்னன் மேல்படையெடுத்து சென்ருன். அவனுடைய படைக்கு சேனுதிபதியாக இருந்தவன் அதிகமா நெடுமிடல் அஞ்சி துளு நாட்டு வானகப் பறந்தலை என்னும் இடத்தில் துளு நாட்டு சேனுதிபதியான மிஞிலிக்கும் நெடுமிடல் அஞ்சிக்கும் போர் நடந்தது. அந்தப் போரில் நெடுமிடல் அஞ்சி இறந்து போனுன்.

அதிகமான் நெடுமான் அஞ்சி :

அதிகமான் நெடுமிடல் அஞ்சிக்குப் பிறகு தகடூர் நாட்டுக்கு அரசனானவன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவன், இவன் ஔவையாரை ஆதரித்தவன் இவன் கடை வள்ளல்களில் ஒருவன். இவனுடைய வீரத்தையும் வெற்றிகளையும் ஔவையார் பாடியுள்ளார், [புறம் 87, 88, 89, 90, 91, 92 93, 94, 95, 97, 98, 315, 390). இவன் ஏழு அரசர்களோடு போர் செய்துவென்றதையும் கூறுகிறார். இவன் மலையமான் திருமுடிக் காரியின் திருக்கோவலூரின் மேல் படையெடுத்துச் சென்றுபோரில் வென்றான் என்றும், அந்த வெற்றியை பாணர் பாடினர் என்றும் ஔவையார் கூறுகின்றார்

அதிகமான் நெடுமான் அஞ்சி வேறு சில போர்களில் வெற்றிப் பெற்றான். என்று ஒவையார் கூறுகின்றார். " கடிமதில் அரண் பல கடந்த நெடுமான் அஞ்சி " [புறம் 92, 5 – 6] இந்தப் போர்கள் யாருடன் எங்கு நடந்தன என்றும தெரியவில்லை. உண்ட வரை நெடுங்காலம் வாழச் செய்கிற கிடைத்தற்கரிய கருநெல்லிக் கனி அதிகமான் நெடுமான் அஞ்சிக்கு கிடைத்தது. அக்கனியைத் தான் உண்ணுமல் பெரும் புலவராகிய ஔவையாருக்குக் கொடுத்தான். அவர் அதையுண்ட பிறகு தான் அது கிடைத்தற்கரிய கருநெல்லிக் கனி என்பது அவருக்குத் தெரிந்தது. அப்போது அவர் இவனை வியந்து பாடினர். அச் செய்தியை சிறுபாணுற்றுப் படையுங் கூறுகின்றது.

அதிகமான் அரசர் கரும்பைக் கொண்டு வந்து பயிராக்கியதையும், ஔவையாருக்கு கருநெல்லிக்கனி கொடுத்ததையும் பிற்காலத்து நூலாகிய கொங்குமண்டல சதகமுங் கூறுகிறது.

" சாதலை நீக்கு மருநெல்லி தன்னைத்
தமிழ் சொலௌவைச்
காதர வோடு கொடுத்தவன் கன்னலை
யங்கு நின்று
மேதினி மீதிற் கொடுவந்து நட்டவன்
மேன்மரபோர்
மாதிரஞ் சூழரன் மேவதுங் கொங்கு
மண்டலமே "

இவ்வதிகமானுக்காக ஔவையார் தொண்டைமான் இளந்திரையனிடம் தூது சென்றார் என்பது ஔவையார் பாடிய புறம் 95-ம் செய்யுளிலிருந்து தெரிகின்றது. [இத்தூது எதன் பொருட்டு அனுப்பப்பட்டது என்பது தெரியவில்லை,

அதிகமான் நெடுமான் அஞ்சிக்கு ஒரு மகன் பிறந்தான். அப்போது போர் களத்தில் போர் செய்துகொண்டிருந்த அதிகமான் இச் செய்தி அறிந்து போர் கோலத்தோடு விரைந்து வந்து தன் மகனை கண்டு மகிழ்ந்தான். அந்த காட்சியை ஔவையார் பாடியுள்ளார் (புறம் 100) அஞ்சியின் மகனுடைய] பெயர் பொருட்டெழினி என்பது.

இவர்கள் காலத்தில் தென் கொங்கு நாட்டை அரசாண்ட பெருஞ்சேரல் இரும்பொறை தகடூர் நாட்டின் மேல் படையெடுத்துப் போர் செய்தான். அவனை நெடுமான் அஞ்சியும் பொருட்டெழினியும் எதிர்த்து போர் செய்தார்கள். பெருஞ்சேரல் இரும்பொறை வெற்றி பெற்றுத் தகடூரைக் கைப்பற்றினுன்.

நெடுங்காலம் சுதந்திரமாக அரசாண்ட அதிகமான் அரசர் தகடூர் போருக்கு பின் கொங்கு சேரருக்கு கீழ் அடங்கி அரசு ஆண்டார்கள். அதிகமான் அரசபரம்பரை கி. பி. 13-ஆம் நூற்றுண்டிலும் இருந்தன என்பதற்கு சாசனச் சான்றுகள் உள்ளன.

அதிகன் காத்த தமிழ்

★ பாவலர் கருமலைத்தமிழாழன் ★

கழுத்தணிபோல் ஔவைதம் பாட்டிற் குள்ளே
        கருத்தணியாய் நிற்பவனே ! தகடூர் என்னும்
எழுத்துகள் இன்றளவும் நிற்ப தற்கு
        எழுகதிராய் ஆண்டவனே ! பாரி முல்லை
தழுவிடவே தேரீந்தான் ; பேகன் மஞ்ஞை
        தவிப்பிற்கே துகிலீந்தான்; நீயோ செந்தேன்
ஒழுகென்னும் தமிழ்ப்பாக்கள் பாடும் செந்தா
        ஓங்குதற்கே அருநெல்லிக் கனியைத் தந்தாய் !

புறமுதுகு காட்டாத புறநா னூற்றின்
        பெருமன்னா ! இரும் பொறையால் உயிரைத்தான்
பறித்தற்கு முடிந்ததன்றி வள்ளன் மையால்
        பதித்திட்ட நின்புகழை ஒடுக்க லாச்சோ !
மறத்திற்கு மட்டுமன்றி தமிழைக் காக்கும்
        மாண்பிற்கும் நினக்குநீயே உவமை யாகும் !
குறளுக்குப் பொருள்விரிதல் போலே நின்றன்
        பெயருக்குப் புகழ்விரிதல் வியப்பே இல்லை !

நீயாண்ட இம்மண்ணில் வாழு கின்ற
        நிலையொன்றே பெருமையாகும் ; தமிழைக் காக்க
நீசெய்த ஈகத்தை இன்று வாழ்வோர்
        நினைத்தாலே தமிழ்வெல்லும் ஆட்சி செய்யும் !
நீகாத்த புலவர்போல் ஆட்சியாளர்
        நின்றாலே புத்தாக்கம் தமிழில் கூடும் !
நீவாழும் பாவாலே உறுதி சொல்வேன்
        நின்போலே தமிழுக்காய் உயிரும் ஈவேன் !

★ ★ ★

வரலாற்றுச் சொந்தம் கொண்டாடும் பூமி !

ஆக்கியோன் : பி. சுப்பையா, மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர்.
செய்தி மக்கள் தொடர்பு, தருமபுரி மாவட்டம்.

வறட்சிக்கு இலக்காகி இருக்கும் பூமியாக இருந்தாலும் வரலாற்று சிறப்புக்கு இலக்காக இருக்கும் பூமி தருமபுரி மாவட்டம். தொண்மை வளமும்; தமிழ் மொழியின் தொண்மை வரலாறும் பேசும் புகழ் மிக்க மாவட்டமாகும். தமிழ் வரலாற்றின் வடிவங்கள் இங்கு மிகுதி உண்டு என்பதற்கு ஆதாரங்கள் ஏராளம் உண்டு. இலக்கிய மணம் கமழும் இனியச் சொற்களை ஊரில் அடக்கி நிற்பதும் இங்கு உண்டு.

மலை வளமும், பசுமை நிறம் காட்டும் காடுகளும், இனிமை மணம் கூட்டும் சந்தனக் காடுகளும் காண்பாரைக் கவரும் எழிலும், தொண்மையை உணர்த்தும் வரலாற்றுச் சிறப்பும் நிரம்ப இங்கு உண்டு. காவிரித் தாய் தமிழக எல்லைக்குள் புதந்து கானல் வரி பாடுவதும் இங்குதான்–காண்பாரைக் கவரும் கவின் எழில் கொஞ்சும் காட்சிகளும், இயற்கை எழில் மாட்சிகளும் இங்கு ஒரு சேரக் காண இயலும். மருதமும், முல்லையும், குறிஞ்சியும் ஒரு சேர உயர்ந்து காவியம் பாடிட கருப்பொருள் காட்டி நிற்பதும் இங்குதான். அகமும், புறமும் காவியத்தில் படைத்திடவும், நல்வோவியம் தீட்டிடவும் கருப்பொருளுக்குப் பற்றுக் குறை இங்கு சிறிதும் இல்லை.

சேரன் செங்குட்டுவன், இறுமாந்து இழித்துரைத்த வடபுலத்து வேந்தரை, வெல்வதற்குச் சென்றதும், வென்ற பின் வந்ததும் இவ்வழி தான். கலிங்கம் வென்று, கங்கையைக் கொண்டு, கடாரம் வென்று பெரும் புகழ் ஈட்டிய சோழப் பேரரசரும் இவ்வழி தான் சென்றார் என்பதற்கு இலக்கியச் சான்றும், வரலாற்றுச் சான்றும் நிரம்ப உண்டு.

ஔவைக்கு நெல்லிக் கனிதந்து, கவிநயம் காணத் துடித்த பூமியும் இதுதான். இரவலருக்கு ஈந்து உவக்கும் நெஞ்சம் படைத்த அதிகமான் ஆண்ட பூமியும், அவன் வலியறியாது பகை மூட்டி, போர் எழுப்பி வந்த மாற்றலர்க்குத் தோல்வியை வாரி வழங்கிய பூமியும் இந்த பூமிதான்.

முத்தமிழ் விரவி நிற்கும் இப்பூமியில், முக்கனியும் நிரம்பி வழிகிறது. தமிழர்களின் வீரம் கொஞ்சும், வளம் கொஞ்சும் இனிய பூமியாக இருந்த இம்மாவட்டம், அன்னியர்கள் படையெடுப்பால் இயற்கை வளம் குன்றியதோடு, தமிழ்க் கலையும் குறையத் தொடங்கியது.

இந்நிலை போக்கி, தமிழ்ப் பண்பின் சிறப்பு, மாண்பினைக் காத்திட, தகடூர் வரலாற்றுப் பேரவை அரும்பொருள் கொணர்ந்து மகிழ்வூட்டும் காட்சியகத்தை மாவட்ட தலைநகரில், மாண்பு சேர் ஆட்சித் தலைவர் தலைமையில் படைக்கிறது. தமிழ்னின் பண்பாடு இனி புகழ்பாடும்! புகழ் மணக்கும் தமிழ் மொழியின் இளமை வளம் பொங்கி வரும் இந்நாட்டின் புகழ்பாட

தகடூர் மாவட்ட நடுகல் சொல்லும் நற்செய்தி!

புலவர். இரா. வேட்ராயன், B. Lit.

துணைச்செயலர், தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை.

அன்றைய நிகழ்ச்சி இன்றைய வரலாறு. இன்றைய நிகழ்ச்சி நாளைய வரலாறு. ஆக பண்டுதமிழன் பண்பாட்டு வாழ்க்கையை படைத்துக் காட்டுவன நடுகற்கள், ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், கோயிற் கலைகள், புதைக் குழிகள் போன்றன. நம் தகடூர் மாவட்டம் சிந்துவெளி நாகரிகத்தைவிட சிறந்த நாகரிகம் பெற்றிருந்தமைக்கான சான்றுகள் பல உண்டு. இங்கும் ஆயிரக் கணக்கான ஹரப்பாக்களும்! மூடிக்கிடக்கின்ற மொகஞ்சதாரோக்களும் ஆங்காங்கு கோட்டைகளும், அதறகான சான்றுகளும், அழிந்த நிலையில் காண்போர் வியக்கக் காணக் கிடக்கின்றன. அவ்வளவு தொல் சிறப்பு இம்மாவட்டத்திற்கு உண்டா? என்னும் வினா எல்லோருக்கும் எழும். ஆம் என்றாலும் ஐயம் நீங்காது. அத்தனை அவநம்பிக்கை அநேகம் பேருக்கு. காரணம், காலஞ்செய்த கோலத்தால் கண்கூடு வரலாறு மண்மூடிய செய்தியை மனதில் எண்ணாமல், கண்மூடித்தனமாய் கழித்து விட்டமைதான். நீறுபூத்த நெருப்பென இருந்த இம்மாவட்டம், பேறு பெருங்காலம் பெற்றது என்றால் இதன் தொன்மை வரலாற்றுத் தொடர்பால் அன்றோ? உண்மை இது; வெறு புகழ்ச்சி அன்று. நடுகல் வழிபாட்டில் நல்லிலக்கணமாம் விளங்குவது நம் தகடூர் மாவட்டம் என்றால் அது மிகையன்று. நடுகல் வழிபாடே முதன்முதலில் இங்குதான் தொடங்கி இருக்க வேண்டும் என்பதும் திண்ணம். இத்தனை உறுதி எப்படி என்றால் ஆங்காங்கு நடுகற்கள், அத்தனையும் புதுமை! ஆம், 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்ற முதுமொழிக்கேற்ப ஆயுந்தோறும் நடுகற்கள் பற்றிய புதிய புதிய செய்திகள் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. அத்தனை அருமை பெருமை கொண்ட தருமபுரி மாவட்டத்திலுள்ள நடுகற்களில், பானைச் சோற்றிலே பதம் பார்க்கும் ஒரு சோறு போன்று. நான் பார்த்த நடுகற்களில் சில பகரும் செய்திகள் சிறிது காண்போம்.

செயற்கரிய செய்த அனைவருக்கும் இறந்தும் இறவாப் புகழ் பெறவேண்டி, அவருடைய பெருமையும் பெயரும் பொறித்து நினைவுச்சின்னமாகக் கல் நிறுத்தப்பட்டது. அதுவே நடுகல் நட்டு வழிபடும் மரபு ஒல்காப் புகழ் தொல் காப்பியன் காலத்திற்கு முன்பிருந்தே வழக்கிலிருந்திருக்கின்றது.

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணர்தல்'
என்ற தொல்காப்பியர்

நூற்பாவினால் அறிய முடிகின்றது. நடுகல் வழிபாடே உருவ வழிபாட்டிற்கு அடிப்படை எனலாம். முதன் முதலில் வீரர் போரில் இறந்துபடின் அவர் நினைவாக வறிதே கல்லொன்று நட்டு வைக்கப்பட்டது. அதன் வளர்ச்சியாக வெறுங்கல்லிலே வீரன் உருவம் பொறித்து சுருங்க வரலாற்றையும், அக்கால மன்னன் ஆட்சி

யாண்டும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டது, நட்டகல்லை தெய்வமென்று தங்குல முன்னோர் நினைவாக மயிற்பீலி சூட்டி, மாலை அணிவித்து, மாமிசமும், மதுவும் படைத்து வழிபட்டார்கள். அவ்வாறமைந்த நடுகற்களுக்கு நாளடைவில் அக்கல்லின் இருபக்கமும் இரு கற்கள் நிறுத்தி மேலே ஒரு கல்லால் கூரையாக மூடி கோயில் அமைத்து வழிபட்டார்கள். அவற்றை 'இற்கொண்டு புகுதல்' என்று அழைப்பர். இது போன்ற அமைப்புகளோடு கூடிய நடு கற்கள் தகடூர் மாவட்டத்தில் பலவிடங்களிலும் கிடக்கின்றன. நடுகல் வழிபாட்டின் வளர்ச்சியினுல் வந்த 'இற்கொண்டு புகுதல்' அமைப்புத்தான் பிற்காலத்தில் கோவில்களாகவே மாறிவிட்டன. அவ்வாறு அமைந்தவைதான் பட்டாளம்மன் கோயில், வீரன் கோயில். வேடியப்பன் கோயில், ஊமை வேடியப்பன் கோயில், வீரப்பன் கோயில், பாட்டப்பன் கோவில்போன்றன. நடுகற்களில், வீரக்கற்கள் கொடைச் சிற்பங்கள் சதிக்கற்கள், புலிக் குத்திக் கற்கள், பன்றி. குத்தி கற்கள் போன்றவகைகள் உண்டு

தொன்று தொட்டு வீரத்திற்கு விலை போனது. இத்தகடூர் மாவட்டம் என்பதற்கு இங்குள்ள வீரநடுகற்களே பெரிதும் சான்ருக அமைகின்றன. வீர இலக்கணத்தோடு போராடும் காட்சியாக வடிக்கப்பட்ட நடுகற்களை 'வீரக்கற்கள்' என்று, அதாவது ஆங்கிலத்தில் 'Hero stone' என்றும் அழைப்பர். அக்கற்களில் வடிக்கப்பட்டுள்ள வீரனுடைய வீரக்கழலும், கச்சையும் அணிந்த உருவங்கள், வலது கையில் வாளும், இடக்கையில் குறுவாள் அல்லது கேடயம் கொண்டதாக இருக்கின்றது. சிலவற்றில் இடக்கை வாளும், வலக்கையில் குறுவாளும் உடைய தாகவும் உண்டு. மற்றும் வில்லேந்தி நிற்கும் வீரன் உடலை அம்பு ஊடுருவிச் சென்றுள்ள நிலையில் சிற்பம் வடிக்கப் பட்டுள்ளமையால், வீரன் பகைவரோடு போரிட்டு அப்போரிலே வீர மரணம் அடைந்தான் என்பது பெறப்படுகின்றது.

பலிஞ்சரஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த ஏரியின் கரையில் நான்காண்டுகளுக்கு முன்பு நடுகல் கூட்டமே ஒன்று இருந்தது. தற்சமயம் அவற்றுள் பல உடைக்கப்பட்டு தாருடன் கலந்து சல்லியாக பாதைக்கு பயன்படுத்தப்பட்டுவிட்டது. பாதைக்குப் பயன்பட்டதுபோக இருந்த இரண்டை எடுத்து வந்துள்ளோம்; அரும்பொருட் காட்சியகத்தில் அமைத்து பாதுகாக்க. அவற்றிலுள்ள செய்தி.

"கோவிசைய மயிந்திர பருமருக்கு யாண்
டைந்தாவது
காடந்தைகள் சேவகன் புதுப்பள்ளிகளோடு
பொருத
ஞான்று பட்டானெரு மெதிகாரி"

என்று உள்ளது.

இதிலுள்ள கல்வெட்டு வட்டெழுத்தில் வெட்டப்பட்டுள்ளது. மெய்யெழுத்துக் களுக்கு புள்ளி வைத்து எழுதப் பட்டுள்ளமை ஒரு புதுமைச்சிறப்பாம் மகேந்திரவர்மனின் ஐந்தாவது ஆட்சி யாண்டில் காடந்தைகள் என்ற ஓர் இனத் திற்கும் புதுப்பள்ளிகள் என்ற என்ற வோர் இனத்திற்கும் நடந்த போரில் இறந்து பட்ட காடந்தைகள்சேவகன் எருமெதிகாரி' என்ற வீரன். அவனுக்காக எடுக்கப்பட்டதே இந்நடுகல் ஆகும். ஆக மகேந்திரவர்மன் தகடுரை ஆண்ட வரலாறு அறிய முடிகின்றது. அத்துடன் காடந்தைகள், புதுப்பள்ளிகள் போன்ற கூட்டங்கள் இருந்தமையும், அவற்றிற்கிடையில் போர் பல நடந்தமையும் நவில்கின்றது இந்நடுகல் கோழிக் கூட்டம் யானைக் கூட்டத்தை வென்றது என்பதனையே புகாரிலேயே கோழி யானையை வென்றது என்று இலக்கியம் கூறுகிறது போலும்.

சந்தூரை அடுத்த வேடர் தட்டக்கல் அருகில் செல்லியம்மன் கோவிலைச் சார்ந்த ஓரிடத்தில் மண்ணில் புதைந்த நிலையில் 7 வட்டெழுத்து நடுகற்கள் உள்ளன. அவற்றில் ஒன்று மகேந்திர வர்மன் ஏழாவது ஆட்சியாண்டைச் சார்ந்த வீர

நடுகல். மற்றவைகள் கட்டிளுண பருமரு டைய 15, 25, 40 45, 50 முதலிய ஆட்சி ஆண்டை குறிப்பிடும். நடுகற்களாகும்.

மேலும் சந்தூரிலிருந்து மேற்கே 1 கி. மீ. தூரத்தில் இற்கொண்டு புகுதல் அமைப்பில் உள்ள தமிழ் கல்வெட்டுடன் கூடிய சோழர் கால நடுகல் ஒன்று உள்ளது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்ருவது விஜய இராஜேந்திர மண்டலத்து தகடுர் நாட்டு எயிலா முயை வகுனத்து ஞட்டு காமுண்ட நான வீர இராஜேந்திர எயில் நாட ராஜன் அடியான ஈ முச் சான்ருன் எயில் நாட்டுக் கா முண்டன் கலிஞ் சிறை புக்த காணிக்கும் பூமிக்துமாக பட்டான்." என்று உள்ளது.

இரண்டாம் இராஜேந்திரனுடைய மூன்ரும் ஆட்சியாண்டில், தகடுர் நாட்டு வீர இராசேந்திர எயில் நாட்டு ராசன் அடியான் எயிலமுகை வகுனத்து நாட்டு காமுண்டனை ஈமுச் சான்ருன் என்பவன் எயில் நாட்டு காமுண்டனுடன் (கவுண்ட னுடன்) பூமிக்காகப் போரிட்டு சிறை சென்று இறந்தான் என்பது தெரிகின்றது.

வெட்சி நிறை கவர்தல், அது மீட்டல் கரந்தையாம். என்ற புறப்பொருள் இலக் கணத்திற்கேற்ப தகடூர் மாவட்டத்தில் நிறை மீட்டு பட்டவர்களுக்காக ஆங்காங்கு நடுகற்கள் பல எடுக்கப்பட்டுள்ளன. கொளகத்தூரில், மாந்தி பருமர் காலத்தி லும், இச் செய்தியால் பிற்கால சோழர் ஆட்சி தகடுர் மாவட்டத்தில் பரந்திருந்தது என்பது தெரிகின்றது. அத்துடன் தகடுர் பெருநாட்டின் கண் பெருமுகை எயில் நாடு போன்ற சிறுசிறு நாடுகள் பல உள்ளடங்கி இருந்தன என்பதற்கு சான்ருக அமைகின் றது இச்சாசனம்.

தன்னுடைய அரசன் போரிலே வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நவகண்டம் கொடுத்த வீரர்களுக்கும் நடுகற்கல் நாட்ட பட்டுள்ளது. நவம் என்ருல் ஒன்பது. கண்டம் என்ருல் துண்டு கை, கால், கண், காது, போன்று உடலை ஒன்பது துண்டங்களாக வெட்டி இறுதியில் தன் தலையை வெட்டி துர்கைக்கு படைத்த வீர தியாகிக்காக நட்ட சின்னமே இதுவாம். இது போன்ற வைகள் பெண்ணேசுவர மடத்தில் பெரிதும் காணலாம். கொற்றவைக்குத் தலையறிந்து கொடுத்த வீரர் குறித்து பரணியிலும் சிலப்பிலும் பாங்குடன் காணலாம்.

மேலும் தன்னரசன் போரில் தலையாய வெற்றி வாகை சூட வேண்டும் என்ற உறுதியைக் காட்டும் பொருட்டு தன் தலை யை வெட்டி தன்னரசனுக்கு காணிக்கை யாக அளிக்கின்ருன், அழகிய மீசையுடன் அமைந்த ஒரு மென் சிரிப்பு வீரன். அதைக் கூடையில் வாங்கி கொண்டு செல்கின்ருன் மற்ருெர் குறுநகை புரியும் குதிரை வீரன். இச் செய்தி மிகைபடக் கூறும் புகைப்பட மல்ல வன்மையை விளக்கும் உண்மைத் தோற்றம் அதற்கு அரும்பொருட் யகத்தில் ஆதாரம் உண்டு. அது தான் ஒரு நடுகல். ஆம், நவ கண்டம் கொடுக்கும் முறைகளில் இதுவும் வகை என்ருலும், இது வரை தமிழகத்தில் காணுத ஒரு புதுமுறை அமைப்பு எனலாம். இது போன்ற நடுகற் கள் குந்தாணியில் பலவாக உள்ளன.

படுத்தான் கொட்டாயில் கட்டிளுண பருமர் காலத்திலும், கல் நாட்டப்பட்டமைக்கு காட்டுகள் இரண்டாக உள்ளன.

களிறு எரிந்து பெயர்தல் காளைக்கு கடனே என்று காளையின் கடமையை சுட்டிக் காட்டுகின்ருள் புறநானூறு மறமகள் ஒருத்தி. களிறென்ன? சடும் புலியுடன் அடும் போர் புரிந்து, அதனைக் கொன்று தானும் மாண்ட மறவனுக்கும் நினைவுச் சின்னங்கள் பலவுண்டு. அதுதான் 'புலி குத்திப்பட்டான் கற்கள்' அவனே ஆநிரைகளை மேய்த்த அழகிய

வாலிபன். வந்த புலியின் வாயில் வாள் பாய்ச்சி அவன் போரிடுகையில், வேட்டை நாய்களும் புலியை கடித்து தன் நாயகனுக்கு நன்றிக்கடன் ஆற்றுகின்ற மையும் வடிக்கப் பட்டுள்ளது. அக்கல் பிக்கன அள்ளியில் கண்டு எடுக்கப்பட்டது.

பாய்கின்ற காட்டுப் பன்றியுடன் போரிட்டு அதனை அழித்து தானும் இறந்து பட்ட வீரனுக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. அவைதான் 'பன்றி குத்தி பட்டான் கற்கள்'. அவ்விதம் அழகிய தோற்றத்து டன் ஒரு நடுகல் இட்டன அள்ளியில் இன்று வழிபாட்டிலுள்ளது. அதுமட்டுமல்ல பாம்புடன் சண்டையிட்டு மாண்ட மறவனுக்கும் நினைவுச் சின்னம். பாறையிலே செதுக்கிய பழமையான சிற்ப அமைதி தொட்டார்த்தனஅள்ளி மண்டிலே கிடக்கின்றது. காளையால் முட்டப்பட்டு இறந்த வீரனுக்கும் கல் நாட்டப்பட்டு, இன்று பாட்டப்பன் கோவில் என்று பழக்கத்திலே உள்ளமை கடத்தூரிலே காணலாம்.

பூசாரியும் வாளேந்திபோருக்கு சென்றுள் ளான் என்பது புறப்பகுதிக்கொரு சிறப்புச் செய்தியாக போச்சம்பள்ளியிலே கிடைத் துள்ளது ஒரு கல். அந்நடுகல் வீரன் வலக் கையில் வாளும், இடக் கையில் கோவில் மணியும் கொண்டுள்ளான் அருகில் கரகம் ஒன்றும் வடிக்கப் பட்டுள்ளது. மதப் போரில் போரிட்டு மாண்டுபட்ட பூசாரிக்கும் நடுகல் நடப்பட் டது என்பதும் இதனால் பெறப்படுகிறது.

படையேந்திச் சென்ற மறவனுக்கு மட்டுந்தான் நடுகல்லோ? கொடையேந்தி அறஞ்செய்த வள்ளலுக்கும் நடுகல் உண்டு. பாலவாடியில் கிடைத்த அந்த பழையான நடுகல் அரும் பொருட் காட்சியகத்தில் அணவரை வரவேற்கும் வகையில் கூப்பிய கைகொண்டு, அருகில் தன் அரசியுடன் அமைந்த கோவேந்தன் சிற்பமதை கொண் டமைக்கப்பட்டுள்ளது.

தன் கணவன் மாண்டவுடன் உடன் கட்டையேறி உயிர் நீத்த கற்புடைய பெண்களைப் காப்பியங்கள் பல பேசுகின்றன.

'காதல் கணவனொடு கனையெறி மூழ்கும்
மாதர் மெல்லியல் மலிபுரைத் தன்று'

என்று புறப்பொருள் வெண்பா கூறக் காணலாம்.

ஆம், கணவனை இழந்த மகளிர் கனை எரியில் புகுந்தமைக்காக கல்வெட்டுச் சான்று காணக்கிடக்கிறது. அது மாஸ்திக் கல், மாசதிக் கல், சதிக் கல் எனப்படும். இந் நடுகற்கள் தகடூர் மாவட்டத்திலும் அதையடுத்த கருநாடக மாநிலத்திலும் அதிகம் உண்டு. உடன் கட்டை ஏறுதலுக்குத் 'தோள் கொடுத்தல்' என்று கன்னடத்தில் கூறப்படுகிறது. தருமபுரியில் உள்ள காமாட்சியம்மன் தெருவிலுள்ள கோயிலொன்று 'தீபாஞ்சி அம்மன்' எனும் பெயரில் அழைக்கப் படுகின்றது. ஆக தீயில் மாய்ந்து உயிர் நீத்த ஒரு பெண்ணின் நினைவாக கல் நட்டு வழிபட்டு வருகின்றார்கள் என்பது பெறப் படுகின்றது. தகடூர் மாவட்டத்தில் 'குந்தாணி' என்னுமிடத்தில் இது போன்ற "சதிக் கற்கள்" அதிகம் கிடக்கின்றன.

வடக்கிருந்து உயிர் நீத்த கோப்பெரும் சோழனுக்கு நடுகல் நட்டு போற்றியதைப் பொத்தியார் பாடிய புறநானூற்று பாடல் தெரிவிக்கின்றது. அதுபோன்று உண்ணா நோன்பு இருந்து உயிர் துறந்த சமணத் துறவிக்கும் நடுகல் நாட்டப்பட்டுள்ளது. பாலக்கோட்டிலிருந்து தருமபுரி செல்லும் பாதையிலுள்ள கர்த்தாரப்பட்டியில் உள்ள ஒரு நடுகல் குண்டூர் அப்பன் (முனியப்பன்)

கோயில் என்ற பெயரில் வழிபாடு செய்யப் பட்டுவருகின்றது. அந்நடுகல்லின் பின்புறம் தமிழ் கல்வெட்டு உள்ளது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ இராஜ கேசரி உடையாரான ஸ்ரீ இராஜாதி ராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தேழாவது நிகரிலி சோழ மண்டலத்து தகடூர் நாட்டு, கங்க நாட்டு பணை குளத்துப் பள்ளியைச் சார்ந்த விஸ்வ காமுண்டன் மகன் புலிய சாமூண்டன் உண்ணு நோன்பு நோற்றுபட்டு நட்டகல்" என்பது கல்வெட்டுப் பகுதி. இந்நடுகல் வெட்டால் பணைகுளத்தில் சமணப் பள்ளி ஒன்று இருந்தது என்றும், அப்பள்ளியைச் சார்ந்த சமணத் துறவியாகிய விஸ்வ காமுண்டன் மகன் புலிய காமுண்டன் உண்ணு நோன்பு இருந்து பட்டமைக் காக கல் நாட்டப்பட்டது என்றும் தெரிகின்றது. மேலும் இதனால் சோழப் பேரரசனான இராஜாதி ராஜ னுடை இருபத்தேழாவது ஆட்சியாண்டில் நட்டக்கல் இது என்பதும், தகடூர் நாட்டின் உட்பிரிவாக கங்கநாடு என்ற பகுதி இருந்தது என்பதும், அக்காலத்து சமணர் செல்வாக்கு ஈண்டு சீரோங்கி இருந்தது என்பதும் அறியமுடிகின்றது. அதற்கு மேலும் சான்றாக தருமபுரி சந்தைக் கடைக்கு அருகில் இரு சமண உருவங்களுடன் ஒரு கல்லும், அதியமான் கோட்டையில்பைரவர் கோவிலுக்கு அருகில் பார்சுவதநாதர் சிலை யொன்றும் இன்றும் இருந்தமையாம்.

பண்டைய போர் ஆயுதங்களாக வாள், வேல், வில் மட்டுமல்ல தண்டும் வீரனுக்கு போரில் தாக்கும் ஆயுதமாக இருந்திருக் கின்றது என்பதற்கு கற்சான்று பசிங்கம் மண்டில் பார்க்கலாம்.

போச்சம்பள்ளி பேருந்து பாதைக்கருகில் துப்பாக்கி ஏந்திய வீரன் உருவில் ஒரு நடு கல்லைக் காணலாம். இதனால் வீரர்க்கு நடு கல் எடுக்கும் வழக்கம் அண்மைக் காலம் வரை இருந்திருக்கின்றது என்பது தெரிய வருகின்றது.

நடுகல் அமைப்பு :

போரில் உயிர்நீத்து வீர மரணம் அடைந்த வீரர் நடுகற்கள் மூன்று நிலைகளை உடையதாக உள்ளது. கீழ்ப்பகுதியில் போர் காட்சியும் நடுப்பகுதியில் போரில் பட்டு வீர சுவர்க்கம் புகும் வீரனைத் தேவமாதர் தாங்கிச் செல்லும் காட்சியும் மேல் பகுதி யில் அவ்வீரனது சமய நிலையை உணர்த்த சிவன் அல்லது விஷ்ணு சின்னம் வடிக்கப் பட்டுள்ளது.

நடுகற்களில் உருவம் வடிக்கப்பட்டமை முதன் முதலில் கோட்டு உருவங்களாகவும் பின்னர் சிறிது சிற்ப வடிவமாகவும் பின்னர் புடைச்சிற்பங்களாகவும் வடிக்கப் பட்டன. அவ்வாறமைந்த நடுகற்களை பண்டைய நடுகற்கள், இடைக் கால நடு கற்கள், பிற்கால நடுகற்கள் என மூவகை படுத்தலாம். இம்மாவட்டத்தைச் சார்ந்த இருளப்பட்டியை அடுத்த பாப்பம்பாடியில் கிடைத்த இரண்டு நடுகற்கள்தான் மிகவும் தொன்மையானது. இதை விட தொன்மை யான நடுகற்களும் இன்னும் ஈண்டு கிடைக்கக்கூடும் என்ற ஆய்வு ஆர்வமுடன் நடைபெற்று வருகின்றது.

குறிப்பு : இக்கட்டுரையின் மூன்றாம் பக்கத்தில் முதற்பகுதியிலுள்ள ஐந்தாவதுபத்தியில் "வெட்சி நிறைகவர் ... ... மாந்த பருமர் காலத்திலும்" வரை - இரண்டாம் பகுதியில் உள்ள மூன்றாம் பத்தியை சேர்த்து படிக்கவும்.

விலங்காமொழி விடுகாதழகிய பெருமாள்

புலவர் மா. கணேசன்

சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடைய மூவேந்தர்களுக்கு இணையாக முடியணியும் உரிமையும் அதற்கான புயவலிமையும் பெற்று இன்றைய தருமபுரிப் பகுதியைப் பண்டு ஆண்டவர் அதியமான்கள். அவர்களுள் கொடையால் புகழ் பெற்றவன் கடையெழு வள்ளல்களில் ஒருவனுன அதியமான் நெடுமான் அஞ்சி. அதியமான் மரபினருள் நாம் அறிந்து வைத்திருப்பது இந்த அஞ்சியையும் இவனது மகன் பொருட்டெழினியையும் தான். மேலும் சங்க இலக்கியங்களில் இவ்விருவரின் வரலாறுகளே மிகுதியும் காணக்கிடக்கின்றன. சங்க காலத்தில் தன்னுட்சி புரிந்த இவர்கள் பிற்காலத்தில் நுளம்பர், பல்லவர் சோழர் ஆகியோரின் ஆளுகையின் கீழ் வரலாயினர்.

கி. பி. 12-ம் நூற்றுண்டில் சோழநாட்டை ஆண்ட மூன்றும் குலோத்துங்க சோழனது ஆட்சிக்கு இன்றைய தருமபுரி உட்பட்டிருந்தபோது இப்பததியை ஆண்ட அதிப மன்னன் விடுகாதழகிய பெருமாள் என்பவன். இவன் பிற்கால அதியமான்களுள் தலைசிறந்தவனுவான்.

சோழர்கள் காலத்தில் இராஜராஜன் என்ற சிறப்புப் பெயரையும் அதியமான்கள் தங்கள் பெயருக்கு முன்னுல் வைத்துக் கொண்டனர். அவ்வாறே விடுகாதழகிய பெருமாளும் ராஜராஜன் என்று வைத்துக் கொண்டான். கல்வெட்டில் இவனது பெயர் "இராஜராஜ அதிகன் விலங்காமொழி விடுகாதழகிய பெருமாள்" என்று காணப் படுகிறது.

இவன் காலத்தில் கம்பைநல்லூர் என்று இன்றழைக்கப்படும் நாகையம்பள்ளி சிறப்புற்று விளங்கியது. அதியமான் நெடுமான் அஞ்சியின் மனைவியின் பெயர் நாகையார் என்பதாகும். அவள் புறநானூற்றில் "அஞ்சி அத்தை மகள் நாகையார்" என்று குறிக்கப்பெற்றுள்ளாள். அதியன் தன் மனைவியின் பேரில் கொண்ட அன்பால் அவளது பெயரில் இவ்வூரை நிறுவினன் போலும். நுளம்ப மன்னன் மகேந்திரன் தகடூரை ஆண்டபோது அவனது தேவியின் பெயரால் "மகாதேவி மங்கலம்" (மாதேமங்கலம்) என்ற ஊரை அதியமான் கோட்டைக்கு அருகில் தோற்றுவித்தான். பராந்தக சோழன் மனைவி செம்பியன் மாதேவியின் பெயரால் "செம்பியன் மாதேவி" என்ற ஊர் நாகபட்டினத்தின் அண்மையில் நிர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே நாகையம் பள்ளியும் உருவாகி இருக்கிறது. சங்க காலத்தில் 13-ம் நூற்றுண்டு வரை நாகையம்பள்ளி என்ற பெயரே இதற்கு வழங்கி வந்திருக்கிறது. 15-ம் நூற்றுண்டிற்குப்பின் தான் கம்பைய நல்லூர், கம்பைநல்லூர் என்றெல்லாம் மாறலாயிற்று,

இக்கம்பைநல்லூர் கோட்டைக்கோயிலில் விடுகாதழகிய பெருமாளின் இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை விடுகாதழகிய பெருமாளைப்பற்றி அறிந்து கொள்ள உதவியாய் இருக்கின்றன. கல்வெட்டுகள் இரண்டும் மூன்றும் குலோத்துங்கனின் 22 வது ஆட்சியாண்டில் வெட்டப்பட்டவை

இவன் தன் முன்னேன் அதியனைப் போலவே கொடைத்திறன் உடையவனுக இருந்தான். புலவர்பெருமக்கள் இவனைக்க 'காரணைய கையான்' என்று போற்றிப் புகழ்ந்தனர். வற்றாத காவிரியும், பாலாறும் தென்பெண்ணையும் ஆகிய மூன்றுறுகள்

பாய்ந்து இவன் நாட்டை வளப்படுத்தின கம்பைநல்லூர் கோட்டைக் கோயில் கருவறைத் தென் சுவரில் காணப்படும் கல்வெட்டுச் செய்தி :

ஸ ஸ

1. வ் த் | ஸ்ரீ திரிபுவனச் சக்கர வத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௨௰௨ ஆவது ௨ உரை மருவுங் குலோத்துங்க சோழ தேவக்கு ரைத்த யாண்டிருபதின் மேலிரண்டிற் பெண்ணைக் கரை மருவுஞ் சிறுகோட்டை குளன் நாகை நாயகற்களித்துக்கற்றளி தன்பேரி.

2. ட்ட காரணைய கையான் திரைமருவுஞ் தடங்கமலத் தகடை மன்னன் செழும்பாலி பெண்ணை பொன்னித் திருநதி மூன்றுடைய விரைமருவுந் தார்மார்வன் ராஜராஜ வதிகன் விலங்கா மொழி விடுகா தழகிய பெருமாளேய்.

கல்வெட்டு எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளது. இதே போன்று வடவார்க்காடு மாவட்டம் திருமலையில் உள்ள 'குந்தவை ஜினாலயம் வெளிச் சுவரில் வெட்டப் பட்டுள்ள கல்வெட்டும் செய்யுள் வடிவிலேயே அமைந் துள்ளது. அங்கு சமஸ்கிருதக் கல் வெட்டு ஒன்றும் உள்ளது. அதுவும் செய்யுள் வடிவிலேயே உள்ளது.

கல்வெட்டு :

''வஞ்சியர் குலபதி யெழினி
வகுத்த வியக்க ரியக்கி யரோடு
எஞ்சிய வழிவு திருத்தி
யெண் குணவிறை திருமலை
வைத்தான்
அஞ்சிதன் வழிவரு மவன்
வழிமுதலி கலி அதிகனவன்
விஞ்சையர் தலைபுனை தகைமையர்
காவலன்
விடுகாதழகிய பெருமாளேய்.

இவற்றைக் கண்ணுறும்பொழுது இவன் சிறந்த புலமையுள்ளவனாகவும் இருந்திருக் கிறான் என்று எண்ணத் தோன்றுகிறது

இவன் சிறந்த சிவபக்தன். கம்பை நல்லூர் கோட்டைக் கோயிலில் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை மாறி மாறி வெட்டுவித்துள்ளான்.

ந	சி	ய	ம	வா
ய	ம	வா	ந	சி
வா	ந	சி	ய	ம
சி	ய	ம	வா	ந
ம	வா	ந	சி	ய

வா	ம	ய	ந	சி
ந	சி	வா	ம	ய
ம	ய	ந	சி	வா
சி	வா	ம	ய	ந
ய	ந	சி	வா	ம

(இம்முறையில் எழுதப்பட்ட ஓலைச் சுவடி களும் தருமபுரிப் பகுதியில் தற்போது கிடைத்துள்ளன.) 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை மாறிமாறி வெட்டுவித்தது போலவே தன்னுடைய விலங்கா மொழி என்ற பெயரையும் மாறி மாறி வெட்டுவித்துள்ளான்.

[மொ]	லங்	ழி	வி	கா
வி	கா	மொ	லங்	ழி
லங்	ழி	வி	கா	மொ
கா	மொ	லங்	ழி	வி
ழி	வி	கா	மொ	லங்

இவன் தென்பெண்ணையாற்றங் கரையில் சிறுக் கோட்டை என்னுமிடத்தில் தன் பெயரில் கற்றளி ஒன்று எடுப்பித்து அதற்கு தானமளித்ததோடு கம்பைநல்லூர் தேசியனார் கோயிலுக்கும் திருப்பணி செய்துள்ளான். இவன் சைவ சமயத்தைச் சார்ந்திருந்தாலும் பிற சமயத்தினரை

மதிக்காமல் இல்லை. திருமலையில் உள்ள சமண ஆலயத்தை புதுப்பித்தது இவனது சமயப் பொறையையே காட்டுகிறது.

வடவார்க்காடு மாவட்டம் செங்கத்தில் மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்திய இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் சம்புவராயன் முதலாய இரண்டு சிற்றரசர்களிடம் குலோத்துங்கன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒன்று.

'இராஜராஜ அதியன் மகன் பிராந்த பெருமாள் என்பவனிடம் நீங்கள் போருக்குச் செல்வதென்றாலோ அல்லது கூட்டு வைத்துக் கொள்வதென்றாலோ என் ஒப்புதலைப் பெற்றே செய்யவேண்டும். நீங்கள் எனது பகைவர்களிடம் உறவு வைத்துக்கொள்ளக் கூடாது. என்னைப் பாதிக்கும் வகையில் எந்த உடன்படிக்கை யையும் எனது விரோதிகளிடத்தில் வைத்துக்கொள்ளக் கூடாது' என்பதே அதில் காணப்படும் செய்தியாகும்.

இரண்டாவது கல்வெட்டு விடுகாதழகிய பெருமாள் அதே சம்புவராயன் முதலியோருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. 'உங்கள் பகைவர் என் பகைவர்; என் பகைவர் உங்கள் பகைவர் நீங்கள் எந்த அளவிற்கு குலோத்துங்கனிடத்தில் செய்துகொண்ட ஒப்பந்தப்படி நடந்துகொள்கிறீர்களோ அந்த அளவிற்கு உங்களிடம் நான் விசுவாச முள்ளவனுகவே இருப்பேன்.'

இக் கல்வெட்டால் தருமபுரிப் பகுதியை (12-ஆம் நூற்றுண்டில்) ஒரே சமயத்தில் விடுகாதழகிய பெருமாள், பிராந்த பெருமாள் என்ற இரண்டு அதியமான்கள் ஆட்சி புரிந்திருக்கின்றுர்கள் என்பதும் அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி பகைமை கொண்டிருந்தனர் என்பதும் உறுதியாகிறது. விடுகாதழகிய பெருமாள் சோழனின் ஆட்சிகுட்பட்டவனுக இருந்தாலும் முழு உரிமையுடையவனுகவும் சோழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவனுகவும் விளங்கினுன்.

இவன் தன் ஆட்சிக் காலத்தில் அதியமான் கோட்டையிலிருந்து தொண்டை நாட்டிலுள்ள "நாவற் தாவளம்" என்ற நகருக்குப் பெருவழி அமைத்து அதற்கு "அதியமான் பெருவழி" என்று பெயரிட்டான். வழியில் காதத்திற்கு ஒன்றுக மைல் கற்களும் நட்டு வைத்தான், அவ்வாறு அவன் நட்டு வைத்த மைல் கற்கள் இரண்டு தற்போது தருமபுரிக்கு அண்மையில் கிடைத்துள்ளன. ஒரு காதம் என்பது பத்து மைல்கள் என்பது நம்மவரின் கருத்து. அக் கருத்தை மாற்றி ஒரு காதம் 4½ மைல்கள் தான் என்று அறுதியிட்டுக் கூறுகிறது இம்மைல் கற்கள். கிடைத்துள்ள இரண்டு மைல் கற்களும் 29-வது காதத்திற்கும் 27-வது காதத்திற்கும் உரியவை. தென்னிந்தியாவில் கிடைத்துள்ள மைல் கற்கள் தொன்மையானவை இவை தாம். இக்கற்களில் கல்லாதவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் பத்து காதத்தை குறிக்கபெரிய துளையும் ஒருகாதத்தை குறிக்க சிறிய துளையும் வெட்டுவித்துள்ளான்

இன்றைய அரூர் 'விடுகாதழகியநல்லூர்' என்ற பெயரில் இவன் காலத்தில் அழைக்கப்பெற்றது. இச்செய்தி தருமபுரி அரிஹரநாத சுவாமி கோவில் கல்வெட்டிலும் அரூர் காளியம்மன் சிலையின் பின் பக்கம் உள்ள கல்வெட்டிலும் காணப்படுகிறது. அரூரின் பழைய பெயர் அரியூர் என்பதே ஆகும். "விடுகாதழகிய நல்லுரரான அரியூர்" என்று அரூர் கல்வெட்டு பகர்கின்றது.

உதவிய நூல்கள்: 1. தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள். (முதற் தொகுதி) 2. தருமபுரி மாவட்டக் கையேடு, அரசினர் பதிப்பு 3. தமிழ் சாசன மஞ்சரி

வரலாற்றுப் பேரவை வளர்க, வாழ்க.

புலவர் கா. சி. கிருட்டிணன், எம். ஏ., பி. டி.,
செயலர், தருமபுரித் தமிழ்ச் சங்கம்

வரலாறு !

நாட்டை, நாடாண்டவர்களை, நாடாள்பவர்களை மட்டும் விளக்கக் கூடியதாக எண்ணுவதில்லை !

மனித இனத்தை, உலகில் காணும் உயிர் ராசிகளை, உயிரற்றவைகளைப் பற்றியும் அளிப்பதும் வரலாறு தான் !

பிறந்த மனிதன் வளர்ந்து கொண்டிருக்கும் நிலைகளையும், மனிதன் தோன்றி வளர்ந்த நிலைகளையும் தனித்து ஆய்ந்து அதற்கானச் சான்றுகளைக் காட்டி வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்ற அறிஞர்கள் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கல்லுக்கும் காலத்தை உறுதிப்படுத்திக் கூறும் காலமிது ! புல்லுக்கும் வரலாற்று பகுப்பு படைக்கும் காலமிது ! வரலாற்றுச் சுவடுகளாக நாம் படித்தறிகின்றவைகட்கு அடிப்படைச் சான்றுகள் பல உண்டு !

இலக்கியங்கள், தொல் பொருள் ஆய்வின் முடிவுகள், கல்வெட்டுக்கள், சாசனங்கள் போன்றவைகள் சில !

இவற்றின் பயனும் பயனுள்ள பல செய்திகள் அறிய முடிகின்றன. அறிந்தவைகள் வியப்பளிப்பன ; புதிய வரலாற்று உண்மைகளாக மிளிர்வனவாகும்.

அறிவியல் முன்னேற்றத்தின் விளைவாக ஆய்வுத் துறையில் மலர்ந்துள்ள புதுமைகளும் பலவாகும் !

தகடூரில் பூத்துள்ள வரலாற்றுப் பேரவை தொடங்கியுள்ள செயல் மேற்கண்ட புதுமைகள் செய்வதற்குரிய ஆர்வமும் ஊக்கமும் கொண்ட மனப்போக்குடையோரின் கூட்டு முயற்சியால் உருவாக்கப் பெற்றது என்பதை உணர்வேன். ஆனால் அப்பேரவையினரின் மன வேகத்திற்கு ஏற்றவாறு செயல்புரிய ஒத்துழைப்பும் பொருள் வசதியும் உண்டா? இல்லை என்பதையும் நான் அறிவேன்.

சில ஆண்டுகட்கு முன் தோற்றுவிக்கப் பெற்ற இப்பேரவை, பதிவு பெற்றதொரு அமைப்பாக ஓராண்டுக்கு முன்னரே அமைந்தது ! தோன்றிய காலத்திலிருந்து பதிவு பெற்ற அமைப்பாக அமைகின்ற காலமட்டில் அக்குழுவினர் மனந்தளரா முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இயன்றமட்டில் வரலாற்றுத் தொடர்பான செய்திகளை, கல்வெட்டுக்களை, சிற்பங்களை சேகரித்து புதிய செய்திகளாக அவ்வப்பொழுது அறிவித்துக் கொண்டிருந்ததே பாராட்டத் தக்கதாகும்.

அகழ்வாராய்ச்சியின் வழியாகப் பலப் பொருட்களைக் கண்டறிந்து அவைகளைக் கொண்டு அவ்விடத்தின் மக்கள் வாழ்நிலை அவர்கள் பழக்க வழக்கம் போன்றவற்றை அறிஞர்கள் முடிவு செய்கின்றனர். அங்கு கிடைக்கும் பொருள்களில் காணும் சிற்பங்கள், தனிசிலைகள், அணிமணிகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறுவதைப் போலவே குகைச் சிற்பங்களும் பயன் பெறுவனவே !

சித்தியர் பண்டையப் பெருமைகளைப் இவ்வாறு ஆய்ந்து வெளியிட்ட பெருமை யாரோஸ்லாவ் வி. டேமான்ஸ்கி என்ற

சோவியத் வரலாற்று அறிஞர்குண்டு! இவரைப் போலவே பெயர் பெற்றவர் போரிஸ் பி. பியட் ரோவஸ்கி என்ற புதை பொருள் ஆய்வாளர் ஆவார்.

1971-ஆம் ஆண்டில் சித்தியாவின் அரசுக்கல்லரை ஒன்றினை டொல்ஸ்டயா மொகிலாவில் சோதனையிட்டனர். அவ்வாறு சோதனையிட்டதில் பெண்ணின் எலும்புக் கூடும் அவளணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் கிடைக்கப் பெற்றனர். அவைகளில் ஒன்று: 30 செ. மீ. விட்ட முடைய மார்பணியாகும். அவ்வணியைக் கொண்டு அங்கு வாழ்ந்த மக்களின் உடை வணிகம், பயன்படுத்திய மிருகங்கள் இவைகளை அறியமுடிகின்றதாம். அவ் மார்பணியில் அமைக்கப்பட்டுள்ள, செதுக் கப்பட்டுள்ள உருவங்கள் காட்சிப் பொருளா கவும் உண்மைக்கு சாட்சிப் பொருளாகவும் அமைந்துள்ளனவாம். இதனை யுக்ரேனிய புதைபொருள் ஆய்வாளர் இவான் அர்டெ மென்கோ தெளிவாக விளக்கி காட்டி யுள்ளார்.

பாசிரிக் என்ற இடத்தில் புதை குழியில் பக்குவப்படுத்தப்பட்டு புதைக்கப்பட்டி ருந்தது. கண்டறியப்பட்டதாம். அவ் உடலில் பச்சை குத்தப்பட்டிருந்தது கண்டயறிப்பட்டது மட்டுமல்ல; இறப்ப தற்குமுன் உடல் முழுதும் அவ்வாறு பச்சை குத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் கண்டறியப்பட்டது.

'புதிய பழக்கம்' நடைமுறையிலிருந்தது அறியமுடிகிறது.

வடமேற்கு ஆப்கானிஸ்தானத்தில் 'பால்க்' கிற்குப் பக்கம் பாமியன் மலைப் பகுதியில் 35 மீட்டர் உயரமுள்ள இரு புத்தர் சிலைகளைக் காணமுடிகிறது. அவைகள் அமைந்த நிலையை கிராம மக்கள் புனைந்துரை கதைகளாகமாற்றி வழங்குவ தாகவும்; அக் கதையினை பின்னணியாகக் கொண்டு கவிதைகள், கதைகள் மிளிர்வதா கவும் [சபிஹோலா சா.்.பா என்ற அறிஞர் தம் இஸ்லாமிய மேதை அல்-பிருனியைப் பற்றிய ஆய்வில் விளக்குகின்றார்.

மேலுள்ளவைகள் சிலர் முயற்சியால் உலகப் பயன் விளைவதற்குரிய எடுத்துக் காட்டுக்கள். உண்மை நிலையை உணர வைக்கும் உழைப்பாளர்களின் வெளியீடு கள். எனவே,

தகடூரில் அமைக்கப் பெற்றிருக்கும் 'வரலாற்றுப் பேரவையினரின்' கலைக் கூடம் நமக்கென்ன அறிவிக்கின்றன என்று அறிய வேண்டாமா?

'தகடூர்' தருமபுரி மாவட்டம் கலைச் செல்வங்கள் வளர்ந்த பகுதியாக நீண்ட நெடுங்காலமாக அமைந்திருந்திருக்கிறது.

'தகடூர்' பல்வேறு அரச மரபினர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கால கட்டம்: அவரவர் காலங்களில் கலைத்துறை பிற துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங் கள்.

மேற்கண்டவைகட்கான ஆதாரங்கள் ஒரு சிலவற்றை மட்டுமே அவர்களால் கொண்டுவந்து கலைக் கூடத்தில் அமைத்துக் காட்டமுடிந்த நிலை. மேற் கொண்டு ஆய்ந்தறிந்தவைகளை அவர் கள் அமைத்துக்காட்டும் நிலைக்கு முயற்சி யுடையவராய் இருக்கின்றனர்.

வில்லியம் ஹவ்லாஸ் என்ற அமெரிக்க ஆய்வாளர் இரண்டு கோடி ஆண்டுகளாக உருவான மனித வளர்ச்சியைப் பற்றி ஆய்வு நடத்தி வரலாறு படைத்துள்ளார் மனித இனத் தோற்றத்தைப் பற்றி பல நூல்கள் எழுதி புகழ் பெற்ற லண்டன் பல்கலைக் கழக உயிரியல் துறை இயக்குநர் ஜான் நேப்பியர் ஆதி முன்னோரின் நீண்ட பயணத்தைக் குறிப்பிட்டு மூளையின்

வளர்ச்சியே மனிதனை உயர்நெறியாளனாக மாற்றியுள்ளது என்பதை நிறுவியுள்ளார்!

மேற் கண்டவைகளைக் கொண்டு கி. மு. 35000-இல் தற்கால மனித இனம் தோன்றியது என்ற எண்ணத்தை மாற்றி 60,000 ஆண்டுகட்கு முன்பு மனித இனம் தோன்றியிருக்கலாம் என்ற முடிவுக்கு அறிஞர்கள் வந்துள்ளனர். அவ்வாறு தோன்றிய மனித இனம் ஆசியாவிலும் இருக்கலாம் என்பதால் நம் தமிழகப் பகுதியில் அதற்கமைவான ஆதாரங்கள் கிடைக்கப் பெறுமா என்பதற்கு வரலாற்று பேரவையினர் தூண்டுதலாக அமையக் கூடிய மன திடத்துடன் ஆய்வு கொள்ளக் கூடியவராவரர். மிகையல்ல; அவர்தம் உணர்வின் வேக உண்மை!

பேரவையினர் மட்டுமே எண்ணினுல் முடியக்கூடிவவைகளா? அறிந்தோர், பண வளமுடையோர், அரசுத் துறையினர் தம் ஊக்கமும் உதவியும் அவர்கட்கு மிகமிக அவசியமானதாகும்.

பண்டைப் பொருள்களைத் தேடுவதும் விளக்கக் குறிப்பு எடுப்பதும் அவைகளை சேகரிப்பதும், காட்சி பொருளாய் அமைப்பதும் அவர்கள் பணியாகத் தொடர்ந்தால் கூட அவைகளைச் சீர்படச் செய்ய மேற்கண்ட உதவிகள் மிகமிக் அவசியம்!

இன்றைய நிலையில் தமிழகத்தை ஆண்ட பல்லவர்கள், தமிழக மூவேந்தர்கள், நவாபுகள், பிறர் காலங்களில் அமைந்திருந்த கலைச் செல்வங்களைக் கொண்டு பண்பாடு, நாகரீகம், மதம் இவற்றின் போக்கை தகடூர் மாவட்டம் எவ்வெவ்வாறு ஏற்று அமைந்திருந்தது என்று அறியமுடியும். கற்கால காலத்து விளக்கக் குறிப்புகளே கூட தகடூர் மண்ணில் கிடைக்கக் கூடியதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்நிலையில் இப் பேரவையினர் என்ன செய்யவேண்டும்?

1. தகடூர் மாவட்டத்தை பொறுத்த மட்டில் பண்டைய இன்றைய வரலாற்றினைத் தெளிவுபடுத்தும் சான்றுகளை முறைப்படுத்தி நூல் ஒன்றினை வெளிக் கொண்டுவர முயலவேண்டும்

2. தகடூர் மாவட்டத்தின் அமைப்பு உணர்ந்தவர்கள் என்பதால் பகுதி பகுதியாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அவ்வப்பொழுது அறிவனவற்றை சிறுசிறு தொகுப்புக்களாக முதலில் வெளியிடலாம். புகைப் படங்கள் எடுத்து கலைக்கூடத்தில் பார்வைக்கு வைத்து வரலாற்று ஆர்வங் கொண்டோர்க்கு மன எழுச்சி ஊட்டலாம்.

3. ஓலைச் சுவடிகள், செப்புப் பட்டயங்கள் தேடி கண்டறிவதுடன் அவைகள் தரும் புதுச் செய்திகளை வெளியிட வேண்டும்.

4. தொடக்கப் பணியாக இப்பேரவையினர் இதனைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். ஊக்கமுள்ள கல்லூரி உயர்நிலைப்பள்ளி மாணவர்களைத் தேர்ந்தெடுத்து இவ்வாய்வுத் துறையில் குறிப்பாக கல்வெட்டுக்களைத் படித்தறியும் முறையைப் பயிற்றுவித்தல் வேண்டும். மாணவர்கள் மட்டுமின்றி ஆர்வமுள்ளவர்களும் பங்கு கொள்ளக்கூடும். இவ்வாறு பயிற்சிபெறுவோர் மிகுந்தால் செய்திகள் சேகரிப்பு விரைவுபடும் என்று நம்புகிறேன். பலனுள்ள செயலாகவும் அமையும்.

தொடங்கியுள்ள பணி மிகவும் சிறந்த பணி — நல்ல பணி என்பதால் மேற்கண்டவைகளை நிறைவு செய்கின்ற காலகட்டத்தில் பேரவையினர் தம் பெயர்கள் தகடூர் வரலாற்றில் அழிக்கவியலாத நிலையுடையதாகும்! ஐயமில்லை.

இன்று பெற்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் பேருதவியினை வளர்த்துக் கொண்டு, பொதுமக்களின் பேராதரவினையும் பெற்றுக்கொண்டு வரலாற்றுப் பேரவை எதிர் காலத்தில் புது வரலாறு படைத்துக் காட்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு !

நம்பிக்கைதான் முன்னேற்றத்திற்கு அவசியமானது !

நம்பிக்கைதான் தளர்ச்சி ஏற்படாமல் காக்கவல்லது !

நம்பிக்கைதான் முயற்சிக்கு வலிவு அளிப்பது !

நம்பிக்கைதான் இன்று வரலாற்று பேரவையினர் பிறர் அறிகின்ற அளவு வளர்த்திருப்பது !

அதே நம்பிக்கையின் அடித்தளத்தின் மேல் தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை வளர்க, வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.

தந்தி : ஸ்ரீ தேவர் போன் : 23341 & 23342

ஸ்ரீ தேவர் எண்டர்பிரைசஸ்,

8/123, அவனாசி ரோட், கோயமுத்தூர்-641018.

எங்களிடம் "சரஸ்வதி" பிராண்ட் மாவரைக்கும் ஆட்டுக்கல் 1 லிட்டரிலிருந்து 20 லிட்டர் வரை நியாயமான விலைக்கு கிடைக்கும். "ஸ்ரீ தேவர்" மோட்டார் பொருத்தப் பட்டது. நீடித்த உழைப்பு, குறைந்த கரண்ட் சிலவு, உத்திரவாதத்துடன் தருகிறோம். விவரங்களுக்கு மேற்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்,

உரிமையாளர் : N. முத்துசாமி தேவர்

நட்ராசர்

நடசாலை, சோழர் காலம்

மாணிக்கம் அச்சகம், தர்மபுரி - 636701.